# கல்கி



KALKI, டிசம்பர் 27, 1953 அணா 4




# நாளுக்கு நாள் அதிக
# தெளிவான,
# எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனவிலுள்ள **கேடில்** இந்த
அற்புத வேலையைச் செய்யட்டும்



தினமும் ரெக்ஸோனு சோப்
உபயோகியுங்கள். இதன்
கேடில் கலந்த நுரை உங்
கள் சருமத்தை நாளுக்கு
நாள் அதிக மிருதுவாக
வும், தெளிவாகவும்
இருக்கச் செய்யும்.




## ரெக்ஸோனு
## கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும்
எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின்
ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 109-56 TM

ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது.

# கல்கி பொருளடக்கம்

மலர் 13 இதழ் 22 — 1953 டிசம்பர் 27 — விஜய ஆ மார்கழி 12


| | | | |
|---|---|---|---|
| தமிழ் மக்களின் உள்ளம் | (தலையங்கம்) | ... | 3 |
| அதிசயம்! ஆனால் உண்மை! | (கார்ட்டூன்) | ... | 4 |
| தங்கப் பதக்கம் பெற்ற சிங்கம்! | ... | ... | 5 |
| புகையும் ஜ்வாலையும் | ... | ... | 6 |
| நல்ல பெயர் கிடைக்கும்! | ... | ... | 6 |
| திரு. வி. க. மணிமண்டப கால்கோள் விழா | ... | ... | 7 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 9 |
| சலனம் | சரோஜா ஸ்ரீநிவாசன் | ... | 19 |
| உதய ராகம்! | ரகு | ... | 23 |
| அரசகுமாரி அமிர்தா (பாப்பா மலர்) | குண்டுமணி | ... | 27 |
| பணம் இருக்கிறதா? | வெங்கு | ... | 30 |
| கதி வேறில்லை! | சாலிவாஹனன் | ... | 31 |
| நாமும் உழைக்கிறோம்! | சபரி | ... | 32 |
| இருவர் விருப்பம் | ஜயலக்ஷ்மி | ... | 35 |
| வீரமணியின் விவாகம் | பூவை | ... | 43 |
| சங்கீத நீதிபதி | எம். எஸ். ராமசாமி | ... | 48 |
| மனோரமா | ரமண்லால் வசந்தலால் தேசாய்-ரா.வி. | ... | 51 |
| அணிகலன் | எம். கே. சங்கரன் | ... | 59 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... | 64 |
| வட்ட மேஜை | ... | ... | 67 |
| அவள் தியாகம் | புஷ்யன் | ... | 70 |
| யோகாசன சிகிச்சை | வி. என். குமாரசாமி | ... | 79 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.




# *இதோ ஓர் நற்செய்தி!

எமது ஆதரவாளர்கள் அனைவருக்கும் நாங்கள் குதூகலத்துடன் தெரிவித்துக்கொள்வது யாதெனில்

# ஜாஸ்மின்
# ரேயான் ஸில்க்குகள்

இப்பொழுது முக்கியமான ஜவுளி வியாபாரிகளிடம் கிடைக்கும் என்பதே!

●

## பொங்கல் பண்டிகை

நெருங்கிக் கொண்டிருக்கிறது

கண்ணைக் கவருவதும், நீடித்துழைக்க வல்லதுமான ஜாஸ்மின் ரேயான் ஸில்க்குகளினால் உங்களை நன்கு அலங்கரித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு மிகவும் பிடித்தமான துணிமணிகளை முன்னதாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

★ ஒருமுறை நீங்கள் ஜாஸ்மின் ரேயான் ஸில்க்குகளை வாங்கினால் எப்பொழுதும் அதையே கேட்பீர்கள்.

●

தயாரிப்பாளர்கள்:

## ஜாஸ்மின் மில்ஸ் லிமிடெட்

பம்பாய் - 16

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 22

# தமிழ் மக்களின் உள்ளம்

சென்னைமாநகரில் உள்ள தமிழ் முஸ்லிம் சங்கத்தார் அடிக்கடி சில முக்கியமான நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள்.

சென்ற ஆண்டில் சென்னை நகரின் வருங்காலத்தைப் பற்றி ஐயப்பாடு எழுந்திருந்தபோது, மேற்படி சங்கத்தார் கடற்கரையில் ஒரு மாபெருங் கூட்டம் கூட்டினார்கள். அதில் பல கட்சிகளையும் சேர்ந்த பிரமுகர்களை அழைத்துப் பேசச் செய்து சென்னை நகரம் தமிழ் நாட்டைச் சேர்ந்ததே என்ற கோரிக்கையை வற்புறுத்தினார்கள். அதற்காகப் பெரும் போராட்டம் நடத்துவதற்குத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்ற நோக்கத்துடனேதான் அந்த மாபெருங் கூட்டத்தை நடத்தினார்கள்.

அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது. பொதுஜனப் போராட்டத்துக்கு அவசியம் நேராமலே நிறைவேறி விட்டது. நடத்த வேண்டிய போராட்டத்தை யெல்லாம் ஒரு மனிதரே அறிவுப் போராட்டமாக நடத்தித் தமிழர் கோரிக்கைக்கு வெற்றி தந்துவிட்டார்.

இந்த வருஷத்தில் மேற்படி தமிழ் முஸ்லிம் சங்கத்தார் நபிகள் நாயகத்தின் ஜன்மதின விழாவை யொட்டிச் சென்னை ஹைகோர்ட் கடற்கரையில் மற்றொரு பெருங் கூட்டம் கூட்டினார்கள்.

இதற்காக அவர்கள் மிகப் பிரயாசை எடுத்துக் கொண்டார்கள். பல கட்சித் தலைவர்களையும் ஒரே மேடைக்குக் கொண்டுவரப் பிரயத்தனப் பட்டார்கள். முக்கியமாக, ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியாரையும் ஸ்ரீ ராமசாமிப் பெரியாரையும் ஒரு பொது மேடையில் கொண்டு வருவதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி அபாரமானது. கடைசியில், வெற்றியும் அடைந்தார்கள்.

பழைய நண்பர்களான ராஜாஜியும் ராமசாமியாரும் பொது மேடையில் சந்தித்துப் பதினாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் கை குலுக்கினார்கள்; அளவளாவிப் பேசினார்கள்; ஒருவரை யொருவர் பாராட்டினார்கள்.

பெரியார் நாயக்கர் இப் பொதுக் கூட்டத்தில் ராஜாஜி அவர்களுக்குப் 'பெரியார் ஆச்சாரியார்' என்ற பட்டத்தையும் சூட்டினார்.

இரு பெரியார்களும் இவ்விதம் ஒரே மேடையில் சந்தித்து அளவளாவிப் பாராட்டிக் கொண்ட காட்சியைக் கண்டு அம்மாபெருங் கூட்டத்தில் கூடியிருந்த பொது மக்கள், சூரியனையும் சந்திரனையும் ஒரே சமயத்தில் வானத்தில் கண்ட சமுத்திரம்போல் ஆரவாரித்தார்கள். பலவிதங்களில் தங்கள் மகிழ்ச்சியைப் புலப்படுத்திக் கொண்டார்கள்.

* * * *

இரண்டு தலைவர்களும் தனித்தனியே பெரும் ஜனக் கூட்டத்தைச் சேர்க்கக் கூடியவர்கள்தான். இரண்டு பேரும் சேர்ந்து தோன்றுகிறார்கள் என்றால், கூட்டம் மேலும் அதிகமாகச் சேர்வதில் வியப்பு ஒன்றுமில்லை.

"உங்களைப் பார்ப்பதற்குத்தான் இவ்வளவு பெரிய ஜனக்கூட்டம் கூடியிருக்கிறது!" என்றார் பெரியார் நாயக்கர்.

"இல்லை; நம் இருவரையும் சேர்ந்து பார்ப்பதற்காகவே இவ்வளவு பெரிய கூட்டம்!" என்றார் பெரியார் ஆச்சாரியார்.

ராஜாஜி நமது சொற்பொழிவின் போதும் இதே கருத்தை வற்புறுத்தினார். "வேறு பேச்சு எதற்காக? நாங்கள் இருவரும் சேர்ந்து இம்மேடையில் உட்கார்ந்திருப்பதே மிகப் பெரிய பிரசங்கத்துக்குச் சமமானது" என்றார்.

ஸ்ரீ நாயக்கரோ, "ஆச்சாரியார் இக்கூட்டத்துக்கு வரப் போகிறார் என்று தெரிந்ததும், எனக்கு உடம்பு சரியா யில்லாவிட்டாலும் இக்கூட்டத்துக்கு வந்தே தீருவது என்று வந்தேன். வைத்தியர்களின் யோசனையைப் புறக்கணித்து விட்டு வந்தேன். நாங்கள் இருவரும் சேர்ந்து இம் மேடையில் தோன்றுவது மனிதத் தன்மைக்கு அறிகுறி. அவ்வளவுதான்!" என்று கூறினார்.

# அதிசயம்! ஆனால் உண்மை!




**இருபது வருஷங்களுக்குப் பிறகு பழைய நண்பர்களான ராஜாஜியும், ஈ. வே. ரா. வும் ஒரே மேடையில் தோன்றிக் கை குலுக்கி மகிழ்ந்தார்கள்.**

---

"நாங்கள் இருவரும் ஒரு மேடையில் தோன்றியதற்கு அரசியல் முக்கியத்துவம் எதுவும் கற்பிக்க வேண்டாம்!" என்று ஈரோட்டுப் பெரியார் மேலும் எச்சரித்தார்.

ரொம்ப சரி; ராஜாஜியும் நாயக்கரும் ஒரே மேடையில் தோன்றியதற்கு அரசியல் முக்கியத்துவம் எதுவும் கொடுக்க வேண்டியதில்லைதான். பொது ஜனங்கள் அத்தகைய தவறு எதுவும் செய்யவும் மாட்டார்கள்.

ராஜாஜி ஸ்ரீ நாயக்கரின் திராவிடக் கழகத்தில் சேர்ந்து விடுவார் என்றோ, ஸ்ரீ நாயக்கர் திரும்பவும் காங்கிரஸில் சேர்ந்து விடுவார் என்றோ, யாரும் எதிர்பார்க்கப் போவதில்லை.

பெரியார் நாயக்கர் "இது மனிதத்தன்மைக்கு அறிகுறி" என்று கூறியதும் முற்றிலும் உண்மை.

ஒரு சிலர் எவ்வளவு மிருகத்தனமாகப் பேசினாலும், எழுதினாலும், நடந்து கொண்டாலும், தமிழ் மக்களில் மிகப் பெரும்பாலோர் மனிதத் தன்மையுடனேதான் இருக்கிறார்கள். சமூகத் தலைவர்களிடமும் அரசியல் பிரமுகர்களிடமும் அவர்கள் மனிதத்தன்மையை எதிர்பார்க்கிறார்கள்.

இதில் யாதொரு சந்தேகம் இருக்க இடமில்லை. இதை நூறு நூறு விதங்களில் பொது மக்கள் அடிக்கடி வெளிப்படுத்தி வருகிறார்கள். மேற்படி கடற்கரைப் பொதுக் கூட்டத்திலும் நன்கு வெளிப்படுத்தினார்கள்

அந்த மனிதத் தன்மை எவ்வாறு இயங்க வேண்டும் என்பது பற்றியும் மேற்படி பொதுக் கூட்டத்தில் தமிழ் மக்கள் தங்கள் விருப்பம் என்னவென்பதை வெளிப்படுத்தினார்கள்.

பெரியார் நாயக்கரும் பெரியார் ராஜாஜியும் ஒரே மேடையில் தோன்றியதையும், கைகுலுக்கியதையும் கண்டு மக்கள் அவ்வளவு குதூகலம் அடைந்த காரணம் என்ன!

பண்பாட்டில் சிறந்தவர்களான தமிழ் மக்கள் சண்டையை விரும்பவில்லை.

முக்கியமாக, தமிழ் நாட்டுப் பிரமுகர்களுக்குள்ளும் அரசியல் தலைவர்களுக்குள்ளும் பூசல்கள் ஏற்படுவதை மக்கள் விரும்பவில்லை.

இனத் துவேஷ வகுப்புத் துவேஷப் பிரசாரங்களையோ, உத்தியோகப் போட்டி—பதவிப் பற்றுக் காரணமான பூசல்களையோ, சொந்த விருப்பு-வெறுப்புக்கள் காரணமான மாற்சரியங்களையோ, ஆவேச மேடைப் பிரசங்கங்களின் வசைப் புராணங்களையோ தமிழ் மக்கள் விரும்பவே யில்லை.

அரசியல் தலைவர்களும் சமூகப் பிரமுகர்களும் ஏகமனதாக இருப்பதையே மக்கள் விரும்புகிறார்கள். தமிழகத்துத் தலைவர்கள் அனைவரும் ஒத்துழைத்துத் தேசத்துக்குத் தொண்டு புரிவதை மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள்.

எக்காரணத்தினாலாவது ஒத்துழைத்து வேலை செய்ய முடியாவிட்டாலும், ஒருவர்மேலொருவர் மாற்சரியம் கொண்டு ரௌபாஸமாகச் சண்டை போடாமலாவது இருக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

கருத்து வேற்றுமை இருக்க முடியாத காரியங்களிலாவது தலைவர்கள் ஏக பாவம் காட்டி நடந்துகொள்ள வேண்டும் என்றும், இதன் மூலமாக மனிதத் தன்மையை வளர்க்க வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள்.

தமிழ் மக்களின் உண்மையான உள்ளம் இதுதான் என்பதைப் பற்றி நமக்கு எப்போதும் சந்தேகம் இருந்ததில்லை.

தமிழர்களின் இவ் விருப்பம் சென்ற ஞாயிற்றுக் கிழமை மாலை நடந்த கடற்கரைப் பொதுக் கூட்டத்திலும் வெளியாயிற்று.

தமிழ் நாட்டில் எந்த மூலை முடுக்கிலே பொதுக் கூட்டம் போட்டாலும் தமிழ்ப் பெரு மக்கள்

இந்த மனப்பான்மையையே அழுத்தமாக வெளியிடுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

* * *

தமிழ் நாட்டில் தற்சமயம் ஒற்றுமையும் நேசப் பான்மையும் ஏன் மிக அவசியமானவை என்பதைச் சில காலமாக இப்பத்திரிகையில் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

ஆந்திர நாடு பிரிந்து தமிழ் இராஜ்யம் உருவாகியிருக்கிறது. தமிழ் நாட்டில் பலரும் கண்ட கனவு தற்போது நிகழ்ந்திருக்கிறது.

தமிழ் நாடு அளவில் சுருங்கியது; ஆந்திர ராஜ்யத்தை விடச் சிறியது.

இங்கே இயற்கை வளங்களும் அவ்வளவாக இல்லை. ஒரே ஜீவநதியாக உள்ள காவேரியின் தண்ணீர் முழுதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆந்திர சர்க்கார் தமிழ் நாட்டுக்கு அரிசி அனுப்புவது பற்றிச் சமீபத்தில் நடந்த பேரங்களை வாசகர்கள் அறிவார்கள். ஆந்திர மந்திரிகள் அவ்வாறு பேரம் செய்ய முற்பட்டதில் வியப்பு ஒன்றுமில்லை. அவர்களுடைய புதிய இராஜ்யத்தின் முன்னேற்றத்தைத்தானே அவர்கள் முதன்மையாகக் கவனிக்க வேண்டும்!

தமிழ் நாடு உண்ணும் அரிசிக்கு அயல் இராஜ்யங்களை எதிர்பார்க்கும் நிலையில் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். கவனித்து, தமிழ் நாடு பல துறைகளிலும் தீவிர முன்னேற்றம் அடைவதற்கான வழிகளைத் தேட வேண்டும்.

தமிழ் நாட்டில் விவசாயம் செழிக்க வேண்டும், கைத்தொழில்கள் பெருக வேண்டும். படித்தவர்கள்—படிக்காதவர்களிடையில் குடிகொண்டுள்ள பயங்கரமான வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும்.

நாட்டில் பிச்சைக்காரர்களின் தொகை பெருகி வருகிறது. வறுமைக் கொடுமையினால் நடக்கும் திருட்டுக்களும் அதிகமாகி வருகின்றன. வேலை கிடைக்காத காரணத்தினால் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டு சின்னஞ் சிறு வாலிபர்கள் தற்கொலையில் நாட்டங் கொள்கிறார்கள்.

ஏழைகள் வசிக்கும் குடிசைகளைப் பார்த்தால், இவை மனிதர்கள் வசிக்கும் இடங்கள் தானா என்று எண்ணத் தோன்றும்.

நடுத்தர வகுப்பாரின் குடும்பங்கள் எப்படிக் காலட்சேபம் நடக்கின்றன என்ற விவரம் கேட்டால், கல் நெஞ்சும் உருகும்.

ஆறு வருஷம் தொடர்ந்து மழை பெய்யாத காரணத்தினால் மக்களின் வறுமையும் துயரமும் பன்மடங்கு அதிகரித்திருக்கின்றன.

தமிழ் நாட்டில் இப்போது அறிவாளிகள் எல்லாரும் ஒருமுகமாகக் கவனம் செலுத்த வேண்டிய காரியம் பொருளாதார முன்னேற்றமே யாகும்.

தமிழகத்தில் இயற்கை வளங்கள் அவ்வளவு இல்லையென்றாலும், அறிவு வளம் அதிகம்.

அரசியல் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், தொழில், வர்த்தகப் பிரமுகர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒருமனமாகப் பிரயத்தனப்பட்டுத் தமிழ் நாட்டைச் செல்வத் துறையில் உயர்த்தப் பாடுபட வேண்டும்.

செந்தமிழ்நாட்டில் வறுமை ஒழிந்து வளமை பொழியப் பாடு படவேண்டும்.

தமிழ் நாட்டின் அறிவாளிகள் தங்கள் அறிவையெல்லாம் ஒருவரோடொருவர் சண்டையிடுவதில் செலவிடுவதை மக்கள் விரும்பவில்லை.

அரசியல் தலைவர்களின் உத்தியோகப் போட்டிகளையும் பரஸ்பரப் பூசல்களையும் மக்கள் சிறிதும் விரும்பவில்லை.

சமூகத் தலைவர்களின் இனத் துவேஷ, சாதித் துவேஷச் சண்டைகளையும் மக்கள் விரும்பவில்லை.

அனைவரும் நேச பாவத்துடன் ஒற்றுமைப்பட்டுத் தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

போகின்ற 1953-ம் ஆண்டில் தமிழ் மக்களின் விருப்பம் அவ்வளவாக நிறைவேறவில்லை. வருஷக் கடைசியில் அதற்கு நேர்மாறான காரியங்களே பெரும்பாலும் நடந்தன.

வருகின்ற 1954-ம் ஆண்டிலாவது தமிழ் மக்களின் விருப்பம் நன்கு நிறைவேற வேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

# தங்கப் பதக்கம் பெற்ற சிங்கம்!

இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன், உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று இந்தியா முழுவதும் சர்க்கார் பிரசாரம் செய்து வந்தனர் அல்லவா! அப்போது நமது தலைவர்கள் ஒரு விஷயத்தை வற்புறுத்தி வந்தார்கள். அதாவது தற்போது உற்பத்தியாகும் உணவு தானியங்கள் பத்தே சத விகிதம் அதிகமாக உற்பத்தியாகும்படி செய்து விட்டால், இந்தியா உணவுப் பொருளுக்குப் பிறநாடுகளை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை ஏற்படாது என்று கூறிவந்தார்கள்.

சமீபத்தில் புதிய சென்னை சர்க்கார் உணவு மந்திரி, வெளியிலிருந்து சென்னை ராஜ்யத்துக்கு இரண்டரை லட்சம் டன் அரிசி வந்தால் இந்த மாகாணத்தினரின் தேவை பூர்த்தியாகி விடும் என்று அறிவித்தார்.

வெளியிடங்களை எதிர்பாராமலேயே சென்னை மாத்திரமல்ல, இந்தியா முழுவதும் தங்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய முடியும் என்பது இப்போது நிரூபிக்கப் பட்டிருக்கிறது. உணவு உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்க முடியும் என்ற சாதனையை நிறைவேற்றிக் காட்டியவர் தமிழ் நாட்டினர் என்பதைக் குறித்துத் தமிழ் மக்கள் பெருமை அடையலாம்.

வானம் பார்த்த சீமையான ராமநாதபுரம் ஜில்லாவில் ஏக்கருக்குச் சராசரி 1700 ராத்தல் தான் நெல் விளையும். ஆனால் மேற்படி ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ ஏ. சங்கரநாராயணத் தேவர் ஒரு ஏக்கர் நிலத்தில் 11,255 ராத்தல் நெல் விளையும் அற்புத சாதனையில் வெற்றி பெற்றுள்ளார். அதற்காகச் சென்னை சர்க்கார் அவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கியதுடன், "உழவு மாணிக்கம்" என்ற பட்டமும் அளித்துள்ளனர்.

ஸ்ரீ தேவரின் பெருமுயற்சியினால் ஏழு மடங்கு அதிகமாக நெல் விளைந்திருப்பதைப் பார்க்கும் போது, சாதாரணமாக ஏக்கரில் மூன்று நாலு மடங்கு அதிகமாக நெல் விளையும்படி செய்வது கஷ்டமான காரியம் அல்ல என்று ஏற்படுகிறது. சென்னை மாகாணத்தில் உள்ள விவசாயிகள் யாவரும் ஸ்ரீ தேவரைப்போல் முயற்சி எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் சென்னை ராஜ்யத்தின் உணவுப் பற்றாக் குறையை அறவே ஒழிக்க அதிக காலம் ஆகாது.

கபிட்சப் போர்முனையில் உணவுப் பஞ்ச அரக்கனை எதிர்த்து வெற்றி பெறுவதற்கு இந்தியா முழுவதற்கும் வழிகாட்டியுள்ள ராமநாதபுரம் வீர விவசாயியைப் பாராட்டுகிறோம்.

# புகையும் ஜ்வாலையும்

ருஷ்யாவிலிருந்து ருஷ்யத் துருப்புகள் அடங்கிய ஐம்பத்தெட்டு பிரிவுகள் (டிவிஷன்) கொரியாவை நோக்கிச் சென்று வருகின்றன:

கொரியாப் போரில் ருஷ்யா தலையிடும் பட்சத்தில், அமெரிக்கா அணுகுண்டு யுத்தத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

கொரியாப் போர் இத்தகைய பயங்கரமான கட்டத்துக்கு வந்திருப்பதாகச் சென்ற வாரம் பத்திரிகைச் செய்திகள் கூறின.

கொரியா சமாதான விஷயமாக ஏற்பட்டிருந்த நம்பிக்கை குன்றி வருவதாக, இந்தியாவுக்கு வந்துள்ள ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, கொரியாவில் அடங்கியுள்ள புகைச்சல் மறுபடியும் ஜ்வாலை விடத் தொடங்குமோ என்ற பீதி ஏற்பட்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேறிய கொரியா சமாதான ஒப்பந்தத்துக்கு இணங்க, ஜனவரி இருபத்திரண்டாம் தேதிக்குள் கொரியா யுத்தக் கைதிகள் பிரச்னை முடிவடைந்து விடவேண்டும்.

இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காகக் கொரியாவுக்குச் சென்ற இந்தியத் துருப்புகளுக்கு, கொரியாப் போரில் சம்பந்தப் பட்ட இரு சாராரும் முட்டுக் கட்டை போட்டு வருவதால், இந்தியத் துருப்புகளின் அலுவல்கள் பூர்த்தி பெறவில்லை. துருப்புகளிடையே இரு கட்சிகளையும் சேர்ந்த ஒற்றர்கள் பிரவேசித்துள்ளனர்.

யுத்தக் கைதிகள் விஷயமே இப்படியிருக்க அதற்கு அடுத்தபடியாக நடக்க வேண்டிய கொரியா அரசியல் மகாநாட்டைப் பற்றிக் கேட்கவா வேண்டும்!

அந்த மகாநாட்டில் எந்தெந்த நாடுகள் கலந்து கொள்வது என்பதைப் பற்றிப் பெரும் தகராறும் அபிப்பிராய பேதமும் ஏற்பட்டிருக்கின்றன.

குறிப்பிட்ட மேற்படி தேதிக்குள் கைதிகள் பிரச்னை தீரா விட்டால், அன்று எல்லாக் கைதிகளையும் விடுதலை செய்து விட வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஷரத்தாகும்.

ஆனால், அவ்வாறு விடுதலை செய்தால் தாங்கள் பலாத்காரமாக அதைத் தடுப்போம் என்று கம்யூனிஸ்டுகள் அறிவித்துள்ளனர்.

ஜனவரி மாதம் இருபத்திரண்டாம் தேதிக்குள் கொரியா சமாதான மகாநாடு ஆரம்பமாகாவிட்டால், தாம் மறுபடியும் போரைத் தொடங்கப் போவதாகத் தென் கொரியாத் தலைவர் ஸிங்மென் ரீ பயமுறுத்தி வருகிறார்.

அந்தத் தேதிக்குள் கைதிகள் பிரச்னை தீராவிடில், மீதியுள்ள கைதிகளை ஐ. நா. சபை ராணுவக் குழுவினரிடம் ஒப்புவித்து விட்டுத் திரும்பி வருவதைத் தவிர இந்தியத் துருப்புகள் வேறு எதுவும் செய்வதற்கில்லை.

எனவே, ஒப்பந்தக் கெடுவுக்குள் கைதிகள் பிரச்னை, சமாதான மகாநாடு இவை சம்பந்தமாகச் சமரசமான முடிவு ஏதாவது ஏற்பட்டாலன்றி, கொரியாவில் மீண்டும் கோரப் போர் ஆரம்பமாகி விடும் என்று எச்சரிப்பதற்காக அங்குள்ள அமெரிக்கத் தளபதி மேஜர் ஜெனரல் வில்லியம் டீன் அமெரிக்காவுக்கு ஓடியிருக்கிறார்.

* * *

கொரியா சமாதான மகாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று ஸிங்மென் ரீ கூறுகிறார். அவர் கூற்றுக்குத் தகுந்தவாறு அமெரிக்க சர்க்காரும் தாளம் போடுகின்றனர்.

கொரியாப் போருக்கு இந்தியா துருப்புகளை அனுப்பி அதில் நேரடியாகக் கலந்து கொள்ளாததால், சமாதான மகாநாட்டில் ஸ்தானம் பெற இந்தியாவுக்கு உரிமை இல்லை என்பது அமெரிக்க கோஷ்டியினரின் வாதம்.

ஆனால் அந்த மகா நாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று ஸிங்மென் ரீ கோஷ்டியினர் கூறுவதைக் காட்டிலும் நன்றி கெட்ட செய்கை வேறு எதுவும் இருக்க முடியாது.

அவ்விஷயமாக இந்தியா பெரு முயற்சி எடுத்துக் கொண்டிராவிடில், கொரியாப் போர் நின்று, சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்குமா!

மேற்படி போரில் இந்தியா நடுநிலைமை வகித்ததால்தான், இந்தியாவினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட சமாதான ஒப்பந்த ஷரத்துகளை இரு கட்சியினரும் ஒத்துக்கொள்ள முன் வந்தனர்.

அடிப்படையான இந்தக் காரணத்தை அமெரிக்கத் தலைவர்களும் ஸிங்மென் ரீயும் உணராமல் பிடிவாதம் செய்வதே கொரியா சமாதானத்துக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது.

# நல்ல பெயர் கிடைக்கும்!

தபால் தந்தி இலாகாவின் பொது ஜனத் தொடர்பு வாரம் சென்ற திங்கட் கிழமையிலிருந்து ஆரம்பமாகியிருக்கிறது. மேற்படி இலாகாவுக்கும் பொது ஜனங்களுக்கும் பரஸ்பரம் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் இருந்து வரவேண்டும். எல்லோரும் மரியாதையுடனும் அன்புடனும் பழக வேண்டும் என்பதே பொது ஜனத் தொடர்பு வாரம் அனுஷ்டிப்பதன் நோக்கமாகும். சென்ற வருஷத்திலும் இவ்விதமே அனுஷ்டித்தனர்.

தபால் தந்தி இலாகா மாத்திரம் என்ன, எல்லா சர்க்கார் இலாகாக்களுக்கும் பொது ஜனங்களுக்குமே நல்லெண்ணமும் நெருங்கிய தொடர்பும் இருக்க வேண்டிய அவசியத்தை வருஷத்துக்கு ஒரு தடவை ஞாபகப்படுத்த வேண்டியதுதான்

ராணுவத்துக்கும் பொது ஜனங்களுக்குமே நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டியது அவசியம் என்று வற்புறுத்தப்பட்டு வரும் இக்காலத்தில், மற்ற 'ஸிவில்' இலாக்காக்களுக்கும் பொது ஜனங்களுக்கும் பரஸ்பரம் நல்லெண்ணமும் நல்லுறவும் இருக்கவேண்டியது அவசியம் அல்லவா! அதிலும் முக்கியமாக, தினசரி பொது ஜனங்களிடம் நேரடியான தொடர்புள்ள தபால் தந்தி டெலிபோன் இலாக்காக்கள் பொது ஜனங்களிடம் அன்புடன், மரியாதையுடன், சேவா உணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும். சர்க்காரைச் சேர்ந்த ஒவ்வொரு இலாகாச் சிப்பந்திகளும் பொதுஜன ஆதரவைப் பெறுவதையே தங்களுடைய லட்சியமாகக் கொண்டு கடமையாற்றும் பட்சத்தில், சர்க்கார் சிப்பந்திகளுக்கு உண்மையான பொதுஜன ஊழியர்கள் என்ற நற்பெயர் ஏற்படும்; சர்க்காருக்காக ஜனங்கள் இல்லை, ஜனங்களுக்காகவே சர்க்கார் இருக்கிறார்கள் என்ற உயர்ந்த ஜனநாயக தர்மத்துக்கும் சிறிதும் குந்தகம் ஏற்படாது.

# சென்னை சிரஞ்சீவி ஸ்தாபனம்

சில மாதங்களுக்கு முன், உலக ஆரோக்கிய ஆராய்ச்சி ஸ்தாபனத்தைச் சேர்ந்த பிரமுகர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். இங்குள்ள பல நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் சென்று பார்வையிட்டார். கடைசியாக அவர் திரும்பிச் செல்லு முன் வேண்டா வெறுப்புடன் சென்னையில் உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து பிரமித்துப் போனார்.

"இந்த ஆஸ்பத்திரியைப் பார்க்காமல் நான் திரும்பிச் சென்றிருந்தால், வைத்தியத் துறையில் இந்தியா மிகவும் பிற்போக்கான ஒரு நாடு என்ற எண்ணத்துடன் சென்றிருப்பேன். ஆனால் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி என் கண்களைத் திறந்தது. வைத்தியத் துறையில் இந்தியாவின் உயர்வைக் காட்ட இந்த ஆஸ்பத்திரியே போதுமானது" என்று அப் பிரமுகர் கூறி விட்டுச் சென்றாராம்.

இவ்விதமாக இந்தியாவுக்கே பெருமை அளிக்கக் கூடிய ஜெனரல் ஆஸ்பத்திரியின் இரு நூறாவது ஆண்டு விழா இந்த மாதம் பத்தொன்பதாம் தேதி சென்னையில் விமரிசையாக நடைபெற்றது.

ஆங்கில அதிகாரிகளுக்காகவும் ஆங்கில சிப்பாய்களுக்காகவும் சுமார் மூன்று நூற்றுண்டுகளுக்கு முன் அதாவது 1664-ம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனியாரால் ஸ்தாபிக்கப் பட்ட ஜெனரல் ஆஸ்பத்திரி, இன்று மகத்தான அபிவிருத்தி அடைந்து ஆசியாவிலேயே சிறந்த ஆஸ்பத்திரிகளில் ஒன்றாக விளங்கி வருவது, பொதுவாக இந்தியாவும் குறிப்பாகத் தமிழ்நாடும் பெருமிதம் கொள்ள வேண்டிய விஷயம் அல்லவா!

சென்னை மாநகருக்குப் பெருமையையும் புகழையும் அளிக்கும் விஷயங்கள் இரண்டு. ஒன்று ஈடு இணையற்ற ஆனந்தத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும் கடற்கரை; மற்றொன்று பாமர மக்களின் பிணியைத் தீர்க்கும் ஜெனரல் ஆஸ்பத்திரிதான் என்று கூறுவது மிகையாகாது. பொது ஜனங்களின் வேதனையைப் போக்கி, உடல் நலனைப் பேணும் புனித கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள இந்த ஸ்தாபனம் சிரஞ்சீவியாக மேன்மேலும் புகழ் பெற்று, உலகத்தின் சிறந்த வைத்திய நிலையங்களில் ஒன்றாக விளங்குமாக!

## திரு. வி. க. மணிமண்டப கால்கோள் விழா

ராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை மண்டபத்தில் டிசம்பர் 14உ திரு. வி. க. மணி மண்டபக் குழுவினரின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு ஸ்ரீ பி. டி. ராஜன் எம். எல். ஏ. தலைமை தாங்கினார். வரும் தை மாதத்தில் ஓர் நன்னாளில் இம் மணி மண்டபத்துக்குக் கால்கோள் செய்ய வேண்டும் என்று தீர்மானம் நிறைவேறியது.

மணி மண்டபம் கட்டி முடிப்பதற்குக் குறைந்த பட்சம் 30,000 ரூபாய் வேண்டும் என்று மதிப்பிடப்பட் டிருக்கிறது. இதுவரையில் 6,400 ரூபாய் நன்கொடை வந்துள்ளதாக மணி மண்டபக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இந்த நிதிக்குத் தமிழ்ப் பெருமக்கள் தாராளமாக நன்கொடை வழங்க வேண்டுமென்று ஸ்ரீ பி. டி. ராஜன் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

"தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வின் சிறந்த பண்பும் அரிய தியாகத் தொண்டுகளும் தமிழகத்துக்கு நன்றாகத் தெரிந்தவை.

"அவர் பெயரால் கட்டப்படும் மணி மண்டபத்தைச் சிறந்த பொருள்களைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தல், நூல் நிலையம் அமைத்தல், அவரது கையெழுத்துப் பிரதிகள், அவர் வெளியிட்ட பத்திரிகைகள், படித்த நூல்கள், உபயோகித்த பொருள்கள் முதலியவைகளைக் கண்காட்சியில் வைத்துக் காப்பாற்றுவதற்கு உரியவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தல் போன்ற நற்காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

"இந்தப் புனித நன்றித் தொண்டில் அன்பர்கள் பலரும் ஈடுபட்டு விரைவில் மணி மண்டபத் திறப்பு விழாவை அனைவரும் கண்டு களிக்க உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்று மேற்படி மண்டபக் குழுவின் தலைவர் ஸ்ரீ பி. டி. ராஜன் நன்றி மறவாத் தமிழர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

திரு. வி. க. மணிமண்டப அமைப்புக் குழுவின் ஓர் அங்கத்தினரான திரு கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களைத் தமிழகம் நன்கு அறியும். அழகு தமிழில் அற்புதமாகச் சொற்பொழிவாற்றும் திறன்படைத்தவர். அவர் திரு. வி. க. நிதிக்குப் பொருள் சேகரிப்பதற்காக ஒரு விரதம் எடுத்துள்ளார். மேற்படி நிதிக்கு நூறு ரூபாய் அளிப்பதற்கு முன் வரும் கூட்டங்களில் பேசுவது என்பதுதான் அந்த விரதம். ஒரு நல்ல காரியத்துக்காகச் சிறந்த முறையில் விரதம் எடுத்துள்ள திரு கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களுக்குத் தமிழகம் பெருவாரியாக ஆதரவளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திருவானைக்காவல் பாங்கர் திரு ஆர். எம். சின்னையா நாயுடு அவர்கள் வீட்டுத் திருமணத்துக்கும், திருச்சி மாவட்ட வர்த்தக சபைக்காரர்கள் நடத்திய ஒரு கூட்டத்துக்கும் திரு கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களைப் பேசுவதற்கு அழைத்து திரு. வி. க மணிமண்டப நிதிக்கு நூறு ரூபாய் வீதம் அளித்திருக்கிறார்கள்.

இதைப் போல் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் திரு கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்களை அழைத்துப் பேசுமாறு கேட்டுக் கொண்டால் ஒரு சிறந்த தமிழ்ச் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்த திருப்தியுடன் ஓர் உயர்ந்த உத்தம கைங்கரியத்துக்குப் பொருள் உதவி செய்த பெருமையையும் அடையலாம்.


மேற்படி நிதிக்குத் தனிப்பட்ட முறையில் நன்கொடைகள் அனுப்ப விரும்புவோர் மதுரை மத்திய கூட்டுறவு பாங்கியில் உள்ள திரு. வி. க. நிதிக் கணக்குக்காவது ஸ்ரீ ச. சச்சிதானந்தம் பிள்ளை, காரியதரிசி, திரு. வி. க. மணிமண்டப அமைப்புக் குழு, 175/A, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை, சென்னை – 14 என்ற விலாசத்துக்காவது அனுப்பி வைக்கலாம்.



# The Soap trick

சூக்ஷ்மம் கலவையில்தான் பதிந்துள்ளது. ஆகையினால்தான் மேட்டூர் சந்தன சோப் தனித் தன்மையுடன் ஒப்புயர்வற்றுத் திகழ்கிறது. மேட்டூர் சந்தன சோப்பின் அற்புத நறுமணத்துடன் கூடிய நுரை உங்களை உத்ஸாகப் படுத்துவதுமன்றி சருமத்துக்கு மிருதுத் தன்மை, வனப்பு முதலியவற்றை யளித்துப் பாதுகாத்து, கவர்ச்சி மிக்க காந்தியை நாள் முழுதும் நீடித்திருக்கச் செய்கிறது.

## மேட்டூர் சந்தன சோப்



## METTUR SANDAL Soap

தயாரிப்பாளர்கள் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.

மேட்டூர் அணை R. S. - சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்டுகள் :

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி




## அத்தியாயம் 63

# பிநாகபாணியின் வஞ்சம்

பொன்னியின் செல்வரும் குந்தவை தேவி முதலாயினோரும் பாதாளச் சிறைக்குச் சென்று பார்த்தபோது அங்கே அவர்கள் வந்தியத் தேவனைக் காணவில்லை. அவனுக்குப் பதிலாக வைத்தியர் மகன் பிநாகபாணியைக் கண்டார்கள். பிநாகபாணி சுவரில் இருந்த இரும்பு வளையங்களில் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். "ஐயையோ! கொலைகாரன் தப்பி ஓடிவிட்டான்! பைத்தியக்காரன் தப்பி ஓடிவிட்டான்" என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தான். அவனைக் குந்தவை தேவிக்கும் வானதிக்கும் நன்கு நினைவிருந்தது. மூதன் முதலில் வந்தியத் தேவனுக்குத் துணையாக அவனையும் கோடிக்கரைக்கு அவர்கள் அனுப்பினார்கள் அல்லவா? பிநாகபாணியை விடுதலை செய்யப் பண்ணி விசாரித்தபோது அவன் சற்று முன் அங்கு நடந்த நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகத் தெரியப்படுத்தினான். தப்பி ஓடிப் போனவர்களை விரைவாகத் தொடர்ந்து பிடிக்க வேண்டுமென்றும் ஆத்திரப்பட்டான்.

ஆனால், அவனுடைய வரலாற்றைக் கேட்டவர்கள் அது விஷயத்தில் அவ்வளவு ஆத்திரம்கொள்ளவில்லை. வந்தியத் தேவனுடைய சாமர்த்தியத்தைப் பற்றி மனதிற்குள் அவர்கள் மெச்சிக் கொண்டதுடன், அச்சமயம் அவன் தப்பி ஓடிப் போனதே ஒரு விதத்தில் நல்லது என்று எண்ணிக் கொண்டார்கள். மணிமேகலை தனது எண்ணத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கத் தொடங்கியபோது, குந்தவை. அவளைத் தடுத்து. "தங்காய்! பேசாமலிரு! இது பெரிய இராஜாங்க விஷயம். பெண் பிள்ளைகளாகிய நமக்கு அதைப் பற்றி என்ன தெரியும்? உன் மனத்தில் இருப்பதை என்னிடம் தனியாகச் சொல்லு!" என்றாள்.

எல்லாரும் பாதாளச் சிறையின் வாசலில் வந்தபோது அங்கே சேநாதிபதி பெரிய வேளாரும் வந்து சேர்ந்தார். சிறையில் ஏதோ தவறு நடந்து விட்டது என்ற செய்தி அவர் காதுக்கு அதற்குள் எட்டியிருந்தது. நடந்தவற்றை அறிந்த போது சேநாதிபதியும் தப்பி ஓடியவர்களைப் பிடிப்பதில் அவ்வளவாகப் பரபரப்புக் காட்டவில்லை. உண்மையில் அவருடைய மனதிற்குள்ளேயும் வந்தியத் தேவன்மீது சாட்டப்பட்டிருந்த குற்றத்தைப் பற்றிச் சிறிதும் நம்பிக்கை உண்டாகியிருக்கவில்லை. அருள்மொழிவர்மர், குந்தவை தேவி முதலியோர் வந்தியத் தேவனிடம் கொண்டிருந்த அபிமானத்தையும் அறிந்திருந்தார். ஆகையால், கோபங் கொள்வதற்குப் பதிலாக வந்தியத் தேவனுடைய கெட்டிக்காரத்தனத்தைக் குறிப்பிட்டுச் சிரித்தார்.

"அந்த வாணர் குல வாலிபன் ரொம்ப சாமர்த்தியசாலி! இலங்கை மாதோட்

டச் சிறையிலிருந்தும் அவன் இப்படித் தான் ஒரு தடவை தந்திரமாகத் தப்பிச் சென்றான்!'' என்றார்.

வைத்தியர் மகன் குறுக்கிட்டு, ''ஐயா! தப்பி ஓடியவர்களைத் தேடிப் பிடிக்க ஏற்பாடு செய்யவேண்டாமா?'' என்றான்.

''ஆ! அவர்கள் எங்கே தப்பிச் சென்று விடப் போகிறார்கள்? இந்தக் கோட்டைக் குள்ளே தானே இருக்க வேண்டும்? பார்த்துக் கொள்ளலாம்!'' என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

பினாகபாணி ஆத்திரத்துடன் ''இல்லை, இல்லை! அந்தக் கொலைகாரனுக்குச் சுரங்கப் பாதை தெரியும். அதன் வழியாக அவன் வெளியேறிப் போய் விடுவான்!'' என்று அலறினான்.

சேநாதிபதி இதனால் கோபம் அடைந்து, ''முட்டாளே! நீ எனக்குப் புத்தி சொல்ல முன் வந்துவிட்டாயா? அவர்கள் தப்பிச் செல்வதற்கு நீதானே காரணம்? வேண்டுமென்றே அவர்களுடன் சேர்ந்து நீயே இந்தச் சூழ்ச்சி செய்தாயோ, என்னமோ? இவனைப் பிடித்து மறுபடியும் பாதாளச் சிறையில போடுங்கள்!'' என்று பக்கத்தில் நின்ற வீரர்களைப் பார்த்துக் கூறினார்.

பினாகபாணி நடுநடுங்கிப் போனான். ''இல்லை, ஐயா! சத்தியமாக நான் அவர்களுடைய சூழ்ச்சியில் சேர்ந்தவன் அல்ல. முதன் மந்திரி அனுப்பி நான் வந்தேன்!'' என்று முறையிட்டான்.

பொன்னியின் செல்வர் குறுக்கிட்டு, ''ஆமாம்; இவன் முதன் மந்திரியின் ஆள் அல்லவா? தக்க காவலுடன் அவரிடம்



அனுப்பிச் சேர்த்து விடலாம். முதன் மந்திரியே இவனுக்குத் தக்க தண்டனை கொடுக்கட்டும்!" என்றார்.

அவ்வாறே சேனாதிபதி வைத்தியர் மகனை முதன் மந்திரி அநிருத்தரிடம் கொண்டு போய் ஒப்புவித்து விடும்படி தம்முடைய வீரர்கள் நால்வருக்குக் கட்டளை பிறப்பித்தார்.

முதன் மந்திரி அநிருத்தர் பினாகபாணியிடம் சிறையில் நடந்தவற்றைக் கேட்டு அறிந்தபோது அவரும் அவ்வளவாகப் பரபரப்புக் காட்டவில்லை.

அநிருத்தர் எந்த முக்கியமான காரியத்துக்கும் ஒரு ஆளை மட்டும் நம்பி அனுப்புவதில்லை. எங்கேயாவது ஒற்றனை அனுப்பினால், அவனைக் கவனித்துக் கொள்ளப் பின்னால் இன்னொருவனையும் அனுப்பி வைப்பது அவர் வழக்கம். அவ்வாறே இப்போதும் ஆழ்வார்க்கடியானை அனுப்பியிருந்தபடியால் அவர் கவலைப்படவில்லை. ஓடிப் போனவர்களை அவன் பிடித்துக் கொண்டு வருவான், அல்லது அவர்களைப் பற்றிய செய்தியாவது கொண்டு வருவான் என்று நம்பினார். ஓடிப் போனவர்கள் இருவரும் ஒரு வழியாக அகப்படாமலே ஓடிப் போய் விட்டால் பல தொல்லைகள் தீர வகை ஏற்படும் என்ற எண்ணமும் அவர் மனத்தில் இருந்தது.

எனவே, பினாகபாணி பாதாளச் சிறையில் நடந்தவற்றைச் சொல்லி விட்டு, "ஐயா! என்னுடன் நாலு ஆள்களை அனுப்பி வைத்தால் நானே அவர்களைத் திரும்பவும் கைப்பற்றி வருகிறேன்" என்று சொன்னபோது, அநிருத்தரும் அவன் பேரில் எரிந்து விழுந்தார்.

"முட்டாளே! காரியத்தை அடியோடு கெடுத்து விட்டாய்! அந்தப் பைத்தியக்காரனைப் பற்றி வெளியில் யாருக்குமே தெரியக் கூடாது என்று அல்லவா உன்னை அனுப்பினேன்? இல்லாவிடில் நானே போய் அவனை அழைத்து வந்திருக்க மாட்டேனா? இப்போது அரண்மனையைச் சேர்ந்த பலருக்கும் அவனைப் பற்றித் தெரிந்து போய் விட்டது. அது போதாது என்று நீ வேறு மறுபடியும் விளம்பரப் படுத்தப் பார்க்கிறாயா? போதும் உன்னுடைய சேவை! நீ ஒற்றன் வேலைக்குச் சிறிதும் தகுதி அற்றவன்! போ! இனி என் முகத்தில் விழிக்காதே! இன்று நடந்தவற்றை யாரிடமும் சொல்லாதே! சொன்னதாகத் தெரிந்தால் உன்னைக் கழுவில் ஏற்றக் கட்டளையிடுவேன்!" என்றார் அநிருத்தர்.

பினாகபாணி தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு முதன் மந்திரி வீட்டிலிருந்து வெளியேறினான். அவனுடைய உள்ளத்தில் ஆசாபங்கத்தினால் ஏற்பட்ட குரோதம் கொழுந்து விட்டு எரிந்தது. அந்தக் குரோதமெல்லாம் வந்தியத்தேவன் மீது திரும்பியது. அவனாலே தான் தனக்கு எடுத்த காரியத்தில் தோல்வியும் அபகீர்த்தியும் உண்டாயின. சேனாதிபதியும் முதன் மந்திரியும் தன்னைக் கடிந்து கொள்ளவும் நேர்ந்தது. இவர்கள் எல்லாரும் அலட்சியமாயிருந்தால் இருந்து விட்டுப் போகட்டும். வந்தியத்தேவனைக் கண்டு பிடித்துப் பழி வாங்கும் கடமை தன்னுடையது. பைத்தியக்காரன் தப்பி ஓடிப் போனாலும் போகட்டும்; வந்தியத்தேவனை மட்டும் விடக்கூடாது. கோடிக் கரைக்குப் பிரயாணம் சென்ற நாளிலிருந்து தன்னுடைய விரோதி அவன். கடைசியாக இந்தப் பெரிய தீங்கைத் தனக்குச் செய்திருக்கிறான். அவனைக் கண்டு பிடித்துப் பழி வாங்கியே தீர வேண்டும்!......

இவ்வாறு பினாகபாணி தீர்மானித்துக் கொண்டு தஞ்சைக் கோட்டையைவிட்டு வெளியேறினான். வந்தியத்தேவன் கோட்டைக்குள் இருக்க மாட்டான் என்றும், இரகசியச் சுரங்கப் பாதை வழியாகப் போயிருப்பான் என்றும் அவன் உண்மையிலேயே நம்பினான். ஆனால் சுரங்கப்



பாதை எங்கே இருக்கிறதென்றாவது, அதன் வெளி வாசல் எங்கே திறக்கிறதென்றாவது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆயினும் கோட்டைச் சுவரில் எங்கேயோ ஓரிடத்தில் அந்த இரகசியச் சுரங்கப் பாதையின் வெளி வாசற்படி இருக்கத்தான் வேண்டும். சுவர் ஓரமாகப் போய்ச் சுற்றிப் பார்த்தால் ஒரு வேளை கண்டு பிடித்தாலும் கண்டு பிடிக்கலாம். ஏன்? வந்தியத்தேவனும் பைத்தியக்காரனும் வெளியில் வரும்போது கையும் மெய்யுமாக அவர்களைப் பிடித்தாலும் பிடித்து விடலாம்......

இத்தகைய எண்ணத்தினால் பினாகபாணி தஞ்சைக் கோட்டையின் வெளிப்புறத்தில் மதிலை ஒட்டி ஓடிய வடவாற்றின் அக்கரை வழியாகப் போய்க் கொண்டிருந்தான். மதில் சுவரைக் கவனமாக உற்றுப் பார்த்துக்கொண்டே போனான். கொடும்பாளூர் வீரர்கள் சிலர் கையில் தீவர்த்தியுடன் அவ்வப்போது மதிலைச் சுற்றிப் போய்க் கொண்டிருந்தார்கள். வைத்தியர் மகனிடம் இன்னமும் அவன் முதன் மந்திரியின் ஆள் என்பதற்கு அடையாளமான இலச்சினை இருந்தது. ஆகையால், வீரர்கள் எதிர்ப்பட்டால் அவன் அவர்களிடமிருந்து சமாளித்துக் கொண்டு செல்ல முடியும். ஆயினும், அவன் எடுத்த காரியம் அதனால் தாமதம் ஆகும். ஆகையால், தீவர்த்தியுடன் காவல் வீரர்கள் எதிரே வந்தபோதெல்லாம் பாதை ஓரத்தில் மரங்கள்–புதர்களில் மறைந்து நின்று அவர்கள் அப்பால் போனதும் வெளி வந்தான். இப்படி அவன் ஒரு தடவை புதர்களில் மறைந்து கொண்டிருந்தபோது அவனுக்குச் சற்றுத் தூரத்தில் இன்னும் இருவர் ஒளிந்திருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான். அவர்களில் ஒருவன் கையில் வாள் இருந்தது. தீவர்த்தி வெளிச்சம் புதர்களின் வழியாக வந்து இரண்டொரு கிரணங்கள் அந்த வாளின் மீது பட்டபோது அது ஒளி வீசியது. ஆனால் ஒளிந்திருந்தவர்கள் யார் என்பது தெரியவில்லை.

காவலர்கள் அப்பால் போனதும் அந்த இரு மனிதர்களும் நதிக் கரைக்கு வந்து பினாகபாணி சென்ற திசைக்கு எதிர்ப் பக்கமாக நடந்து சென்றார்கள். பினாகபாணி தன் வழியே சிறிது தூரம் சென்றான். சட்டென்று அவன் மனத்தில் ஓர் ஐயம் உதித்தது. அவர்கள் இருவரும் தப்பி ஓடிய வந்தியத்தேவனும் பைத்தியக்காரனுந்தானோ என்னமோ? ஏன் இருக்கக் கூடாது? — கோட்டை வாசலை நோக்கி அவர்கள் சென்றபடியால், அவனுக்கு முதலில் அச் சந்தேகம் உதிக்கவில்லை. ஆனால் வந்தியத்தேவன் மிக்க தந்திரசாலி; துணிச்சலும் உள்ளவன். ஆகையால் என்ன உத்தேசத்துடன் போகிறானோ, என்னமோ?......

எனவே பினாகபாணியும் திரும்பி அவர்களைச் சற்றுத் தூரத்தில் பின் தொடர்ந்து போனான். ஒருவனுடைய கையிலே வாள் இருந்தபடியால் ஓடிப் போய் அவர்களை எதிர்ப்படவும் விரும்பவுமில்லை. அநாவசியமாக அன்னியன் ஒருவனுடன் சண்டை போடும் சமயம் அதுவல்ல. அவர்கள் தப்பி ஓடியவர்கள் தான் என்று நிச்சயம் தெரிந்து கொண்ட பிறகுதான் எதுவும் செய்ய வேண்டும். அவனுடைய கையில் குட்டையான குத்திட்டி ஒன்று இருக்கவே இருந்தது. அதைத் திடீரென்று உபயோகித்து அவனுடைய ஜன்ம விரோதியைத் தீர்த்துக் கட்டுவதே நல்லது. அதோ வடக்குக் கோட்டை வாசல் தெரிகிறது! அடடே! அங்கே என்ன இவ்வளவு கூட்டமும் ஆர்ப்பாட்டமும்? பல்லக்குகள், தீவர்த்திகள், முன்னும் பின்னும் அரண்மனைச் சேவகர்கள்! — யாரோ முக்கியமானவர்கள் வெளியில் போகிறார்களோ, திரும்பி வருகிறார்களோ தெரியவில்லை!

கடவுளே! இவர்கள் எங்கே? சட்டென்று மாயமாய் மறைந்து விட்டார்களே? குறுக்கு வழியில் புகுந்து விட்டார்கள் போலும்! எங்கே போயிருப்பார்கள்? இராஜ பாட்டைக்குப் போய் விட்டார்களா, என்ன? தப்பி ஓடிய கைதிகள் அவ்வளவு தைரியமாக இராஜ பாட்டைக்குச் சென்றிருக்க முடியுமா? இல்லாவிடில் எங்கே போயிருக்க முடியும்?...சேந்தன் அமுதனுடைய நந்தவனக் குடிசை அங்கே சமீபத்தில் இருப்பது பினாகபாணிக்கு நினைவு வந்தது. முன்னொரு முறை வந்தியத்தேவன் அங்கே ஒளிந்திருந்தான் என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது! ஆமாம்! ஆமாம்! அவர்கள் வந்தியத்தேவனும் பைத்தியக்காரனுந்தான். சேந்தன் அமுதன் வீட்டுக்குத்தான் போகிறார்கள். அங்கே இரவு மறைந்து தங்கியிருப்பதற்காகப் போகிறார்கள் போலும்! அல்லது அந்தத் தந்திரசாலியான வந்தியத்தேவன் வேறு என்ன உத்தேசம் வைத்திருக்கிறானோ தெரியவில்லை.

சேந்தன் அமுதனுடைய நந்தவனம் இருந்த திசையை நோக்கிப் பினாகபாணி

சென்றான். இருட்டில் வழி கண்டு பிடித்துச் செல்வது அவ்வளவு சுலபமாயில்லை. தட்டுத் தடுமாறி நந்தவனத்தை அடைந்த போது அங்கே சிவிகைகளும் காவலர்களும் இருப்பதைக் கண்டு வியந்தான். என்ன செய்வதென்று தெரியாமல் அவன் தயங்கி நின்றபோது, சிவிகைகள் புறப்பட்டு விட்டன. காவலர்களும் பின் தொடர்ந்து சென்றார்கள்.

பினாகபாணி அந்த நந்தவனத்தில் நாலா புறமும் உற்றுப் பார்த்தான். ஒரு வேலியின் ஓரமாக இரண்டு குதிரைகளின் தலைகள் தெரிந்தன. வைத்தியர் மகனின் ஆர்வம் அதிகமாயிற்று. மெள்ள மெள்ள நடந்து குடிசையை அணுகினான். ஒரு மரத்தினடியில் இருவர் நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான் அவர்கள் தான் தேடி வந்த ஆசாமிகளாகத் தான் இருக்க வேண்டும். குதிரைகள் இரண்டு ஆயத்தமாக நிற்கின்றனவே, அது எப்படி? அவர்கள் தப்பி ஓடுவதற்கு வேறு யாராவது, பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள், இரகசியமாக உதவி புரிகிறார்களா, என்ன? அவர்களைத் தப்ப வைக்கும் சூழ்ச்சியில் இராஜ குடும்பத்தினரே சம்பந்தப் பட்டிருப்பார்களோ? அந்தப் பைத்தியக்காரன் தனக்கு ஏதோ இரகசியங்கள் தெரியும் என்பதாக அலறிக் கொண்டிருந்தானே, அந்த ரகசியங்கள் வெளிப்படக் கூடாது என்பதற்காக ஒரு வேளை இதெல்லாம் நடைபெறுகிறதோ?......

மரத்தின் பின்னால் மறைந்து நின்று பேசுகிறவர்கள் யார் என்று உற்றுப் பார்த்தான். அவர்களில் ஒருவன் பைத்தியக்காரன்தான், சந்தேகமில்லை. அவனுடைய கம்மல் குரலை நன்றாக அடையாளங் கண்டு பிடிக்க முடிந்தது. அப்படியானால், இன்னொருவன் வந்தியத்தேவனாகத்தானே இருக்க வேண்டும்? ஆனால் அவன்மாதிரி தோன்றவில்லையே? இது என்ன அதிசயம்? இளவரசர் மதுராந்தகரைப்போல அல்லவா தோன்றுகிறது? தலையிலே இளவரசுக் கிரீடம்! தோளில் பீதாம்பரம்! கழுத்தில் முத்து மாலைகள்! கைகளிலும் ஆபரணங்கள்!.....மதுராந்தகருக்கும் இந்தப் பைத்தியக்காரனுக்கும் இடையில் என்ன அந்தரங்கப் பேச்சு இருக்க முடியும்?

அது ஏதாவது இருந்து விட்டுப் போகட்டும். தன்னுடைய ஜன்ம விரோதியான வந்தியத்தேவன் எங்கே? பக்கத்திலேதான் எங்கேயாவது இருக்க வேண்டும்; சந்தேகமில்லை. கையிலே வாளுடன் நடந்தவன் அவனேதான்! ஒரு வேளை, வேலி ஓரத்தில் குதிரைகளைப் பார்த்தோமே? அவற்றில் ஒன்றின் மீது ஓடுவதற்கு ஆயத்தமாக உட்கார்ந்திருக்கிறானோ? பைத்தியக்காரன் வரவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறானோ?... ஆகா! அப்படித்தான் இருக்க வேண்டும். அவர்கள் தப்பிச் செல்வதற்குக் காரணமானவர் மதுராந்தகர்தான் போலும்! மதுராந்தகருடைய தூண்டுதலினால்தான் வந்தியத்தேவன் கரிகாலரைக் கொன்றான் போலும்! இப்போது அவர்கள் தப்பித்துக் கொண்டு புறப்படுவதற்கு முன்னால், பைத்தியக்காரனிடம் மதுராந்தகர் ஏதோ செய்தி சொல்லி அனுப்புகிறார் போலும்! கடவுளே! இவையெல்லாம் மட்டும் உண்மையாக இருந்து, தன்னால் அவற்றை உண்மை என்று நிரூபிக்கவும் முடியுமானால்?......

இப்படியெல்லாம் பினாகபாணியின் கோணல் மூளை வேலை செய்தது. எல்லாவற்றுக்கும் குதிரைகளின் அருகில் போய்ப் பார்ப்பது நல்லது. அங்கே ஒரு வேளை வந்தியத்தேவன் தனியாக இருந்தால், தன் கையிலிருந்த குத்தீட்டியினால் ஒரு கை பார்க்கலாம். பிற்பாடு, இந்தப் பைத்தியக்காரனைப் பிடித்துப் பயமுறுத்தி உண்மையை அறியலாம்.

மதுராந்தகரும் பைத்தியக்காரனும் பேசிக் கொண்டு நின்ற மரத்திற்கு நேர் எதிரே வேலிக்கு அப்பால் குதிரைகள் நின்றன. அவர்களைத் தாண்டிக் கொண்டு அங்கே போக முடியாது. வழியில் தாமரைக் குளம் வேறு இருந்தது. ஆகையால் குடிசைக்குப் பின்புறத்தை அடைந்து அங்கே வேலியைத் தாண்டிப் போய்க் குதிரைகள் நின்ற இடத்தைச் சேர்வது தான் நல்லது.

பினாகபாணி அவ்வாறே சென்று குடிசையின் பின்புறத்தை அடைந்தபோது, அவனுடைய காதில் சேந்தன் அமுதன் குரலும் பூங்குழலியின் குரலும் விழுந்தன. பூங்குழலியின் மீது கோடிக்கரையில் முதன் முதலாக அவளைச் சந்தித்த போதே பினாகபாணி மோகம் கொண்டிருந்தான். அவன் காரணமாகவே வந்தியத்தேவன் மீது அவனுடைய குரோதம் அதிகமாயிற்று. பிற்பாடு, அவன் மந்தாகினியைக் கைப்பற்றிக் கொண்டு வரப் போனபோது, சேந்தன் அமுதனுக்கும் பூங்குழலிக்கும் ஏற்பட்டிருந்த நட்புரிமையைத் தெரிந்து கொண்டு மனம் புழுங்கினான். சேந்தன் அமுதன் மீதும் அவனுக்குக் குரோதம் உண்டாகியிருந்தது.

இப்போது சேந்தன் அமுதனும் பூங்குழலியும் மகிழ்ச்சி ததும்பிய மலர்ந்த முகங்களுடன் சல்லாபமாகப் பேசிக் கொண்டிருந்ததைப் பினகபாணி குடிசையின் சிறு பலகணி வழியாகப் பார்த்தான். சேந்தன் அமுதன்மீது அவன் குரோதம் கொழுந்து விட்டு எரிந்தது. இன்னும் சிறிது அருகில் சென்று அவர்களுடைய பேச்சைக் காது கொடுத்துக் கேட்டான். கலியாணம் செய்து கொண்டு கோடிக்கரை செல்லுவது பற்றிய அவர்கள் பேச்சு அவன் காதில் விழுந்தது. கலகலவென்று அவர்கள் இருவரும் சேர்ந்து சிரித்த ஒலி அவனுடைய குரோதக் கனலைப் பொங்கி எழச் செய்தது! சீச்சீ! கடைசியில் இந்த ஊமைப் பூக்காரியின் மகனு பூங்குழலியை அடையப் போகிறான்? அந்த எண்ணத்தைப் பினகபாணியினால் சகிக்கவே முடியவில்லை. வந்தியத்தேவனையும் பைத்தியக்காரனையும் அவர்களைப் பிடிக்கும் உத்தேசத்தையும் அச்சமயம் அடியோடு மறந்து விட்டான். முதலில், இந்தத் தேவாரம் பாடும் சேந்தன் அமுதனை இந்த மண்ணுலகத்திலிருந்து அனுப்பிவிட வேண்டும். மற்றக் காரியங்களை யெல்லாம் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம்......

இவ்விதம் முடிவு செய்து பலகணிக்கு வெளியே சற்று ஓரமாக நின்று குத்திட்டியைச் சேந்தன் அமுதன்மேல் எறியக் குறி பார்த்தான். தற்செயலாக அந்த ஈட்டியையும் அதை ஏந்திய கையையும் மட்டும் பார்த்து விட்ட பூங்குழலி 'வீல்' என்று கூச்சலிட்டாள். உடனே சேந்தன் அமுதனும் பலகணிப் பக்கம் திரும்பிப் பார்த்தான்! ஆகா! அவன் மார்பின் பேரில் ஈட்டியை எறியச் சரியான சந்தர்ப்பம்!

பினகபாணியின் கை ஈட்டியை எறிய ஓங்கியபோது பின்னால் தடதடவென்று காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது ஓர் ஆள் வெகு சமீபத்தில் வந்து விட்டான். இருளில் அவன் யார் என்று தெரியவில்லை. யாராயிருந்தாலும் சரி; தன்னுடைய உத்தேசத்தைத் தெரிந்து கொண்டு தன்னைப் பிடிப்பதற்கே ஓடி வருகிறான். சேந்தன் அமுதன்மீது எறிவதற்கு ஓங்கிய ஈட்டியை ஓடி வந்தவன் மீது செலுத்தினான். வந்தவன் கீழே விழுந்தான்.

அதே சமயத்தில் இரண்டு குதிரைகள் புறப்பட்ட சத்தம் கேட்டது. அவர்கள் வந்தியத் தேவனும் பைத்தியக்காரனுகவுமே இருக்க வேண்டும். அப்படியென்றால் இருட்டில் தன்னைத் தடுக்க வந்து தன் ஈட்டிக்கு இலக்கானது இளவரசர் மதுராந்தகரா யிருக்கக்கூடும்!......இந்த எண்ணங்கள் மின்னல் வேகத்தில் பினகபாணியின் உள்ளத்தில் தோன்றி அவனுக்குப் பயங்கரத்தை உண்டாக்கின.

குடிசைக்கு உள்ளே யிருந்து 'ஆகா!' 'ஐயோ!' என்ற குரல்கள் எழுந்தன. கதவைத் திறந்து கொண்டு வெளியில் யாரோ வரும் சத்தமும் கேட்டது.

பினகபாணி ஓட்டம் பிடித்தான். அங்கிருந்து தப்பி ஓடுவதுதான் அப்போது முதன்மையாக அவன் செய்ய வேண்டிய காரியம். குதிரைகள்மீது ஓடியவர்களைத் தொடர்ந்து போய்ப் பிடிப்பது இரண்டாவது காரியம். தலைகால் தெரியாமல் பினகபாணி விழுந்து அடித்து ஓடினான்.

* * *

சில கண நேரத்துக் கெல்லாம் பூங்குழலியும் சேந்தன் அமுதனும் விளக்குடன் வெளியில் வந்தார்கள். வந்தியத்தேவன் ஈட்டியால் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடப்பதைக் கண்டார்கள். அவர்கள் அடைந்த பயங்கரத்தையும் துயரத்தையும் சொல்லி முடியாது. மிக்க பரிவுடன் அவனை இருவரும் பிடித்துத் தூக்கிக் கொண்டு போய்க் குடிசைக்குள் சேர்த்தார்கள். அவன் இறந்து விடவில்லை என்று அறிந்து சிறிது ஆறுதல் பெற்றார்கள்.

வாணி அம்மை முன்னொரு தடவை கந்தமாறனுக்குச் செய்த பச்சிலை வைத்தியத்தை இன்று காயம் பட்ட வந்தியத்தேவனுக்குச் செய்யும்படி நேர்ந்தது.

## அத்தியாயம் 64

## "உண்மையைச் சொல்!"

ஆழ்வார்க்கடியானை வந்தியத்தேவன் கட்டிப் போட்ட படகு ஆற்றோட்டத்தோடு சிறிது தூரம் மிதந்து சென்று கரையிலே ஒதுங்கியது. ஆற்று வெள்ளத்தில் தள்ளப்பட்ட வீரர்கள் இருவரும் தட்டுத் தடுமாறிக் கரை சேர்ந்து அந்தப் படகு ஒதுங்கி யிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஆழ்வார்க்கடியானையும் மற்றொருவனையும் கட்டவிழ்த்து விட்டார்கள். ஆனால் ஆழ்வார்க்

கடியான் படகிலிருந்து இறங்கவில்லை. அவன் படகிலேயே கட்டுப்பட்ட மாதிரியே இருந்து கொண்டு மற்றவர்களை மறைவில் இருக்கும்படி சொன்னான்.

உண்மை யென்னவென்றால், வந்தியத்தேவனும் கருத்திருமனும் தப்பித்துப் போய்விட வேண்டுமென்பதே ஆழ்வார்க்கடியானுடைய நோக்கமாயிருந்தது. முதன் மந்திரியின் விருப்பமும் அதுவே என்பதை அவன் தெரிந்து கொண்டிருந்தான். அவ்விருவரும் அச்சமயம் தஞ்சையில் இருப்பதால், பழைய சம்பவங்கள் பலவற்றைக் குறித்து ஆராய்ச்சி நடத்த வேண்டியதாக ஏற்படும். வந்தியத்தேவன் குற்றமற்றவன் என்பது பற்றி முதன் மந்திரிக்கும் ஆழ்வார்க்கடியானுக்கும் சந்தேகமே இல்லை. ஆயினும், அவன் மீது விசாரணை நடத்துவதனாலேயே பல சங்கடங்கள் ஏற்படும்; பலர் மனவருத்தம் அடையும்படி நேரிடும். அந்தப் பேச்சு மக்களின் காதுக்கு எட்டும்படி செய்வதே கேடாக முடியும். அருள்மொழி வர்மர் ஓர் அருமை நண்பனை இழக்கவும் சோழ ராஜ்யம் ஒரு சிறந்த வீர ராஜதந்திரியை இழக்கவும் நேரிடும். வந்தியத்தேவனைப் பற்றிக் குந்தவையின் மனோநிலையையும், மணிமேகலையின் வெளிப்படையான ஆர்வத்தையும் முதன் மந்திரி அறிந்திருந்தார். எல்லாவற்றையும் உத்தேசித்துத்தான் வந்தியத் தேவன் தப்பி ஓடுவதற்கு உதவி செய்வதே அச்சமயம் உசிதமானது என்று தீர்மானித்தார்.

சேந்தன் அமுதனுடைய நந்தவனத்தில் குதிரைகளைக் கண்டு பிடித்த பிறகு வந்தியத்தேவனும் கருத்திருமனும் இந்த வடவாற்றின் கரையோடுதான் பிரயாணம் செய்வார்கள் என்று திருமலை நம்பி எதிர்பார்த்தான். கருத்திருமன் கூறியது போல், அந்த ஆற்றங்கரையோடு சென்றால், பாமணி நதியில் அது கலக்கும் இடம் வரையில் போகலாம். கோடிக் கரை வழியில் பாதி தூரம் சென்றாகிவிடும். ஆகவே அந்த வழியிலேதான் அவர்கள் வருவார்கள். போகும்போது அவர்களைத் தடுத்து நிறுத்தி வந்தியத் தேவனிடம் ஒரு செய்தி சொல்லி அனுப்ப வேண்டுமென்று ஆழ்வார்க்கடியான் எண்ணிக் கொண்டு அங்கு காத்திருந்தான்.

அவன் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கொஞ்சம் நேரம் அதிகமாக ஆகிவிட்டது. "நாம் எண்ணியது தவறு; வேறு வழி போயிருக்க வேண்டும்; அல்லது ஏதேனும் எதிர்பாராதது நேர்ந்திருக்க வேண்டும்" என்று தீர்மானித்துத் திருமலை படகிலிருந்து கரையில் இறங்க எத்தனித்தபோது, தூரத்தில் குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. எனவே, மறுபடியும் கட்டிப் போடப்பட்டவனைப் போல் கிடந்தான்.

குதிரைகள் நெருங்கி வந்ததும், "ஓகோ! யார் அங்கே? கொஞ்சம் நில்லுங்கள்! என்னைக் கட்டவிழ்த்து விட்டுப் போங்கள்!" என்று கூவினான்.

ஆயினும் குதிரைகள் நிற்காமலே சென்றன. முதலில் வந்த குதிரையின் மேல் இருந்தவன் கருத்திருமன்தான் என்பதைக் கண்டான். எனவே, இரண்டாவது குதிரை நெருங்கிய போது "வந்தியத்தேவா! வந்தியத் தேவா! கொஞ்சம் நில்லு!" என்று பெருங் கூச்சலிட்டான்.

இரண்டாவது குதிரையும் நிற்காமல் போயிற்று. அப்போது அதன் மேலிருந்தவனை ஆழ்வார்க்கடியான் பார்த்தான்; கரை காணாத அதிசயத்தில் ஆழ்ந்தான். "என் கண்களில் ஏதோ கோளாறு இருக்கிறது; என் அறிவு என்னை மோசம் செய்கிறது" என்றான்.

அவனைக் கடந்து அப்பால் சென்ற குதிரைகள் சிறிது தூரம் போன பிறகு நின்றன. ஒரு குதிரை மட்டும் திரும்பி வந்தது. அதன் மேலிருந்து கருத்திருமன் இறங்கினான். படகின் அருகில் வந்தான். "பாவம்! இன்னுமா கட்டுப் பட்டிருக்கிறாய்? எங்களுக்கு எவ்வளவோ பெரிய உதவி செய்தாய்! அதற்குப் பிரதியாக உன்னைக் கட்டவிழ்த்து விட்டாவது போகிறேன். ஆனால் உன் தந்திரம் எதையும் என்னிடம் காட்டாதே!" என்று சொல்லிக் கொண்டே அவன் குனிந்த போது, திருமலை திடீரென்று கரையில் பாய்ந்து அவன் கழுத்தைப் பிடித்துக் கீழே தள்ளி விட்டான்.

இதைச் சிறிதும் எதிர்பாராத கருத்திருமன் சிறிது நேரம் திகைத்துச் செயலிழந்து கிடந்தான்.

பிறகு, "ஐயோ! அப்பா! என்னை விட்டு விடு! உனக்குப் புண்ணியம் உண்டு. நல்லது செய்ய வந்தவனுக்கு இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா? அதோ உன் சிநேகிதன் வந்தியத்தேவன் காத்திருக்கிறான். ஆம்; அவன் உன்னைத் தன் அருமை நண்பன் என்று பாராட்டிக் கொண்டிருக்கிறான். இங்கு வந்து உன் காரியத்தைப் பார்த்தால் என்ன நினைப்பான்? நீ உயிரோடு

தப்ப முடியாது! என்னை விட்டு விடு. அப்பனே, விட்டு விடு!" என்று பரிதாபமாகப் புலம்பினான்.

ஆழ்வார்க்கடியான், "அடே! எவ்வளவு துணிச்சலாகப் பொய் சொல்லுகிறாய்? அந்தக் குதிரையின் மேல் இருப்பவன் யார்? உண்மையைச் சொல்லு! சொன்னால் விட்டு விடுகிறேன். இல்லாவிட்டால் அடுத்த நிமிஷம் உன் உயிர் உடம்பில் இராது!" என்றான்.

"ஆம், ஆம்! பொய்தான் சொன்னேன். உன்னை ஏமாற்ற முடியாது தான். அந்தக் குதிரையில் இருப்பவன் வந்தியத் தேவன் அல்ல; இளவரசர் மதுராந்தகர். என்னை விட்டு விடு! அவரிடம் உனக்கு வேண்டிய பரிசுகள் வாங்கித் தருவேன்!"

"சரி, சரி! பரிசுகள் இருக்கட்டும்! வந்தியத்தேவன் எங்கே?"

"அந்த நந்தவனக் குடிசையில் குதிரையிலிருந்து இறங்கிப் போனான். அப்புறம் அவனைக் காணவில்லை."

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

"வந்தியத்தேவனுடன் நான் போக உத்தேசித்த இடத்துக்குத்தான்."

"அதாவது இலங்கைத் தீவுக்கு."

"ஆமாம்!"

"மதுராந்தகர் எதற்காக இலங்கைக்கு வருகிறார்?"

"எனக்கு என்ன தெரியும்? அவரைக் கேள்! என்னுடன் வருகிறேன் என்று கிளம்பி வருகிறார்."

ஆழ்வார்க்கடியான் கருத்திருமனுடைய நெஞ்சை ஒரு அமுக்கு அமுக்கி, "உண்மையைச் சொல்! மதுராந்தகன் யாருடைய மகன்!" என்று கேட்டான்.

"இது என்ன கேள்வி? செம்பியன் மாதேவியின்...இல்லை, இல்லை! நெஞ்சை அமுக்காதே! என் உயிர் போய் விடும்! ஊமை மந்தாகினியின் மகன்."

"மதுராந்தகனின் தகப்பன் யார்? உண்மையைச் சொல்! இல்லாவிட்டால், உயிரோடு தப்ப மாட்டாய்!"

கருத்திருமன் இதற்குப் பதில் மிக மெல்லிய குரலில் சொன்னான்.

"நல்லது; பிழைத்தாய்! கடைசியாக இன்னும் ஒன்று மட்டும் சொல்லி விடு! சேந்தன் அமுதன் யாருடைய மகன்?"

"என்னை ஏன் கேட்கிறாய்? நீதான் முன்னமே தெரிந்து கொண்டாயே?"

"கண்டராதித்தர் — செம்பியன் மகாதேவியின் மகன்தானே?"

"ஆமாம்; ஆனால் அவன் இன்று உயிரோடிருப்பதற்கு நான்தான் காரணம். செவிடும் ஊமையுமாகிய வாணி அந்தக் குழந்தை செத்துப் போய்விட்டதென்று எண்ணிப் புதைக்கப் பார்த்தாள். குழந்தை அழும் குரலைக் கேட்டு நான் காப்பாற்றினேன். அதற்காகவாவது என்னை இப்போது உயிரோடு விட்டு விடு!"

"உண்மையில், அதற்காகவேதான் உன்னை இப்போது உயிரோடு விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஆழ்வார்க்கடியான் எழுந்தான்.

கருத்திருமன் பாய்ந்து ஓடிக் குதிரை மீது ஏறிக் கொண்டான்.

இரண்டு குதிரைகளும் அந்த மழைக் கால இருட்டில் ஆற்றங் கரையோடு பாய்ந்து சென்றன. (தொடரும்)

# சங்கீத தேவதைகள்

"பண்ணில் நோக்கும் பரா அமுதை."

கடவுளை எங்கே காணலாம்!

இது இன்று நேற்றல்ல; பல நாட்களாக, பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கேட்கப்பட்டு வரும் கேள்வி. இதற்குப் பலர் பலவிதமாகப் பதில் சொல்லி வந்திருக்கிறார்கள். கவிச் சக்கரவர்த்தி கம்பர் மேலே கண்ட விதத்தில் பதில் கூறி யிருக்கிறார்.

பேர் ஆனந்தரூபனை இறைவனைச் சங்கீதத்தின் வாயிலாகக் காணலாம் என்று கூறியிருக்கிறார்.

சங்கீதம் என்றால் அதில் வாய்ப்பாட்டு உண்டு, யாழிசை யுண்டு, புல்லாங்குழலோசையுண்டு, ஜாலரா உண்டு, மத்தளம் உண்டு, பரதநாட்டியம் உண்டு. இன்னும் எத்தனை எத்தனையோ!

இப்படிப் பல வாத்தியங்கள் மூலமாகவும், பாட்டின் மூலமாகவும், நாட்டிய மூலமாகவும் நம்மவர்கள் இசைப் பேரின்பத்தை அநுபவித்து வந்திருக்கிறார்கள்.

நம் முன்னோர்கள் சங்கீதக்கலையை எப்படி யெல்லாம் போற்றி வந்தார்கள் என்பதை அஜந்தா குகை ஓவியங்களில் அழியா வண்ணத்தில் தீட்டப்பட்டிருக்கும் சித்திரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்விதம் அட்டைச் சித்திரத்தில் தோன்றும் சங்கீத நாரீமணிகள் நிற்கும் நிலைகளைப் பார்க்கும்போது 'லயம்' என்று சொல்லப்படும் வார்த்தைக்குப் பொருள் விளங்குகிறது!

'பண்ணில் நோக்கும் பரா அமுது' என்று கூறப்படுவதின் பொருளும் விளங்குகிறது!

சென்னையில் சங்கீத 'சீசன்' ஆரம்பமாகிவிட்டது. செவிகளின் மூலம் சங்கீதம் பருகும் நேயர்களுக்கு, கண்களால் சங்கீத தேவதைகளைக் காணும் பேற்றை இந்த அஜந்தா சித்திரங்கள் அளிக்கிறது!


நமது சித்திரக்காரர் மணியம் அஜந்தா ஓவியங்களை அழகாகப் பெயர்த்துத் தீட்டியிருக்கிறார்.



# நான் கிளாக்ஸோவை சிபார்சு செய்கிறேன்

உஷ்ண தேசங்களில் உள்ள குழந்தைகளுக்கென்றே பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ள கிளாக்ஸோ மிகவும் சுத்தமான பால் உணவு. மேலும் ஒழுங்காக சமநிலையாக்கப்பட்டது. புதிய பசும்பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட கிளாக்ஸோவில் அயமும், விடமின் 'டி' யும் சேர்ந்திருப்பதால், இரத்தசோகை (அனீமியா), ரிக்கெட்ஸ் போன்ற வியாதிகளிலிருந்து பாதுகாக்கிறது. கிளாக்ஸோ தாய்ப்பாலைப்போல் இருப்பதால் அது கொடுக்கப்படும் குழந்தைகள் ஆரோக்கியமாகவும், நடகாத்திரத்தோடும், குதூகலமாகவும் வளருகின்றனர்.

**Glaxo**



கிளாக்ஸோ குழந்தைகளுக்கான சிறந்த உணவு

| | |
|---|---|
| **பாரெக்ஸ்** | தாய்மார்களுக்கு ஓர் முக்கிய செய்தி! குழந்தைகளுக்கு முதலாவதாக கொடுக்க வேண்டிய கெட்டியான உணவு இந்தியாவின் எப்பகுதியும் விற்கப்படுகிறது. |

கிளாக்ஸோ லெபாரட்டரீஸ் (இந்தியா) லிமிடெட் பம்பாய், கல்கத்தா, மதராஸ்




"இது சுலபம்...

லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகுடன் விளங்குங்கள்"

என்று கூறுகிறார்

ருக்மணி தேவி


ருகமணி தேவி கூறுவதாவது: "நான் வழக்கமாக லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து பெறும் சரும பாதுகாப்பை ஒருபொழுதும் தவற விடமாட்டேன். லக்ஸ் டாய்லட் சோப்பின் சருமத்திற்கு ஊட்டமளிக்கும் சக்தி என் சருமத்தில் அற்புதமாறுதலை ஏற்படுத்தியிருப்பதைக் காண்கிறேன் ... சருமத்திற்கு புது சோபையும், மகிழ்ச்சிதரும் வழவழப்பும் அளித்திருக்கிறது."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 385-X30 TM



# சலனம்

சரோஜா ஸ்ரீநிவாஸன்

சந்தானம் கொல்லைப்புறம் குளிக்கச் சென்றபோது கிணற்றடியிலிருந்து எழுந்த பேச்சுக் குரலைக் கேட்டு இரேழியிலேயே தயங்கி நின்றான். அதுவும் அந்தப் பெண்கள் வம்புப் பேச்சில் அவன் பெயரும் அடிபட்டுக் கொண்டிருந்தது என்றால் அவன் நிற்காமல் என்ன செய்வான்? அடுத்த வீட்டு அலமுவும், பின் கட்டில் குடியிருந்த விசாலம் மாமியும்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“வரவர ரொம்ப மோசமாகத்தான் போய் விட்டது அலமு. நேற்றைக்கு மத்தியானம் ஒரு கரண்டி காப்பிப் பொடி கடன் கேட்கலாம் என்று போயிருந்தேன். எனக்கு ஏண்டாப்பா போனேனும் என்று வெட்கமாய்ப் போய் விட்டது. கொஞ்சமாவது அடக்க ஒடுக்கமில்லாமல் அந்தப் பிள்ளைக்குச் சரியாக அவளும் நாற்காலியிலே உட்கார்ந்துகொண்டு ஏதோ கதை வாசித்துக் காண்பித்துக் கொண்டிருந்தாள். என்ன சிரிப்பு, என்ன பேச்சு, கும்மாளம்! என்னதான் வயசு சமமா யிருக்கட்டுமே, அதற்காக மச்சினன் கிட்டே இப்படியா ஒரு பெண் நிதானமில்லாமல் பழகும்? இது வெட்கக் கேடு.” இது பின் கட்டில் குடியிருக்கும் விசாலத்தின் குரல்.

“ஏன் மாமி! அந்தப் பெரிய பிள்ளைக்குத்தான் புத்தி எங்கே போச்சு? தம்பி மேலே எவ்வளவுதான் பிரியம் இருக்கட்டும், அதற்காகப் பெண்டாட்டியை விகல்பமில்லாமல் இவ்வளவு தூரத்துக்கு விட்டுவைக்கணுமா?” இது அடுத்த வீட்டு அலமுவின் குரல்.

“அந்தப் பிள்ளை தங்கக் கம்பி யல்லவா? அவனுக்கு என்ன தெரியும்? அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு ஒன்பது மணிக்கு ஆபீசுக்குப் போனால், சாயங்காலம் ஆறு மணிக்குத்தான் திரும்பி வரான். அப்புறம் வீட்டிலே இவா ராஜ்யம்தானே! அடக்கி ஆள மாமியாரா, நாத்தனாரா?”

இதற்குமேல் சந்தானத்தால் அவ்விடத்தில் பொறுமையுடன் நின்று கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. கோபம், ஆத்திரம், அவமானம் முதலிய உணர்ச்சிகள் அவன் உள்ளத்தில் குமுறி எழுந்தன. நாலுபேர் வம்பளக்கும் நிலைமையில் தன் கௌரவமும், அந்தஸ்தும் குடித்தனமும் போய்க் கொண்டிருக்கும் ரீதி அவன் நெஞ்சிலே ருத்திராகாரமான கோபத் தீயை எழுப்பிற்று. மறுகணம் இவ்வளவுக்கும் காரணமான தன் மனைவி ருக்குவின் மீதுதான் அவன் கோபம் பாய்ந்து சென்றது. குளிக்க மனமில்லாதவனாய் ‘விருக்’கென்று முன் கட்டை நோக்கித் திரும்பி வேகமாக நடந்தான் சந்தானம்.

சந்தானம் ருத்திர மூர்த்தியாய்க் கூடத்தில் நுழைந்தபோது ருக்குமணி பீரோவிலிருந்து ஜிப்பா ஒன்றை எடுத்துப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு அருகில் நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்த ராமு ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தான். ஜிப்பாவில் பொத்தானைப் பொருத்தி அதை ராமுவிடம் கொடுத்தாள் ருக்கு. ராமு அதைக் கைநீட்டி வாங்கிக் கொண்டான். சலன

மடைந்த உள்ளத்துடன் வந்து நின்ற சந்தானத்துக்கு ஏனோ ருக்குவின் 'களி'ரென்ற சிரிப்பும், ராமுவின் செய்கையும் எரியும் தீயில் எண்ணெயை விட்டதுபோல் இருந்தது. ருக்குவைச் சுட்டு எரித்து விடுவது போல் ஒரு பார்வை பார்த்தான். பொங்கியெழுந்த ஆத்திரத்துடன் கையிலிருந்த சோப்புப் பெட்டியைப் படீரென்று தரையில் விசிறி எறிந்தான். மூடி நசுங்கிப் போன சோப்புப் பெட்டி ருக்குவின் காலடியில் வந்து விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் ருக்கு. சந்தானத்தின் கோபம் ஜ்வலிக்கும் முகத்தைக் கண்டதும் ருக்கு நடு நடுங்கிப் போனாள். சந்தானம் 'விர்'ரென்று தன் அறைக்குத் திரும்பினான்.

“என்ன மன்னி அது? கீழே ஏதோ விழுந்தாற் போலிருக்கே?” என்று கேட்ட ராமுவுக்குப் பதிலளிக்காமல் சந்தானத்தைப் பின் தொடர்ந்து அவன் அறைக்குப் போனாள் ருக்குமணி. சந்தானம் கண்ணாடி முன் தலை வாரியபடி உடைகள் அணிந்து கொண்டிருந்தான். ருக்குவுக்கு ஒன்றும் புரியவில்லை. பயந்தபடியே, “ஏன் குளிக்கவில்லையா? திரும்பி வந்து விட்டீர்களே? சாப்பிடாமல் அதற்குள்ளாகவா ஆபீஸுக்குக் கிளம்புகிறீர்கள்?” என்று கேட்டாள்.



சந்தானம் தலையை வாரியபடியே திரும்பினான். “ஏன் ராணியம்மா! முதலில் சின்ன துரையினுடைய சிசுருஷைகள் எல்லாவற்றையும் சாவகாசமாகச் செய்து விட்டு என்னைக் கவனித்துக் கொள்ளலாமே! என்னைப் பற்றி ஏன் வீணாகச் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும்? போய் 'அவரை'ப் பாருங்கள் முதலில்” என்றான் உஷ்ணமாகவே. அவன் குரலில் ஏளனமும் இடக்கும் கலந்து ஒலித்தன.

பிரமித்துப் போய் நின்றாள் ருக்குமணி. சந்தானத்தின் இந்த விபரீதமான பேச்சு ஒருநாளுமில்லாத புதுமையான போக்கு அவள் உள்ளத்தைக் கூரிய வாள் கொண்டு அறுப்பது போல் தாக்கிற்று.

“உங்களுக்கு என்ன, பைத்தியம் பிடித்து விட்டதா? என்ன கோபம் இன்றைக்கு? அர்த்தம் இல்லாமல் கன்னா பின்னா வென்று பேசிக் கொண்டு” என்றாள் ருக்குமணி.

“ஹும் என்ன கோபமா? என் மானம் உன்னால் கப்பலேறிக் கொண்டிருக்கிறது. நீயும் அவனும் அடிக்கிற கூத்தைப் பார்த்து அக்கம் பக்கமெல்லாம் சிரிக்கிறது. வெளியே தலைகாட்ட முடியவில்லை.” பற்களை நறநற வென்று கடித்தான் சந்தானம். ருக்குவுக்கு விஷயம் புரிந்து விட்டது. அவள் அடியுண்ட புலியாகி விட்டாள். “ஊரார் முட்டாள்தனமாகச் சிரித்தால் ஆறு வருஷங்கள் பழகிய நீங்கள்கூட அதைக் கேட்டுக் கொண்டு வந்து விட்டீர்களாக்கும்...... உங்கள் மூளை பிரமாதம்.” அதற்குமேல் ருக்குமணி பேசவில்லை.

பளீரென்று அவள் ரோஜா இதழ்க் கன்னத்தில் மிருகத்தனமாக ஓர் அறை விழுந்தது.

* * *

கடிகாரம் பதினொரு மணி அடித்து ஓய்ந்தது. சந்தானம் காரியாலயத்துக்குச் சென்று வெகு நேரமாகி விட்டது. தம்பதிகளிடையே ஏற்பட்ட பூகம்பத்தின் காரணத்தை ராமுவால் பூராவாக அறிய முடியவில்லை. அண்ணாவுக்கும் மன்னிக்குமிடையே ஏதோ மனஸ்தாபம் ஏற்பட்டது என்பது மாத்திரம் ஓரளவு அவனுக்குத் தெரிந்திருந்தது. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவனாய் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தான்.

கண்ணீர் பெருக்கியபடியே சமையலறை வாசற்படியில் தலை சாய்த்துப் படுத்துக் கொண்டிருந்தாள் ருக்குமணி. அவள் நெஞ்சே எரிமலையாகக் குமுறி வெடித்துக் கொண்டிருந்தது. சந்தானம் அவள் மீது சாட்டிய அபாண்டப் பழியைக் கேட்டு அவள் நெஞ்சு பொறுக்கவில்லை. அவளது ஆறு வருஷப் பிரயத்தனங்களெல்லாம் இன்று வியர்த்தமாகி விட்டன. யாருடைய உள்ளத் திருப்திக்காக அவள் தன் சுகங்களையெல்லாம் மறந்து பாடுபட்டாளோ அவர் கொஞ்சமும் கூசாது, நெஞ்சிலே உணராது அவளுக்குச் சூட்டிய பட்டம் இது. உன்னத பரிசு இது. ருக்குவின் நெஞ்சு துடி துடித்தது. அவள் கண் முன் அவள் திருமண தினப் படலம் பரந்து விரிந்தது.

சந்தானத்தைக் கைப்பிடித்து மாலையிட்டு மணந்த அன்று அவர்கள் முதற் சந்திப்பின் போது, “ருக்கு! நீ என்னை மாத்திரம் வாழ்விக்க என் வாழ்வில் நுழையவில்லை என்பதைப் பூரணமாக இன்று முதல் புரிந்து கொள். உனக்குத் தெரிந்திருக்குமென நினைக்கிறேன். என் ஒரே அருமைத் தம்பி ராமுவையும், உன் உடன்பிறந்த சகோதரனாகக் கவனித்துப் பார்த்துக் கொள்ள வேண்டிய மகத்தான பொறுப்பு முழுவதும் இனி உன்னைத்தான் சார்ந்தது. இரு கண்களையும் இழந்து ஒளியைக் காணாது இருண்ட வாழ்வையே கண்டு கொண்டிருக்கும் அவனுக்கு இனி நீதான் வாழ்விக்க வந்த தெய்வமாக விளங்க வேண்டும். நீயே அவன் தாய், சகோதரி, குரு எல்லாம். அவன் சுக சௌகரியங்களின் பூரணப் பங்கும் உன்னையே சாரும். வாழ்வின்

# அரவிந்த்

ஜவுளிகளில் புகழ்பெற்ற பெயர்

இப்பொழுது அளிக்கின்றது...

## ·ஸான்போரைஸ்ட்·
## துணிமணிகளும் பலவர்ண பிரிண்ட்டுகளும்

"அரவிந்த்" ஸான்போரைஸ்ட்–சுருக்கப்பெற்ற

–ஷர்ட்டிங்–பாப்ளின் –கோட்டிங் இப்பொழுது கிடைக்கும்.

பலவர்ண பிரிண்டுகள்–எட்டு வர்ணங்கள் கொண்டுள்ள–வாயில்கள்–கேம்பிரிக்–பாப்ளின்.

Arvind

QUALITY FABRICS

**அரவிந்த் மில்ஸ் லிமிடெட் · அமதாபாத் 2.**

---

ஏஜண்டுகள்:

அஜித் பாய் ஜயந்திலால் & கம்பெனி
5, டெங்கு தெரு, சென்னை-76, மே மாசட் வீதி, மதுரை & விஜயவாடா

யு. என். ஷர்மா
சிக்பேட், பெங்களூர் சிட்டி

கணேஷ்மல் பிரதாப்மல் & கம்பெனி
கார் தெரு, பெல்லாரி

நாக்ஜி புருஷோத்தம் & கம்பெனி லிமிடெட்
பெரிய கடைத் தெரு, த. பெ. 36, கோழிக்கோடு

FZY-34 TAM.

# உலகின் மகோன்னத சமன ஔஷதம்




**வெட்டுப்புண், தீப்புண், சிராய்ப்பு,**


**காயங்களுக்கு மிகுந்த பாதுகாப்புள்ள மிக நிச்சயமான சிகிச்சை**

விபத்துகளை முன்னிட்டு ஜாம்-பெக்கை எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள். ஜாம்-பெக் இதமளிப்பது விஷத்தடுப்பு குணமுள்ளது. காயங்களில் அபாயகரமான கிருமிகள் பரவாமல் தடுக்கும் ஜாம்-பெக் சீக்கிரத்தில் காயங்களை ஆற்றும். இதர மதிப்புவாய்ந்த ஔஷதப் பொருள்களைத் தவிர ஜாம்-பெக்கில் க்ளோரோபில் சேர்ந்திருப்பதால் அதன் சமனகுணம். தசை நார் போஷாக்கு மற்றும் இதர பலன்களும் கிடைக்கும். ஜாம்-பெக்கை எக்ஸிமா முதலிய சரும நோய்களின் நிவாரணத்திற்கும் வலியுடன் சோர்வுற்று ரணமடைந்த கால்களுக்கு சமனமூட்டி குணமாக்கவும் மூலநோயின் வலியையும் அரிப்பையும் நிறுத்தவும் உபயோகிக்கலாம். ஜாம்-பெக்கில் மிருகக் கொழுப்பு சேரவில்லை என்பதற்கு உத்திரவாதம்.

**ஜாம்-பெக்—எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.**

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள் : தாதா & கம்பெனி, பார்க்டவுன்

# B. I. S. N. கம்பெனி லிமிடெட்



## S. S. "ரஜுலா"

சென்னை - நாகப்பட்டினம் - பினங்கு - சிங்கப்பூர்

சென்னையிலிருந்து: 10 ஜனவரி 1954 - நாகப்பட்டினத்திலிருந்து: 11 ஜனவரி 1954

வாக்கில் மேற்படி கப்பல் புறப்படும் (இது மாறுதலுக்குட்பட்டது)

ஸஹரான் இடவசதி பூர்த்தியாகிவிட்டது. பெர்த் வசதியற்ற டிக்கட்டுகளை போஜனம் உள்படவோ போஜனமின்றியோ கம்பெனியிலிருந்து நேராக வாங்கிக்கொள்ளலாம்.

எல்லா பிரயாணிகளும் அவரவர் போகவிரும்பும் துறைமுகத்தில் பிரவேசிக்க அனுமதிப்பதாக மலேயா பெடரேஷன் அல்லது சிங்கப்பூரைச் சேர்ந்த இமிகிரேஷன் அதிகாரிகளால் அளிக்கப்பட்ட 'என்ட்ரி பர்மிட்' அல்லது 'ரீ-என்ட்ரி பர்மிட்' அல்லது பாஸ்போர்ட் எண்டார்ஸ்மெண்ட் வாங்கி வரவேண்டியது அவசியம்.

எல்லா ஸஹரான் மற்றும் பெர்த் வசதியற்ற பிரயாணிகளும் அவரவர் வசிக்கும் பிரதேசத்தைச் சேர்ந்த வருமானவரி அதிகாரியிடம் "A" பாரம் வாங்கி (வெளிநாட்டுப் பிரிவு) வருமானவரி அதிகாரிகளில் ஒருவரிடம் வருமானவரி க்ளியரன்ஸ் சர்டிபிகேட் அல்லது வரி விலக்கு சர்டிபிகேட் பூர்த்திசெய்து வாங்கிக் கொடுக்கவேண்டும்.

கார்கோ சாமான்கள் பினங்கு, போர்ட்ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூருக்கு நேராக இறக்குமதி செய்யவும் பாங்காக்கிற்கு சிங்கப்பூரில் கப்பல் மாற்றியனுப்பவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரயாண புக்கிங், கார்கோ புக்கிங் சம்பந்தமான இதர விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

பின்னி & கோ. (மதராஸ்) லிட்.
7, அரமனேக்காரத் தெரு, சென்னை-1

மதுரா கம்பெனி லிமிடெட்.
முதல்லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம்.

சரிவை அவன் உணராதபடி அவனுக்கு ஊன்றுகோலாக இருந்து, அவன் மனம் கோணாமல் நடந்து கொண்டால்தான் நீ என்னுடைய முழு அன்புக்கும், பிரேமைக்கும் பாத்திரமாக முடியும். அதுதான் என் வாழ்வின் லட்சியம்'' என்று ருக்குமணியின் இரண்டு கரங்களையும் ஆதரவோடு பற்றிக் கொண்டு மிகுந்த உணர்ச்சியோடு பேசினான் சந்தானம்.

ருக்குமணி கணவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களிலே அசாதாரண ஒளி பிரகாசித்தது.

"உங்கள் லட்சியமே என் வாழ்வின் லட்சியமுமாகும். இன்று முதல் ராமு என்னுடையவனாகி விட்டான். உங்கள் உள்ளத்தைக் குளிர்வித்து, என்றும் உங்களுடையவளாகவே, உங்கள் அன்புக்குப் பாத்திரமானவளாக இருப்பேன். என் முயற்சியில் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என நம்புகிறேன்'' என்று கூறியபோது வைரம் பாய்ந்த உறுதி ருக்குவின் குரலில் ஒலித்தது.

சந்தானத்தின் உள்ளத்தில் சந்தோஷமும் நிம்மதியும் பிறந்தது.

சந்தானத்துடன் இணைந்து வாழ்ந்த இந்த ஆறு வருட இன்ப வாழ்வில் ருக்குமணி தன் கடமையை ஒவ்வொரு கணமும் உணர்ந்து நிறைவேற்றி வந்தாள். ராமுவின் அன்பு உள்ளமும், கபடமற்ற பேச்சும் ருக்குவை ஆகர்ஷித்தன. ராமு தனக்கு ஏற்பட்டுள்ள ஊனத்தை உணராதபடி தினசரி தேவைகள் அனைத்தினாலும் அவனைத் திருப்தி செய்து வந்தாள். சிறுவனாக இருந்த ராமுவுக்கு உலகத்தை ஓரளவு அறிந்துகொள்ளக் கூடிய அறிவை ஊட்டி அவனை இன்று மனிதனாக்கி விட்டாள் ருக்கு. அவள் லட்சியம் கைகூடி விட்டது. சந்தானம் லட்சிய மனைவியை அடைந்து விட்டதாகப் பூரித்தான்.

ஆனால் இன்று சந்தானம் அவளுக்கு அளித்த பரிசு...?

சமூகம் சந்தானத்தின் வெள்ளை உள்ளத்தில் சலனத்தை ஏற்படுத்தி விட்டது. தம்பதிகளிடையே புயலைக் கிளப்பி, ருக்குவின் அன்பு இதயத்தை ஒடித்து விட்டது.

ருக்கு பொருமினாள். அவள் மனம் கசந்து போய் விட்டது. சமூகத்தின் மீதும், சந்தானத்தின் மீதும் அவளுக்கு எழுந்த எல்லையற்ற கோபம் கடைசியாக ஏனோ காரணமில்லாமல் ராமுவின் மீது திரும்பிற்று. அன்று முழுவதும் ராமுவிடம் அவள் பேசவில்லை.


சாயங்காலம் மணி ஐந்திருக்கும்.

"மன்னி! இங்கே கொஞ்சம் வாயேன்.''

ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த ராமு குழைவான குரலில் கூப்பிட்டான். சமையலறையில் கொதிக்கும் வெந்நீரை வடிகட்டியில் ஊற்றிக் கொண்டிருந்த ருக்குவின் காதுகளில் ராமுவின் குரல் தெளிவாக விழுந்தது.

"மன்னி! நான் கூப்பிடறது காதில் விழவில்லையா? மணி ஐந்து. ஏன் இன்னும்

## உதய ராகம்!



காப்பி போடவில்லை, என்ன பண்ணுகிறாய்?" என்று பலமாகக் கேட்டான் ராமு. மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு ராமுவின் கூக்குரலுக்குப் பதிலளிக்காமல் பரபர வெனக் காப்பியைக் கலந்தாள் ருக்கு.

"மன்னியோ ஒவ்......"

"மன்னிக்கு என்ன கொள்ளை போறதோ தெரியவில்லை. யாருக்கு உழைத்து என்ன புண்ணியம்? குருடையும் கூனையும் கட்டிக் கொண்டு பாடுபட்டு நல்ல பேர் இல்லை" என்று முணு முணுத்துக் கொண்டே காப்பியைக் கொண்டு வந்து மேஜைமீது 'டக்' கென்று வைத்துவிட்டுத் திரும்பினாள் ருக்கு.

ராமு பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்திருந்தான். ருக்குமணியின் படபடப்பான வார்த்தைகள் பூராவும் அவன் காதில் தெளிவாக விழாவிட்டாலும் 'குருடு' என்ற சொல் மாத்திரம் அவன் நெஞ்சில் பசுமரத் தாணியாகப் பாய்ந்திருந்தது. ஐந்து வருஷத்திலே ஒரு நாளாவது மன்னியிடம் அவன் படபடப்பான பேச்சைக் கண்டதில்லை. வழக்கத்திற்கு மாறாக மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த காப்பியைத் தடவியபடியே ராமு எடுக்கப் போனான். பளிச்சென ஏதோ ஒரு எண்ணம் உதித்தது. அன்று காலை அண்ணாவுக்கும் மன்னிக்கு மிடையே எழுந்த சச்சரவு; அதில் தன் பெயரும் மறைமுகமாக அடிபட்டது ஆகியவற்றின் காரணம் இப்போது ராமுவுக்குத் தெளிவாகி விட்டது. அந்தச் சண்டையைத் தொடர்ந்து மன்னியின் விசும்பல், அன்று முழுவதும் வீட்டில் குடிகொண்டிருந்த பயான அமைதி ஆகியவை இன்னும் நிலைமையை அவனுக்குத் துலாம்பரமாக்கி விட்டன. கண்கள் தான் குருடே யொழிய அவன் சிந்திக்கும் திறன் குருடாகி விடவில்லையே. பத்து நிமிஷம் சென்றது.

திடீரென கூடத்தில் 'தடால்' என்ற சப்தம்! அதைத் தொடர்ந்து "ஐயோ! மன்னி!" என்று ராமுவின் அலறல் கேட்டது. கைக் காரியத்தைப் போட்டு விட்டு ருக்கு ஓடி வந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி! ராமு தலை குப்புறக் கீழே விழுந்திருந்தான்! மேஜை மேலிருந்த காப்பி டம்ளர் உருண்டு விழுந்து காப்பி தரை முழுவதும் சிதறி ஓடிக்கிடந்தது.

"ராமு......" ஓடிப்போய் ராமுவைக் கை கொடுத்துத் தூக்கினாள் ருக்கு. அவன் நெற்றியிலே மேஜையின் மூலை குத்தி ரத்தம் பெருகியது...ருக்கு துடிதுடித்துப் போனாள்.

"ராமு...என்ன காரியம் செய்தே? என்னைக் கூப்பிடக்கூடாதா...?" என்றாள்.

"இல்லை மன்னி; வேண்டாம். என்னாலே உங்களுக்கெல்லாம் வீண் சிரமம்!" என்றான். அடுத்த விநாடி ஒளியிழந்த அவன் கருவிழிகளிலிருந்து இரு துளி கண்ணீர் உருண்டு விழுந்தது. ருக்குவின் உள்ளம் உருகிற்று.

"ராமு என்னை மன்னித்து விடு! உன் உள்ளத்தைப் புண்படுத்தி விட்டேன். ஊரார் என்ன வேண்டுமானாலும் உளறட்டும், எனக்குக் கவலை இல்லை ராமு. உன் அண்ணா மாத்திரம் என்னைப் புரிந்து கொண்டால் சரி. அவர் லட்சியத்துக்கு என்றும் பங்கம் வராது...." என்றாள்.

ரேழியில் மறைந்து நின்ற சந்தானம் கைக்குட்டையினால் கண்களைத் துடைத்துக்கொண்டான். அவன் கண்கள் திறந்து கொண்டன. சலனமடைந்த உள்ளத்தில் சாந்தி நிறைந்தது. உள்ளே நுழைந்த போது நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த ராமுவின் நெற்றியில் மருந்து தடவிக் கட்டு கட்டிக் கொண்டிருந்தாள் ருக்குமணி. அந்தக் காட்சி இப்போது சந்தானத்துக்கு விகல்பமாகவே படவில்லை!


அறிவிப்பு

## டில்லியில் 'கல்கி' விற்பனை ஏஜன்ஸி

டில்லி பகுதியில் "கல்கி" விற்பனை ஏஜன்ஸியை இதுவரை பராமரித்து வந்த ஸ்ரீமதி P. R. சுப்புலக்ஷ்மி (South Indian Boarding House, Cannaught Circus, New Delhi) அவர்களுக்குப் பதிலாக 3-1-54 தேதி கல்கி இதழ் முதல் கீழ்க்கண்டவர்களை டில்லி பகுதியில் கல்கி விற்பனை ஏஜன்ஸியை நிர்வகிக்க நியமித்திருக்கிறோம்.

**ராஜீஸ் ஏஜன்ஸீஸ்,**
21/2 லேடி ஹார்டிஞ்ச் ரோட்,
(கோல்மார்க்கெட் சமீபம்) புது டில்லி.

ஆகவே, டில்லி பகுதியிலுள்ள கல்கி அன்பர்களும் விற்பனையாளர்களும் மேலே குறிப்பிட்டுள்ள ராஜீஸ் ஏஜன்ஸீஸ் என்பவர்களிடமிருந்து இனி கல்கி பிரதிகளைப் பெற்றுக் கொள்ளக் கோருகிறோம்.

சதாசிவம்
மானேஜிங் டைரெக்டர்.




நோவுகள், தலைவலி, ஜலதோஷம், ஜுரம்

இவற்றினின்று துரிதமாக நிவர்த்திபெற

# பொங்கல் வாழ்த்து

ஓவிய உலகில் முடிசூடா மன்னர் கே. மாதவன், ஓவிய விற்பன்னர்கள் பாலு சகோதரர்கள் ஓவிய நிபுணர் வி. மாதவம் பிள்ளை மற்றும் பல பிரபல ஓவியர்களின் திறனெல்லாம் பிரதிபலிக்கும் வண்ண ஓவியங்கள் மிளிரும்—கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும்—கன்னித் தமிழ் கொஞ்சும் பொங்கல் வாழ்த்துக்கள் விற்பனைக்குத் தயாரிலிருக்கின்றன.

விற்பனையாளர்கள் தேவை. மாதிரிப் பிரதிகளுக்கு ஒரு ரூபாய் அனுப்ப வேண்டும்.

அணு காந்தி பாண்டியப் பதிப்பகம், K3/16, கீழவாசல், தஞ்சாவூர்

# இதுவே காரணம்

# Firestone

## பயர்ஸ்டோன்

## ஆல் - டிராக்ஷன் டயர்

எல்லா விடங்களிலும் டிரக் ஓட்டுபவர்களுக்கு செலவில் சிக்கனமும், சிறப்பான சேவையும் தருகிறது




**1 இரட்டை உபயோகம் - ரஸ்தாவிலும் மேடு பள்ளங்களிலும் ஓடும்.**

ராஜபாட்டைகளில் தேய்வின்றி நீண்ட காலம் சுகமாக உழைப்பதுடன், சீர்திருந்தாத பாதைகளிலும் உயரி சக்தியுடன் இழுத்துச் செல்லக் கூடியது.

**2 48 - 65% ஆழமான மிதிபாகம்**

புதிய, நீடித்துழைப்பதும் கிழியாததுமான டிரெட் ரப்பர் அதிக காலம் வழுக்காமல் ஓடி உழைக்கும்.

**3 உறுதியும் வலிமையுமுள்ள டிராக்ஷன் பார்கள்**

இருப்பதால் ரஸ்தாவில் அதிக அசைவின்றி ஓடவும், மேடு பள்ளங்களில் உயரிப் பிடிப்புடன் ஓடவும் சாத்யமாகிறது.

**4 தொடர்ச்சியான மத்திய கட்டை**

பத்திரமாகவும், நிச்சயமாகவும் நெருத்த உதவுவதுடன், நீடித்த உழைப்பும் அளிக்கிறது. டிரெட் இடுக்குகள் புது முறையில் அமைந்திருப்பதால் கற்கள் அடையாது.

**5 நன்கு பிசின் தோய்த்த நூல் பாடி**

டயரில் புகை தோன்றுவதைத் தவிர்த்து, மிதி பாகம் பிளந்து பிரியாமல் பாதுகாப்பதுடன், உயரி சீ-ட் பிரிந்தும் இடக்தரும். பாடி ரப்பரும், நூல்களும் 60% அதிக உறுதியாக பொருந்தியுள்ளன.




# அரசகுமாரி அமிர்தா

குண்டுமணி

'அப்பா! நீங்கள் காட்டுக்கு வேட்டைக்குப் போகும் பொழுது என்னையும் அழைத்துப் போங்கள்'' என்று வேண்டிக் கொண்டாள் அரசகுமாரி அமிர்தா.

''அம்மா! வயது வந்த பெண்களைக் காட்டுக்கு அழைத்துச் செல்லுதல் கூடாது. துஷ்ட மிருகங்களைக் கண்டு பயந்து விடுவாய்'' என்றார் அரசர் வீரவர்மர்.

''நான் சாதாரணப் பெண்ணா? அரசகுமாரி யாயிற்றே. நான் சிறிதும் பயப்பட மாட்டேன். என்னையும் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்'' என்று பிடிவாதம் பிடித்தாள் அமிர்தா.

வீரவர்மர் அமிர்தாவின் பிடிவாதத்தைத் தட்ட முடியாமல் அவளையும் காட்டுக்கு அழைத்துச் சென்றார்.

காட்டிலுள்ள இயற்கைக் காட்சிகளும், வன விலங்குகளும் பாடும் பறவையினங்களும் கொள்ளை இன்பத்தை அமிர்தாவுக்கு அளித்தன. காட்டின் அற்புதங்களை அமிர்தாவுக்கு விவரித்துக் கொண்டு வந்த வீரவர்மர் தம்முடைய பரிவாரங்களிலிருந்து விலகி விட்டார். பேச்சு சுவாரஸ்யத்தில் அவர்களுடைய பரிவாரங்கள் முன்னேறிச் செல்லுவது அவர்களுக்குத் தெரியவில்லை.

வெகு நேரம் கழித்து இருவரும் திரும்பிய போது தாங்கள் தனியே விடப் பட்டதை உணர்ந்து கொண்டனர். இருவரும் பரிவாரங்களைத் தேடி நடந்தனர். அடர்ந்த காட்டினுள் அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

''அப்பா! எனக்குத் தாகமாயிருக்கிறது. தலையைச் சுற்றுகிறது. இனிமேல் என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது'' என்று கூறினாள் அமிர்தா.

''பார்த்தாயா, உன்னைக் காட்டுக்கு வர வேண்டாம் என்றேன், கேட்டாய்தானே? இப்பொழுது எல்லாக் கஷ்டங்களையும் நீ அநுபவிக்க வேண்டியதுதான்'' என்று கூறி அவள் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார் வீரவர்மர்.

காட்டில் வெகு தூரம் நடந்த பிறகு ஒரு குடிசை தென்பட்டது.

''வா, அமிர்தா! அதோ ஒரு குடிசை இருக்கிறது. அதில் ஏதாவது தாகத்துக்குக் கிடைக்குமா என்று பார்க்கலாம்'' என்று கூறி அவளை அழைத்துச் சென்றார் வீரவர்மர்.

அந்தக் குடிசையிலிருந்து ஒரு கிழட்டு மனிதன் வெளிப்பட்டு, ''ஐயா! தாங்கள் திக்குத்திசை தெரியாமல் தவிக்கிறீர்களா? ஏழையின் குடிசையில் இன்றிரவைக் கழியுங்கள். நாளை உங்களைக் காட்டைக் கடந்து வெளியே கொண்டு போய் விட்டு விடுகிறேன்'' என்றான்.

அக் கிழவனின் உபகாரச் சிந்தையைக் கண்டு வியந்து வீரவர்மர் ''உங்கள் அன்புக்கு என் நன்றி'' என்றார்.

அக் கிழவன் அரசன் வீரவர்மருக்கும் அமிர்தாவுக்கும் பாலும், பழமும் கொடுத்தான். இருவரும் அவைகளைச் சாப்பிட்டு விட்டுக் களைப்பால் உறங்கி விட்டனர்.

மறு நாள் காலையில் வெகு நேரங் கழித்து அமிர்தா எழுந்த போது பக்கத்தில் தந்தையைக் காணாது தவித்தாள். குடிசைக்கு வெளியில் வந்து பார்த்த பொழுது, கிழவன் மட்டும் நின்று கொண்டிருந்தான். அமிர்தாவைக் கண்டதும் அவன் கலகலவென்று நகைத்தான்.

''என் தந்தை எங்கே? அவரிடம் என்னைக் கொண்டு விடு'' என்று அமிர்தா பயத்துடன் அவனிடம் கெஞ்சினாள்.

"அரசர் இனி வரமாட்டார். நீ என் மனைவியாகப் போகிறாய்" என்று கூறி விட்டு அக்கொடிய கிழவன் சிரித்தான்.

அமிர்தா அரண்டு போய் அங்கிருந்து ஓட யத்தனித்தாள். அப்பொழுது ஒரு சிறுத்தைப் புலி அவள் மீது பாயத் தயாராக வந்தது. அவள் பயந்து அலறிக் கொண்டு கீழே விழுந்தாள். பாய்ந்து வந்த சிறுத்தைப்புலி அவளருகில் வந்ததும் மலைத்துப் போய் நின்றது.

அமிர்தா கண் விழித்துப் பார்த்தாள். பாய்ந்து வந்த புலி பசுவைப் போல் சாதுவாக நின்றது. சிறுத்தைப் புலி அவளை ஒன்றும் செய்யாமல் நிற்கவே அவள் அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அந்தச் சிறுத்தைப் புலியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிவதைக் கண்டு அவள் திகைத்துப் போனாள்.

இந்தச் சமயத்தில் திடுதிடு வென்று வில் லேந்திய வீரர்கள் ஓடி வந்தார்கள். "ஐயோ! நம் அரசகுமாரி அருகில் சிறுத்தைப் புலி. உடனே அதன் மீது நாணேற்றுங்கள்" என்று அவர்களில் சிலர் கூவினார்கள்.

"அதைத் துன்புறுத்த வேண்டாம்" என்று அரசகுமாரி கூறவே அனைவரும் வில்லில் பூட்டிய அம்பை எடுத்து விட்டு அரசியின் அருகில் போய் நின்றனர்.

"அரச குமாரியே! அரசர் வீரவர்மர் எங்கே? தாங்கள் மட்டும் தனித்திருக்கிறீர்களே?" என்று வீரர்களின் தலைவன் அவளை வினவினான்.

"இந்தக் குடிசையினுள் ஒரு கொடிய மனிதன் இருக்கிறான். அவன் என் தந்தைக்கு என்ன தீங்கு செய்தானோ தெரியவில்லை" என்று அழாக் குறையாகக் கூறினாள் அமிர்தா.

அதைக் கேட்டு வெகுண்ட வீரர்கள் குடிசையினுள் சென்று சாப்பிட்டுக் கொண்டிருந்த கொடிய கிழவனை இழுத்து வந்தனர். அவனை நையப் புடைத்தனர்.

"ஐயோ! நான் நிரபராதி. உங்கள் அரசருக்கும் அரச குமாரிக்கும் உதவி செய்ததற்கு இது தானா எனக்குக் கைகண்ட பலன்?" என்று அந்தக் கிழவன் கதறினான். ஆனால் அவனுடைய வார்த்தைகளையெல்லாம் வீரர்களின் தலைவன் சிறிதும் நம்பவில்லை.

இச்சமயத்தில் அவன் மடியிலிருந்து நழுவிய பளபளவென்று ஜொலிக்கும் மாணிக்கக் கல் உருண்டோடிச் சிறுத்தைப் புலியின் காலின் மேல் உராய்ந்தது.

இப்பொழுது எதிர் பாராத அதிசயம் நிகழ்ந்தது. சிறுத்தைப் புலியாயிருந்த வீரவர்மர் உண்மை உருவை அடைந்தார். அந்த அதிசயக் காட்சியைக் கண்டதும் வீரர்கள் வியப்புக் கடலில் ஆழ்கிறார்கள். தங்களுடைய அரசரைக் கண்டதும் அவர்கள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவில்லை.

"இதோ கிழ வேஷத்தி லிருப்பவன் கொடிய மந்திரவாதி. என் பெண்ணைக் கவர நினைத்தவன். அவனைக் கட்டி அரண்மனைக்கு இழுத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார் வீரவர்மர். அவருடைய கட்டளையைச் சிரமேற் கொண்டு உடனே செயலில் நிறைவேற்றினர்.

"சிறுத்தைப் புலியாயிருந்தது, தாங்கள்தானா? அதனால் தான் என்னைத் துன்புறுத்தாமலிருந்தீர்களா?" என்று கேட்டு விட்டுத் தந்தையை அணைத்துக்கொண்டாள் அமிர்தா.

அரசன் வீரவர்மர் தம் குமாரியுடனும் பரிவாரங்களுடனும் தலை நகரை நோக்கிக் கிளம்பிச் சென்றார்.



## கலாக்ஷேத்திரத்தில் கலை விழா

**அடையாறு, கலாக்ஷேத்திரத் தியேட்டரில்**

★

**பரதநாட்டியம்** - ஸ்ரீமதி ருக்மணி தேவி
*27 - 12 - 53 மாலை 6-30 மணிக்கு*

**குமார சம்பவம்** - ஸ்ரீமதி ருக்மணி தேவி
*29 - 12 - 53 மாலை 6-30 மணிக்கு*

**குற்றாலக் குறவஞ்சி** - ஸ்ரீமதி ருக்மணி தேவியும் கலாக்ஷேத்திரக் கலைஞர்களும்
*30 - 12 - 53 மாலை 6-30 மணிக்கு*

**ருக்மணி சுயம்வரம்** - நாட்டிய நாடகம்
*1 - 1 - 1954 மாலை 6-30 மணிக்கு*

★

கட்டண விவரம் :

சீஸன் டிக்கட்டுகள் : ரிஸர்வ்டு வகுப்பு ரூ. 30/-, 15/-
சாதாரண டிக்கட்டுகள் ரூ. 9/-, 6/-
தினசரி டிக்கட்டுகள் : ரிசர்வ்டு வகுப்பு ரூ. 10/-, 6/-
சாதாரண டிக்கட்டுகள் ரூ. 3/-, 2/- 1/-

டிக்கெட்டுகள் கிடைக்குமிடம் :

1. கலாக்ஷேத்திரம், அடையாறு
2. ஒய். எம். ஐ. ஏ., கோகலே மண்டபம்
3. ஹிகின் & பேர்ஸ், மவுண்ட் ரோடு
4. ஒய். எம். ஐ. ஏ., மயிலாப்பூர்

---

## கிறிஸ்துமஸ்

அன்பளிப்புகளுக்கும் மற்றும்

## காஷ்மீர் தேசத்து

**ஒப்புயர்வற்ற**

**சால்வைகள், பட்டுகள், ஜமக்காளங்கள், கம்பளிகள், மரத்தில் சித்திரங்கள், காகிதத்தில் தயாரித்த பண்டங்கள், கம்பளித் தயாரிப்புகள், கம்பளி விரிப்புகள், வெள்ளிச் சாமான்கள், தேன், குங்குமப்பூ** முதலியவைகளுக்கும்,

**காஷ்மீர் சர்க்கார் மேற்பார்வையில்**
நிர்வகிக்கப்படும்

**விற்பனை இலாக்காவில்
தயவுசெய்து பார்வையிடுங்கள் :**

○●○

**9, மவுண்ட் ரோடு, சென்னை-2**
**போன் : 85925**

---

தந்தி : "EXHIBITION" போன் : 86294 & 86670

# காங்கிரஸ் கண்காட்சி

## தேனாம்பேட்டை

*சென்னை அரசாங்கத்தாரின் எல்லா இலாகாக்களும், ரயில்வே மற்றும் தபால் நூற்றாண்டு விழாக் காட்சிகளும், மைசூர் அரசாங்க இலாகாக்களும் கண்காட்சியில் இடம் பெறுகின்றன. நாடகம், நடனம், மற்றும் இதர இலவசக் காட்சிகளும் பொழுது போக்கு அம்சங்களும் ஏராளமாக உண்டு.*

**கண்காட்சி நேரம் :**

சாதாரண நாட்களில் மாலை 2 முதல் இரவு 9 மணி வரை
விடுமுறை நாட்களில் காலை 11 முதல் இரவு 9 மணி வரை

**பிரவேசக் கட்டணம் 5 அணா.**

C. S. வெங்கடாச்சாரி,
குத்தகைதார் & ஆர்கனைஸர்.

சென்னை 6.




ஜலதோஷத்தை
அகற்றுங்கள்
2 விதங்களில் அதிசீக்கிரமாக!

இப்பொழுது நீங்கள் ஜலதோஷத்தை முன்னேக்காட்டிலும் அதிக சீக்கிரத்தில் நிறுத்தலாம். படுக்கப் போகும் சமயத்தில் விக்ஸ் வேபோரப்பை உங்கள் குழந்தையின் மார்பின் மேலும், தொண்டையின் மேலும், முதுகின் மேலும், தடவித் தேயுங்கள். இந்த நவீன ஔஷதம் பலதேசங்களில் பிரக்யாதிபெற்றுள்ளது. ஏனெனில் அது ஜலதோஷத்தை இரண்டு விதங்களில் எதிர்த்துப் போராடுகிறது.

1. அதன் குணப்படுத்தும் உஷ்ணம் மார்பிலுள்ள வலியை அகற்றுகிறது.

விக்ஸ் வேபோரப்பின் சக்திவாய்ந்த மருந்துச் சத்து சருமத்தின் வழியாக உட்சென்று மார்பிலுள்ள சளியை வெளியேற்றுகிறது. மேலும், அதே சமயத்தில்...

2. அதன் நல்ல வாசனை சுவாசக் குழாய்களைச் சுத்தம் செய்கிறது.

நல்ல வாசனையுள்ள விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்துக்கு மிகவும் சக்திவாய்ந்த மருந்தாகும். உங்கள் குழந்தை இந்த வாசனையை இரவு முழுவதும் சுவாசிக்கிறது. அடைசலாயிருந்த அவனுடைய மூக்கு சுத்தமாகிறது. தொண்டைபுண்ணுக்கு ஆறுதலளிக்கப்படுகிறது. இருமல் நிறுத்தப்படுகிறது. அநேகமாக மறுநாள் காலையில் ஜலதோஷத்தின் கொடுமை மறைந்துவிடுகிறது.

தடவித் தேயுங்கள்...

விக்ஸ்
வேபோரப்




"விக்ஸ்" மற்றும் "வேபோரப்" டிரேட் மார்க்குகள்.
820


# பணம் இருக்கிறதா?

வெங்கு

நல்ல நடு நிசி. எங்கும் கருகும் என்று இருள். ஊரே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

இந்தச் சமயம் ஓர் ஆள் கையில் அரிக்கேன் விளக்குடன் டாக்டர் குணசேகரன் வீட்டுக்கு வந்து கதவு இடித்தார். "ஐயா! டாக்டர் ஐயா!" என்று குரல் கொடுத்தார்.

டாக்டர் குணசேகரன் வைத்தியத் தொழிலில் நீண்ட அனுபவம் வாய்ந்தவர். அவர் கை பார்த்து ஒரு வேளை மருந்து கொடுத்தாரானால் தீராத வியாதிகள் எல்லாம் 'போகிறேன், போகிறேன்' என்று அலறிப் புடைத்துக் கொண்டு ஓடும் என்று சொல்லிக் கொள்வார்கள் ஊரார். ஆகவே, அவரை நாடி எங்கெங்கிருந்தெல்லாமோ பணக்காரர்கள் வருவார்கள். ஏழைகளிடத்திலும் அவர் மிகுந்த அன்பும் இரக்கமும் உள்ளவராதலினால் ஏழைகளும் அவர் வீட்டை நோக்கி வந்தவண்ணமிருப்பார்கள்.

ஆனால் சமீப காலமாக அவருக்குத் தம் தொழிலில் அலுப்பு ஏற்பட்டிருந்தது. எத்தனை நாள் இந்த நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருப்பது என்ற எண்ணம் ஏற்பட்டிருந்தது. ஆயினும் அந்த இரவு வேளையில் யாரோ கதவைத் தட்டவே, படுக்கையை விட்டு எழுந்து வந்தார். கண்களில் தூக்கக் கலக்கம் இன்னும் மறையவில்லை. 'ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பாராமல் வைத்தியம் பண்ணுவதில் இதுதான் கஷ்டம்' என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டே வீட்டை விட்டு வெளியே வந்தார்.

"என்னப்பா! என்ன சமாசாரம்? ஏன் இந்த வேளையில் வந்து தொந்தரவு செய்கிறாய்?" என்று கேட்டார். இந்தக் கேள்வியை இங்கே படிப்பதற்குக் கடுமையாக இருந்தாலும் அவர் கூறிய போது குரலில் கடுமையிருக்கவில்லை. அன்பும், குழைவும் இருந்தது. இது அந்த ஊர்க்காரர்களுக்குத் தெரிந்தது தான்.

"பெண்சாதி சீக்காகப் படுத்துவிட்டாள். கண்ணைத் திறந்து மூன்று நாள் ஆச்சுதுங்க. நீங்கள் ஒரு தரம் வந்து பார்த்தால் தேவலீங்க!" என்றார் வந்தவர்.

"பணம், கிணம் வைத்திருக்கிறாயா?"

"வச்சிருக்கேனுங்க" என்று சொல்லி மடியிலிருந்த பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவர் முன்னிலையில் வைத்தார்.

"அதோ, பார்! எதிர் வரிசையில் நாலாவது வீட்டிலே ஒரு புது டாக்டர் வந்திருக்கிறார். அவரண்டை இந்தப் பணத்தைக் கொண்டு போய்க் கொடுத்து, வீட்டுக்கு வரச் சொல்லிப் பார்க்கச் சொல்!" என்று கூறிவிட்டு நிம்மதியாகப் படுக்கச் சென்றார் நம்முடைய டாக்டர் குணசேகரன்.

# கதிவேறில்லை!

சாலிவாஹனன்

1. "உருப்படுவோம் என்ற திடம் எங்கட்கில்லை
உங்கள் பலம், மதிவலிமை நேர்மை தீரம்
சரிப்படுத்தித் தரும் சென்னை ராஜ்யம் தன்னைச்
சமாதானம் நிலவுவதற்கு நீர்தான் வேண்டும்

2. கருக் கவிழ்த்து விட்டுவிட்ட நெல்லிக் காய்கள்
சுற்றி யுருள்வது போல இங்கே இந்நாள்
இருக்கும் அரசியல் தெறித்துச் சிதறிப் போச்சு.
இதை ஒன்று யிணைப்பதற்கு வாரீர்" என்று

3. உருக்கமுடன் அழைத் தவரை உதவி கேட்டோம்
உத்தமராம் அவரும் மன மொப்பிப் போந்தார்
நெருக்கடியில் கைகொடுத்துக் காக்கின்றாரை
நெஞ்சார வஞ்சகரென் றுரைக்கலாமா?

4. இருப்பதெல்லாம் இவர் நமக்கிங் கொருவர்தானே
இதற்குள்ளே பகை வஞ்சம் நினைத்தல் நன்றோ?
விருப்பமுற்றுப் பதவியிதை வேட்டாரில்லை
விளையாட்டாய் அரசியலில் புகுந்தாரில்லை!

5. போந்ததுமே ரேஷனெனும் கொடுமை போச்சு
பொய்த்திருந்த மழை பெய்து உயிருண்டாச்சு
வேந்தரெனத் தஞ்சை நிலப் பண்ணையாட்கள்
வெகு ஜோராய் வாழ்வதற்கு வழியுண்டாச்சு.

6. மாந்தரெலாம் மகிழ்ந்திருக்கும் வகையில் ராஜ்யம்
மறுபடியும் அமைதியுடன் நடக்கலாச்சு
காந்தியார் மேலிருந்த கறையும் போச்சு
கடவுள் பெயர் சொல்வதற்கும் வகை யுண்டாச்சு.

7. கல்விக்குப் பள்ளிகளிங் கதிகமில்லை
காசில்லை உபாத்தியாயர் மிகுதி யில்லை
அல் நீங்கி யாவருமே அறிவு கொள்ள
அழகான திட்டமொன்றும் வகுத்தார் ஸீயார்.

8. வகையறிந்து செயல் புரியும் ஸீயார் காலை
வாரிவிடப் பார்ப்பவர்கள் செய்யும் லீலை
புகையெழுப்பிப் பூசல்களால் திணறச் செய்து
புரியும் நலம் இடை நடுவில் கெடுக்கும் வேலை.

9. ஆட்சி ஜனநாயகமே ஆனாலுந்தான்
அரசியலென் நடுத்தெருவில் தொம்பன் கூத்தா?
காட்சியுறு நாடகத்தைத் திரையில்லாமல்
காண்பதற்கு யார் வருவார்? காட்சி யேது?

10. மீட்சி பெறக் கேட்ட வரம் பெறுதற்குள்ளே
மிச்சமுள்ள தவம் குலைக்கும் மோகம் போல
ஆட்சி செயும் ஸீயாரை ஓட்டும் வேலை;—
அதைச் செய்தால் நமைப் போலே அசடர் உண்டோ?

# நாமும் உழைக்கிறோம்!

*சபரி*

நவம்பர் இருபத்தாறும் தேதி யன்று பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியைப் படித்தேன். ஒரு பெரிய பூகம்பம் ஏற்பட விருந்ததாம். அதிலிருந்து ஜப்பான் எப்படியோ தப்பித்துக் கொண்டதாம். கொட்டை எழுத்தில், இரண்டு பத்தித் தலைப்பில் இது பிரசுரமாகி இருந்தது. இதைப் படித்ததும் சிரிப்புத்தான் உண்டாயிற்று. ஜப்பானுக்குப் பூகம்பம் ஒரு பிரமாதமா என்ன?—எத்தனையோ பூகம்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன; எரிமலைகள் குமுறி நெருப்பைக் கொட்டி யிருக்கின்றன; புயல்கள் நாட்டை நாசப் படுத்தி யிருக்கின்றன. ஜப்பானியர்கள் பின் வாங்கி விட்டார்களா? இல்லை. அது அவர்களுக்கு ஓர் அற்ப விஷயம். காப்பி சாப்பிடுவது, சினிமாவுக்குப் போவது போல. ஒவ்வொரு தடவையும் கோர விபத்து ஏற்பட, ஜப்பான் பல மடங்கு விசையுடன், புதிய வேகத்துடன் எழுந்திருக்கிறது.

இந்த உலக மகாயுத்தத்தின்போது, அணு குண்டு வீசப்பட்டு, நாசமடைந்தனவே அதன் நகரங்கள்;—யாருக்குத் தெரியாது அது?—நகரங்கள் நாசமானது இருக்கட்டும். போரில் தோல்வி யடைந்து, சரணாகதிக்குட்பட்டு,—அடியோடு தொலைந்து விட்டது என்றே இருந்தது அதன் நிலைமை. அப்படி யிருந்தும், நான்கைந்து வருடங்களுக்குள் மறுபடியும் தலைதூக்கி விட்டது. இப்போது மறுபடியும் பழைய நிலைமையை அடைந்து விட்டது. ஆச்சரியமான விஷயம் அல்லவா இது?

ஒரு தனி மனிதன் வாழ்க்கைப் போரில் வெற்றி யடைவதற்கு முடியாமல், கஷ்டங்களைக் கண்டு மலைத்துப்போய் நிற்கும்போது, ஒரு தேச முழுவதுமே தீரர்களா யிருப்பது அதிசயம் அல்லவா?

உழைப்புக்கு ஒரு தனி மதிப்பு இருக்கத்தான் இருக்கிறது. — கொஞ்சம் சரித்திரத்தைப் புரட்டுவோம். எண்பது, தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஜப்பான் இருந்த இடமே தெரியாது. — அதாவது, யாரும் கவனிப்பாரற்ற, சாதாரண நாடாக இருந்தது. பழங்கால வழியிலே அது போய்க் கொண்டிருந்தது. ஆனால், கம்மோடர் பெர்ரி என்ற ஓர் அமெரிக்கக் கடற்படை வீரன் ஜப்பானியக் கடற்கரை யருகே பீரங்கிகளைக் கொண்டு போய் நிறுத்தி வம்புக்கு இழுத்தான். ஜப்பான் விழித்துக் கொண்டது. காலத்தோடு ஒட்டிப் போகாவிட்டால் உலகில் வாழ முடியாது என்று தெரிந்து கொண்டது. இரவும் பகலுமாக உழைத்தது. அடுத்த ஐம்பது ஆண்டுகளில் அது ஒரு முதல்தரமான வல்லரசாயிற்று. நம்ப முடியாததையும் அது நடத்தியது. மாபெரும் வல்லரசுகளில் ஒன்று என்று கருதப்பட்டு வந்த ருஷ்யாவை 1904-ல் ஒரு போரில் தோற்கடித்தது!

பீரங்கியின் சத்தத்தைக் கேட்டுத் துடை நடுங்கிய நாடு அது.

தனி மனிதன் வாழ்க்கைப் போரில் வெற்றி யடைவது பெரிதல்ல. ஒரு தேச முழுவதுமே கஷ்டங்களை எதிர்த்துத் தகர்க்கும் சக்தி படைத்த தீர மக்களைக் கொண்டிருப்பது மிகவும் போற்றத் தக்கது.

ஜெர்மனியும் நமக்கு இதே பாடத்தைத்தான் கற்றுக் கொடுக்கிறது. முதல் மகா யுத்தத்தில் அடியோடு படுபாதாளத்தில் வீழ்ந்தது. அது மறுபடியும் தலை தூக்காது என்றுதான் பிரிட்டனும் பிரான்ஸும் மனப்பால் குடித்தன. ஆனால், பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள் மறுபடியும் பயங்கரமாக, ஹிட்லர் உருவத்தில் அது எழுந்தது. உலகத்துக்கு அறைகூவல் விடுத்தது. அப்புறம்?—கீழே விழுந்தது. இப்போதுந்தான் என்ன? கீழே விழுந்த அது, தூசியைத் தட்டித் துடைத்துக் கொண்டு எழுந்து பழைய நிலைமைக்கு வந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதிகளிலே மகா உத்தமரான ஆப்ரஹாம் லிங்கன் கூறியது நினைவுக்கு வருகிறது:— "யாராவது ஒருவன், தான் அமெரிக்காவை நேசிப்பதாகவும், ஆனால் உழைப்பை வெறுப்பதாகவும் கூறினால் அவன் பொய்யனே யாவான். யாராவது தான் அமெரிக்காவிடம் நம்பிக்கை பூண்டிருப்பதாகவும், ஆனால் உழைப்புக்கு அஞ்சுவதாகவும் கூறினால், அவன் ஒரு மூடனாவான். உழைப்பு இல்லாமல் அமெரிக்கா இல்லை."

உழைப்பு இல்லாமல் அமெரிக்கா இல்லை! உழைப்பு இல்லாமல் அமெரிக்கா இல்லை!! எவ்வளவு அழுத்தம் திருத்தமா யிருக்கின்றன இந்த வார்த்தைகள்! — அப்படியே செய்தார்கள் அமெரிக்க மக்கள். காடாய்க் கிடந்த ஒரு நாட்டை, ஒரு நூற்றாண்டுக்குள் நாடாக்கி, உலகத்திலேயே செல்வம் கொழிக்கும் தேசமாக்கியவர்கள் அமெரிக்க மக்கள் அல்லவா? உழைப்புத்தானே அவர்கள் முன்னேற்றத்துக்குக் காரணம்?

ஆனால்?—

ரொம்பத் தயக்கமாக இருக்கிறது, சொல்வதற்கு—நாம் இங்கே என்ன செய்கிறோம்?

நாமும் உழைக்கிறோம். ஒருவரோடொருவர் சண்டை யிட்டுக் கொண்டு, கட்சி கட்டுவதிலே இரவு பகலாக உழைக்கிறோம். உண்மையாகப் பாடுபடும் பெரியார்கள் மனம் நொந்து போகும்படியாகச் செய்வதில் நம் சக்தி அனைத்தையும் செலவழிக்கிறோம்.

ரொம்ப வருந்தத்தக்க விஷயமல்லவா இது?

BY. 8815

# அவள் உலாவுவது அழகே உலாவுவது போலிருக்கிறது.



பின்னியின் அசல் பங்களூர் சில்க் சாரி அணிந்து கொண்டிருக்கும் நீங்கள் சிறந்ததையே தெரிந்து வாங்கு வதில உங்களுக்கு இருக்கும் திற மைக்கு அத்தாட்சி. அழகான பங் களூர் சில்க், பாஷன்களுக்கு இணங்க திறமையுடன் மடிப்புகள் போட்டு அணிந்துகொள்ள இன்றி யமையாதது.

பின்னியின் விதவிதமான கலர்களை பாருங்கள். தங்க பார்டர்கள், பல்லாவ் போட்ட ''காண்ட்ராஸ்ட்'' சில்க் சாரி கள் உங்களுக்கு பிடித்தமான 'ஸ்டைல்' களில் இருக்கிறதை கவனியுங்கள்.

நீங்கள் ப்ரயாணம் செய்யும்பொழுது ஒரு பின்னி பெங்களூர் சில்க் சாரி எடுத் துக்கொள்ள மறந்து விடாதீர்கள். இஸ் திரி செய்ய வேண்டுமே என்ற கவலை இல்லை. புதுமையுடனும் உடுத்திக் கொள்ள தயாராகவும் அது அமைகிறது.

எல்லா அசல் பின்னி சாரிகளிலும் தங்க நிறத்திலுள்ள இந்த மார்க் போட்டிருக்கிறது.

## பின்னி
## பங்களூர் சாரிகள்

பங்களூர் வுல்லன், காட்டன அண்டு சில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட் பங்களூர் 2
ஏஜண்டு, செகரட்டரி, மற்றும் ட்ரஷரர்கள்:- பின்னி அண்டு கம்பெனி, (மதராஸ்) லிமிடெட்.
இன்டென்டர்ஸ்: H.A.R. முகம்மத் லேட் அண்டு ஸன்ஸ், திவான் காப்பான வெலின், பங்களூர் சிடி.
நூர்ஜீ இப்ராஹிம் இல்லாக அண்டு ஸன்ஸ், சிப்பெட், பங்களூர் சிடி.
H. A. R. முகம்மது அண்டு ஸன்ஸ், 8. சி. கோடௌன் ஸ்ட்ரீட், மதராஸ்.
ஜயநாராயண கிர்தாரிதாஸ் அண்டு கம்பெனி, திவான் காப்பான்லெவின், சிப்பெட், பங்களூர் சிடி.
தி மதராஸ் பீஸ் டிரேடிங் கம்பெனி, சான்டேர்ஸ் ரோட், செகந்தராபாத்.


ஆஸ்துமா வியாதியஸ்தர்களே
ரிகால்வின்
குறைந்த நாளில்
குணம் அளிக்கிறது
நம்நாட்டு மூலிகையும், மேல்நாட்டு மூலிகையும் சேர்ந்த மிக மலிவான மருந்து
டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள்
எல்லா நல்ல மருந்து கடைகளிலும் கிடைக்கும்
ஸ்டாண்டேர்ட் பார்மஸூடிகல் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தாவின் தயாரிப்பு


ரேயான் நூல்கள்
அழகும், உழைப்பும் பொருந்திய ஆடைகளுக்கு
இந்தியாவின் முதன் முதலான ரேயான் தொழிற்சாலையில் நூற்கப்படும் நூல்கள் தினசரி அணியும் ஆடைகளையும், பனியன்கள், ஸேளிங்குகள், இலாஸ்டிக் சாமான்கள், மேஜை நாற்காலி அணிகள் முதலியவைகளைத் தயாரிக்க சிறந்தவை.
120 மேலும் 150 டினையர்களில் கிடைக்கும்.
பிரகாசமான, பளபளப்பான, நீடித்துழைக்கக் கூடிய அமைப்புள்ளவை.
TRAYONS
வியாபார விவரங்களுக்கு:
தி திருவாங்கூர் ரேயான்ஸ் லிமிடெட்,
ரேயான்புரம் போஸ்ட்,
வடக்கு திருவாங்கூர்.
TR 3652

"நேற்று பிரசவ ஆஸ்பத்திரிக்கு உன்னை அழைத்துக் கொண்டு போகப் போவதாக உங்கப்பா சொன்னாரே, காண்பித்தாயா? டாக்டர் என்ன சொன்னார்?" அவன் குரலில் ஆவல் மிகுந்திருந்தது.

"இன்னும் இரண்டு வாரத்தில் பிரசவம் ஆகி விடுமாம்."

"அப்படிச் சொல்லு! இன்னும் பதினைந்து நாட்களில் குட்டி கிருபமா பிறக்கப் போகிறாளா? பேஷ்! கிரு, இதோ பார்! நமக்குப் பிறக்கப் போகும் குழந்தை கட்டாயம் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். என் ஆசை என்ன வென்றால்......?"

"ஐயோ, பாவமே!"

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய், கிரு!"

"போயும் போயும் பெண் குழந்தை பிறக்க வேண்டும் என்று ஆசைப்படவும் வேண்டுமா?"

"ஏன்! இந்தக் காலத்தில் ஆணாயிருந்தால் என்ன? பெண்ணாயிருந்தால் என்ன? இரண்டும் சமம்தான்."

"வாயால் வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம், இரண்டும் சமம்தான் என்று. நடைமுறையில் இரண்டும் சமம் ஆகாது. எங்கப்பா ஐந்து பெண்களைப் பெற்றுவிட்டுப் படுகிறபாடு கொஞ்சமா?" கிருபமாவின் குரல் எதனாலோ தடைப்பட்டது.

"அதற்கென்ன! உங்கள் வீட்டில் ஐந்து பெண்கள் சேர்ந்தாற்போல் பிறந்து விட்டதால் நீ அப்படி நினைக்கிறாய். நான் வேண்டுவது ஒரு பெண்தானே?" என்று அன்பு ததும்பக் கேட்டான் நாராயணன்.

"இதோ பாருங்கள். எனக்குப் பெண் குழந்தையே வேண்டாம். பிள்ளைதான் வேண்டும். அதுவும் எப்பேர்ப்பட்ட பிள்ளை தெரியுமா! ஆழ்ந்த அறிவும், அன்பு நிறைந்த உள்ளமும், தியாகப் பண்பும், நேர்மை மிகுந்த ஒழுக்கமும், உத்தம தேச பக்தனுமான ஓர் அருங்குணப் பொக்கிஷப் புதல்வனைத்தான் நான் ஈன்றெடுக்க விரும்புகிறேன். அதுதான் என் இதயபூர்வமான பிரார்த்தனை. இதற்குப் பாரதத்தாய் அருள் புரிவாளென்கிற நம்பிக்கையும் இருக்கிறது எனக்கு!" இதைக் கூறி முடிப்பதற்குள் கிருபமாவின் இதழ்கள் உணர்ச்சி வேகத்தில் துடித்தன.


"ஏதேது! உன் பிரார்த்தனை பலமாக இருக்கிறதே! அப்படியானால் என் ஆசை என்ன ஆவது? பெண் பிறக்க வேண்டும். அந்தக் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கவேண்டும். படிப்பிலும், சங்கீதத்திலும், நாட்டியத்திலும் தேர்ச்சி பெறச் செய்ய வேண்டும். பெண் புகழ் ஏணியின் உச்சியில் சகலகலா வல்லியாகப் பிரகாசிக்க வேண்டும். அந்தக் கோலாகல வைபவங்களை யெல்லாம் கண்ணாரக் கண்டும், காதாரக் கேட்டும் மகிழ்ச்சிக்






# இருவர் விருப்பம்

ஜயலக்ஷ்மி



"இது ராயர் தெரு என்று தெரியும் சார், இங்கே குளம் ஒன்று இருக்கிறதாமே! அது எங்கே என்றுதான் கேட்கிறேன்?"

கடலில் குளித்து மூழ்கவேண்டும் என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருக்கிறேனே!"

"சரியாய்ப் போயிற்று! இத்தனை தூரம் செய்து விட்டீர்களா? இதையெல்லாம் முடிவுபார்த்து விட்டுத்தான் சொல்லுகிறேன், பெண்ணே வேண்டாமென்று. அந்தக் காலத்திலாவது பெண்களைக் கலியாணம் செய்து கொடுத்து விடுவது, பிள்ளைகளைப் படிக்க வைத்து விடுவது என்று இருந்தது. இப்போதென்னவென்றால் பிள்ளைகளைப் போல் பெண்களையும் படிக்கவைக்க வேண்டியிருக்கிறது. பாட்டு சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. உங்களைப் போன்ற கலாபிமானிகள் நாட்டியம் வேறு கற்றுக் கொடுக்கிறார்கள். இவ்வளவு செலவழித்து போதாதென்று ஐயாயிரம் முதல் பத்தாயிரம் வரையில் வரதட்சிணை வேறு கொடுத்துக் கலியாணம் செய்ய வேண்டியிருக்கிறது. நல்ல பெண் குழந்தைகள்! போதும் போதும்." நிருபமாவின் குரலில் உறுதி கலந்திருந்தது.

"பெண் கண்ணுக்கும் அழகாக இருந்து எல்லாவற்றிலும் கை தேர்ந்தவளாகவும் இருந்து விட்டால் வரதட்சணையில்லாமலேயே ஒரு பணக்காரன் வந்து 'லபக்'கென்று கவ்விக் கொண்டு போய்விட மாட்டானா......? நான் உன்னை வரதட்சணை வாங்காமல் மணந்து கொள்ளவில்லையா?" என்று கடுமையாகக் கேட்டான் நாராயணன்.

"உங்களைப் போல் வரதட்சிணை வாங்காமல் மணம் செய்து கொள்ள முற்படுபவர்களின் எண்ணிக்கை குறைவு" என்று அழுத்தமாகக் கூறினாள் நிருபமா.

"அப்படியில்லாவிட்டால் அவளையே உத்தியோகம் பார்க்கச் செய்துவிட்டால்!" விடாப்பிடியாக ஆத்திரத்துடன் வினவினான் அவன்.

"உத்தியோகம் புருஷலட்சணம். பெண்கள் உத்தியோகம் பார்ப்பதில் எவ்வளவோ இடையூறுகள் இருக்கின்றன. இது இந்தியப் பெண்களின் பண்புக்கு ஏற்றதல்ல. எனக்கு ஒருகால் பெண் பிறந்து விட்டால்கூட நான் அவளை வேலைக்கு அனுப்பச் சம்மதிக்க மாட்டேன்."

"என்ன சொல்லுகிறாய்?" கனல் பறந்தது அவன் விழிகளில்.

"எதற்கு வீண் பேச்சு? பெண் வேண்டாம். அதுவும் தலைச்சன் குழந்தை சீமந்த புத்திரன் தான் விசேஷம். தெரியுமா?" பெருமிதம் கலந்த குரலில் மொழிந்தாள் நிருபமா.

"உனக்கென்ன இவ்வளவு அலட்சியம்? என் விருப்பத்தை அனுசரித்துப் போக வேண்டியவள் நீ. என்னென்னமோ வாய்க்கு வந்ததைப் பேசுகிறாயே? அவ்வளவு திமிரா உனக்கு! சீ! உன்னை லட்சியம் செய்து என் மனசிலுள்ள ஆசாபாசங்களைக் கூற வந்ததே என்மீது தவறுதான்!" அவன் குரலில் அலட்சியமும் ஆத்திரமும் அளவுகடந்து தொனித்தன. கோட் ஸ்டாண்டில் மாட்டியிருந்த அங்க வஸ்திரத்தை எடுத்துப் போட்டுக் கொண்டு அவன் வெளியேறினான்.

"என்னவோ விளையாட்டாகப் பேசுவதாக எண்ணிப் பேசிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்!" என்று வேண்டிய நிருபமாவின் வார்த்தைகளைச் சிறிதும் சட்டை பண்ணாமல் விடு விடுவென்று நடந்து சென்று விட்டான் நாராயணன்.

கலங்கிய கண்கள் கண்ணீரைச் சொரிய, கோபித்துக் கொண்டு செல்லும் கணவனை வெறித்துப் பார்த்துக் கொண்டே செயலிழந்து நின்றாள் நிருபமா.

அவள் கண்ணீருக்குக் கூட அந்தச் சமயத்தில் அவன் உள்ளத்தில் இரக்கத்தை உண்டாக்கும் சக்தியில்லாமற் போய் விட்டது. இந்த நான்கு வருஷ தாம்பத்திய வாழ்க்கையில் அவள் மீது கோபம் கொண்டு அந்தக் காரணத்திற்காக அவன் இப்படி வெளியேறியது இதுதான் முதல் தடவை. எந்தச் சமயத்திலும் அவள் கண்கலங்க அவன் சகிக்க மாட்டான். அதுவும் இந்தச் சமயத்தில் அவள் பூரண கர்ப்பிணி. அவளை இவ்வளவு தூரம் அலட்சியமாகப் பேசி, அவள் உள்ளத்தைப் புண்படுத்தியது அவளுக்குத் தாங்க முடியாத வேதனையை அளித்தது.

'இந்த அற்ப விஷயத்திற்காக இவ்வளவு கோபமா? அவருடைய ஆசைகளை அவர் மனம் விட்டுக் கூறியது போல் நானும் என்னுடைய விருப்பத்தை வெளியிட்டேன். இது தவறா? தன் மனசிலுள்ளதை வாய் விட்டுக் கூறக்கூட ஒரு பெண்ணுக்குச் சுதந்திரம் இல்லையா?' என்று ஏங்கித் தவித்தது அவளுடைய பெண்ணுள்ளம்.



# பனிகாலத்து இருமல்!

அடக்கினுல் மட்டும் போதாது . . .

## “ஸிரோலின்” இருமலை அறவே ஒழித்துவிடும்.

பனிகாலத்தில்வரும் இருமல் அபாயத்தை விளைவிக்கலாம். உங்கள் தொண்டையிலும் சுவாசப்பைகளிலும் இருக்கும் நேரிய நளை நார்கள் ரணமாகி அடைத்துக்கொள்வதனுலேயே இருமல் ஏற்படுகிறது. உங்கள் ஆரோக்கியத்தைபாதுகாப்பதற்கு இருமலை அடக்கினுல் மட்டும் போதாது. அதை அறவே ஒழித்துக்கட்டவேண்டும்.

“ஸிரோலின்” ரோச் உங்கள் இருமல் நோயை வேருடன் பிடுங்கிவிடுகிறது. உங்கள் சுவாசகோசங்களை சுத்தப்படுத்தி, வீக்கத்தை குறைத்து புண் எரிச்சல்களை நீக்கி, கபம், சளி முதலியன இல்லாமல் செய்துவிடுகிறது. “ஸிரோலின்” இருமலின் காரணங்களை ஒழிக்கிறது. அதுவும் மயக்க மருந்துகளை உபயோகிக்காமலே, அல்லாமலும் “ஸிரோலி”னில் எபிட்ரின் கலப்பில்லை.




**“ஸிரோலின்”**

**உங்களை புது மனிதனுக்குகிறது.**

ஸிரோலின் தேக உறுப்புகளுக்கு உரமளித்து, பசி ருசியை விருத்தி செய்து, ஜீரண சக்தியை ஊக்கி, நோய் எதிர்ப்பு சக்தியை வளர்க்கிறது. அதிகப்படியான மக்கள் இருமலை நிறுத்த, குணம் சிறு பணமான குடும்ப ஔஷதமாகிய ஸிரோலினையே நம்புகிறனர். வீட்டில் எப்பொழுதும் ஸிரோலின் ஒரு புட்டி அவசியம் வைத்திருங்கள்.

## ஸிரோலின்
'ரோச்'

VB. 8033




# க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ்—

# 2* இருவழிகளில் வேலைசெய்கிறது!

*** ஆக்டிவ் க்ளோரோபில்—**

வாய் துர்நாற்றத்தை நீக்கி, சாதாரண ஈறுக் கோளாறு களைத் தடுத்து, பல் சிதைவை ஒழிக்கிறது!


*** ஊடுருவும் நுரை—**

வாய்க்கு புதுமணம் தந்து, சமனகுணமுள்ள க்ளோரோபிலை உங்கள் பிரஷ் நுழையாத இடங்களுக்கும் எடுத்துச் செல்லுகிறது!

க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ் அரை அங்குல அளவு எடுத்து பிரஷினால் பற்களைத் துலக்குங்கள். க்ஷணத்தில் அதன் நுரை வேலைசெய்வதை உணருவீர்கள் . . . சுத்தம் செய்கிறது. புதுமணம் ஊட்டுகிறது. இயற்கைப் பச்சை க்ளோரோபிலை வாய்க்குள் ஒவ்வொரு மூலைக்கும்-பிரஷ் நுழையமுடியாத இடங்களுக்கும்கூட—எடுத்துச்செல்லுகிறது.


ஆக்டிவ் க்ளோரோபில் மற்றும் ஊடுருவும் நுரை—இரண்டின் நற்பயனையும் அடையுங்கள்! இன்றே க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸ் ஒரு டியூப் வாங்குங்கள்—இருவகை செயல் திறனுள்ள பற்பசை அது. ஒருமுறை உபயோகித்தால், எப்பொழுதும் அதைத்தான் உபயோகிக்கத் தோன்றும்!

## இரண்டு வழிகளில் சிக்கனம்கூட!



**1 சிறிதளவே போதும், பெரிதும் பயன்படும்!**

சாதாரண முறையில் பல் துலக்குவதில், க்ளோரோபில் சேர்ந்த கோலினாஸை அரை அங்குல அளவு அதைப்போல் 400 மடங்கு பெருகி, வாயின் ஒவ்வொரு மூலைக்கும் ஊடுருவிச் செல்கிறது. ஆம், அரை அங்குலமே தாராளமாகப் போதும். ஆகவே ஒரு டியூப் நெடுநாள் வரும்!




தவிர—

**2** உங்கள் பணத்திற்கு ஏற்ற மிகப்பெரிய டியூப் அது!*

இந்தியாவில் தயாரிப்பவர்கள்: ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.,
மாகனட் ரோடு, பலார்ட் எஸ்டேட், பம்பாய் !

டிரேட் மார்க் உடைமையாளர்கள்: ஒயிட்ஹால் பார்மகல் கம்பெனி, நியூ யார்க், N. Y. யூ. எஸ். ஏ.

GK. 8267

மறைத்து நின்ற கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு தளர்ந்திருக்கும் தன்னுடலை ஆயாசத்துடன் படுக்கையில் கிடத்தினாள் கிருபமா.

* * *


**ப**ஸ்ஸை விட்டிறங்கி வீடு வந்து சேர்ந்த நாராயணன் நேராகத் தன்னறைக்குள் சென்று படுத்துக் கொண்டான்.

அப்போது அங்கு வந்த அவனுடைய தாயார், "ஏண்டாப்பா! மாம்பலத்திற்குத் தானே நீ போயிருந்தே? கிருபமா சௌக்கியமாக இருக்கிறாளா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"நான் அங்கே போகவில்லையம்மா" என்று கூறி விட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டான் நாராயணன் வெறுப்புடன்.

"அப்படியானால் சாப்பிட வேண்டாமா? எழுந்திரு, வா!" என்று அன்புடன் அழைத்தாள் அன்னை.

"இல்லை யம்மா. நான் சாப்பிட்டாயிற்று. நீ போய்ப் படுத்துக் கொள்" என்றான் நாராயணன்.



சுவாமிமலை பிரும்மஸ்ரீ ஆர். எஸ். சாம்பமூர்த்தி பாகவதர் அவர்கள் சென்னை புரசைபாக்கம் அன்னதான சமாஜத்தின் ஆதரவில் இம் மாதம் ஒன்பது நாட்கள் ராமாயண காலட்சேபம் மிகவும் சிறப்பாகச் செய்தார். அறநிலையப் பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயுடு அவர்கள் பட்டாபிஷேக தினத்தன்று பாகவதரின் சொல் திறமையைப் பாராட்டி அவருக்கு "ராமாயண கேசரி" என்னும் சிறப்புப் பெயரை வழங்கினர். விவசாய மந்திரி பக்தவத்ஸலம் அவர்கள் தலைமை வகித்தார். ஆண்களும் பெண்களுமாக ஏராளமான ஆஸ்திக சிரோமணிகள் கூடி யிருந்தார்கள்.

அந்த அம்மாவும் ஒன்றும் புரியபடாத கலவர உள்ளத்துடன் அந்த அறையை விட்டு வெளியே சென்றாள்.

**நா**ராயணன் அவன் தாயாருக்கு ஒரே பிள்ளை. ஒரு பாங்கியில் நல்ல வேலை அவனுக்கு. கை நிறைந்த சம்பளம். மேல் செலவுகளுக்கும், சாப்பாட்டுக்கும் தேவையான பூஸ்திதி கிராமத்தில். அன்பைச் சொரியும் அன்னை. வேறு என்ன வேண்டும் அவனுக்கு?

அவன் ஒரு லட்சியவாதி. தயை மிகுந்த உள்ளம் படைத்தவன் தான். ஆனால் சற்று முன் கோபி.

அவனுக்கு வரதட்சிணையை மூட்டையாகக் கட்டிக் கொண்டு பெண் கொடுக்க வென்று எவ்வளவோ பேர்கள் வந்தார்கள். ஆனால் அவன் அவர்களை யெல்லாம் கண்ணெடுத்துப் பாராமல் கவர்ச்சி மிகுந்த கிருபமாவை வரதட்சிணையின்றி, ஆடம்பரம் இல்லாமல், அதட்டல் இல்லாமல் எல்லோருடைய உள்ளமும் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கும் வகையில் மணம் செய்து கொண்டான்.

நான்கு வருஷங்களாக அவர்களுடைய வாழ்க்கை கலங்காத நீரோடையைப் போல அமைதியாகத்தான் சென்று கொண்டிருந்தது. அன்புத் தென்றலும், இன்பவாடையும் தான் வீசி வந்ததே தவிர அவ்வமுதப் பொய்கையில் மனஸ்தாபம் என்ற புயல் ஒருநாளும் அடித்ததே கிடையாது.

இப்போது அந்த ஆதர்சத் தம்பதிகளின் வாழ்வு மலரும் கியித்தம் கிருபமா கருத்தரித்தாள். விதிப்படி எல்லாம் நடந்து பிரஸவத்திற்காக மாம்பலத்தில் இருக்கும் பிறந்தகத்திற்குச் சென்றிருந்தாள். நாராயணன் வாரம் தவறாமல் மாம்பலம் போய் மனைவியைப் பார்த்து விட்டு வருவான். இன்றும் அப்படித்தான் சென்றிருந்தான்.

நாராயணனுக்கு எப்போதுமே பெண் குழந்தைகளென்றால் ஒரு அலாதிப் பரியம். தனக்கு ஒரு தங்கை தமக்கைகூட இல்லையே என்ற வருத்தமும் அவனுக்கிருந்தது. தவிர அவனுக்குச் சங்கீதம் நாட்டியம் போன்றவைகளில் ஒரு அளவு கடந்த மோகமும் உண்டு. கிருபமாவின் மோகன கீதத்தில் அவன் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தவன்தான். அப்படியும் அவனுடைய ஆசை தீரவில்லை.

பெண் குழந்தையாகப் பிறக்க வேண்டும், அதைத் தன்னுடைய ஆசைக்குத் தகுந்தபடி வளர்க்க வேண்டும் என்னும் மனப்பால் குடித்து வந்தவனுக்கு, கிருபமாவின் இன்றைய ஆண் குழந்தைதான் வேண்டுமென்ற தர்க்கம் அளவு கடந்த சினத்தை உண்டாக்கி

விட்டது. தான் ஒன்றை விரும்புவது, அதை மறுப்பதா இவள்! என்று பெரிதும் மனங் கொதித்தான் நாராயணன்.

* * *

பதினைந்து பகல்களைப் பகலவன் பறித்துச் சென்றான். காரியாலயத்தில் வேலையில் ஈடுபட்டிருந்த நாராயணனின் மனம் அவன் வசமின்றி ஏதேதோ எண்ணச் சுழலில் ஈடுபட்டுத் தவித்துக் கொண்டிருந்தது.

அன்றிரவு நிருபமாவிடம் கோபித்துக் கொண்டு வந்ததிலிருந்து இன்று வரையில் அவன் அவளைப் போய்ப் பார்க்கவே யில்லை. பேசாமலிருந்து விட்டான். அதனால்தானோ என்னவோ? மனைவியைப் பற்றிய கவலை சிறிது சிறிதாகப் படரலாயிற்று, அவன் உள்ளப் பந்தலில். என்ன இருந்தாலும் பாசம் விடுமா?

இன்றுவேண்டுமானால் போய்நிருபமாவைப் பார்த்து விட்டு வரலாமா என்று எண்ணவும் தொடங்கியது அவனுடைய கனிவான உள்ளம். அவனுடைய கண்களின் எதிரில் நிருபமா கண்களில் நீர் தளும்பச் சோகத்துடன் நிற்பது போலத் தோன்றியது. ஆத்திரத்தின் ஆணிவேர் ஆட்டம் கண்டது. அதன் பயன்? பாகாய்க் கனிந்தது, அவனுடைய உள்ளம் பாவையின்பால். அப்போது கண கணவென்று ஒலித்தது டெலிபோன் மணி. ஆவலுடன் எடுத்துக் கொண்டான் அதை.

"ஆஸ்பத்திரியிலிருந்து பேசுகிறேன். நிருபமாவை இன்று காலையில் ஆஸ்பத்திரியில்சேர்த்தேன். இன்னும் பிரசவமாகவில்லை. பிரசவம் ரொம்பவும் கஷ்டமாக இருக்கும் போலிருக்கிறது என்று சொல்கிறார் பெரிய டாக்டர். நீ ஒரு தடவை வந்துவிட்டுப் போனால் எனக்கு ஆறுதலாக இருக்கும்."

அவனுடைய மாமனார்தான் பேசினார்.

பதறும் உள்ளம் பாரமாய்க் கனக்க, கடுகிச் சென்றான் ஆஸ்பத்திரிக்கு நாராயணன்.

கவலைக் குறியுடன் அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்த மாமனாரிடம் பீதி கலந்த குரலில் "இப்போது எப்படியிருக்கிறது?" என்று வினவினான்.

"இன்னும் பிரஸவம் ஆகவில்லை."

இதைச் செவியுற்றதும் அவனுள்ளம் ஒரு நிலையின்றி அலை பாய்ந்தது. எண்ணாத தெல்லாம் எண்ணி உள்ளங் கலங்கினான். தன் உயிருக்குயிரான நிருபமாவை விதி தன்னிடமிருந்து பிரித்து விடுமோ என்று நினைத்த மாத்திரத்தில் அவன் உள்ளமும், உடலும் ஒருமிக்க நடுங்கியது.

நேரம் வளர்ந்தது. நெஞ்சம் உழன்றது.

அப்போது மலர்ந்த முகத்துடன் அங்கு வந்தார் பெரிய டாக்டர்.

அவருடைய முக மலர்ச்சி தணியாத ஆவலோடு காத்திருந்த நான்கு விழிகளையும் ஒரே சமயத்தில் விரிந்து மலரச் செய்தது.

பரபரப்புடன் அணுகி வந்தார்கள் மாமனாரும் மாப்பிள்ளையும் பெரிய டாக்டரை.

"இனிமேல் பய மில்லை. இரட்டைக் குழந்தைகள். அதுதான் இவ்வளவு சிரமப்படுத்தி விட்டது. ஒன்று ஆண். ஒன்று பெண்" என்று கூறிய டாக்டரை ஆச்சரியத்துடன் விழித்துப் பார்த்தவாறு வாயடைத்து நின்றார்கள் இருவரும்.

* * *

"நிரு!"

சோர்வால் அயர்ந்திருந்த விழிகளிரண்டும் மெல்ல விரிந்து குரல் வந்த திக்கு நோக்கிப் பார்வையைச் செலுத்தியது.

"உடம்பு இப்போது எப்படியிருக்கிறது?" அன்பும் ஆதரவும் பின்னிக் கிடந்தன அவன் வார்த்தைகளில்.

"இப்போது ஒன்றுமில்லை......" மெல்லிய குரலில் மொழிந்தாள் நிருபமா.

"என்மீது கோபமா, ஏன் நிருபமா?" ஆற்றாமையோடு கேட்டான் நாராயணன்.

"உங்களுக்குத்தான் என் மீது கோபம். உங்கள் மீது எனக்குக் கோபமே கிடையாதே!" என்று கூறினாள் நிருபமா புன்முறுவலை இழையவிட்டு.


"காரண மில்லாமல் அன்று உன்னைக் கோபித்துக் கொண்டதுடன், பதினைந்து நாட்களாக உன்னை வந்து பார்க்காமலும் இருந்தது என் தவறு. அன்றைய சம்பவத்தை மறந்து விடு, நிருபமா" என்று குழைவுடன் கூறியபடி அவளுடைய மென் கரத்தைப் பற்றி அன்புடன் அழுத்தினான் நாராயணன்.

"பதினைந்து நாட்களாக என் உள்ளமும் வேதனையில் உழன்று கொண்டிருந்தது. இன்று பூராவும் உடலும் தாங்கொணாத சிரமத்தால் துன்புற்றது. இருந்த போதிலும் நம்மிருவரின் ஆசையும் ஒரே சமயத்தில் நிறைவேறி விட்டதில் எனக்கு எல்லையற்ற மன நிறைவு ஏற்பட்டு விட்டது. என் பிரார்த்தனையும் வீண் போக வில்லை. தங்களுடைய ஆசையும் நிறைவேறி விட்டது. இதுதான் 'மனம் போல் வாழ்வு' என்பது போலும்!" என்று கூறிய நிருபமா சிரமத்துடன் கண்களை மூடிக் கொண்டாள்.

நாராயணனுக்குச் சற்று நேரம் ஆயிற்று, திகைப்பு நீங்க. சற்று முன்பு அவன் மனம் இருந்த நிலை, இப்பொழுது அவன் மனசில் ஏற்பட்டிருக்கும் அடங்காத ஆனந்தம் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தது அவன் உள்ளம்.

நாராயணன் ஆவலுடன் எழுந்து சென்று இரண்டு தொட்டில்களையும் மாறி மாறிப் பார்த்தான். அவைகளுக்குள் ஆனந்த மான நித்திரையில் ஆழ்ந்திருந்த ஆணும் பெண்ணுமான இரண்டு குழந்தைகளையும் கண்டு கரை காணாத ஆனந்தமடைந்தான். அவனுடைய மனம் விதியின் விசித்திர விளையாடல்களைக் கண்டு வியந்தது.

எங்கள் புதிய தயாரிப்பு
உகந்த முறையில் உன்னத சுகந்தம்
TSR
# கோகுல் மாலா பத்திகள்



கோகுல மாலா பத்தி TSR & Co. GOKUL MALA BATHIS
டி.எஸ்.ஆர் & கம்பெனி, கும்பகோணம்.

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸிஸ், 37, ஜானி ஜான்கான் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு, சோல் ஏஜண்டுகள்: B. பலபட்டாபி செட்டியார், (1938-ல் ஸ்தாபிக்கப்பட்டது), கோயமுத்தூர்.

அந்த இருமலை நிறுத்துக-
தொண்டை ரணத்தை சமனமூட்டி
குணப்படுத்துக. மார்பு மற்றும்
சுவாசப்பை அடைப்பை நீக்குக.
எல்லாம் க்ஷணத்தில் முடிக்க.



# PEPS

பெப்ஸ் சாப்பிடுங்கள்.



உலக பிரசித்தி பெற்ற
தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகள்.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

பெப்ஸ் தொண்டை, மார்புவலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி; குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும்போது இந்த ரசங்கள் ஆவியாக மாறி ஸ்வாசத்துடன் தொண்டை, சுவாசக்குழாய் மூலமாக சுவாசப் பைக்குச் செல்லும் நோயின் ஆரம்ப ஸ்தானத்திற்கே சென்று வேலை செய்கின்றன. இதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாயும் உலக பிரசித்தி பெற்றும் விளங்குகின்றது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து அடைப்பை நீக்குவதுடன் இன்ப்ளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் பிணிகளின் இன்றியமையாததாயுமுள்ளது.

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்.

## சுகமான, மழமழப்பான க்ஷவரத்திற்கு



## கேரளா ஷேவிங் ஸ்டிக்

(சந்தனம் [illegible])

ஸ்டிக்குகளும்
கிண்ணங்களும்



கேரளா ஸோப் இன்ஸ்டிட்யூட்,
கோழிக்கோடு

[illegible]

[illegible]

SISTA'S - KS - 38



## தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.,

தலைமை ஆபீஸ்: கல்கத்தா.

செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 2 கோடிகள்
ரிசர்வ் நிதி
ரூ. 75 லக்ஷங்கள்
வெளிநாட்டு
பிராஞ்ச் ஆபீஸ்கள்:

பாகிஸ்தானில்:
சிட்டகாங், கராச்சி.
பர்மாவில்:
ரங்கூன், மோல்மீன்,
அக்யாப், மாண்டலே.
மலேயாவில்:
சிங்கப்பூர், பெனாங்
யுனைடெட் கிங்டத்தில்:
லண்டன்.
பாண்டிச்சேரியிலும்
ஹாங்காங்கிலும் கூட
ஆபீஸ்கள் உண்டு.

ஏஜென்டுகள்:
உலகமெங்கும்—
ஐரோப்பா, அமெரிக்கா,
ஆசியா, ஆப்பிரிக்கா,
ஆஸ்திரேலியா.
எல்லாவித பாங்க்
அலுவல்களையும் செய்கிறது.

**INVEST IN OUR 3-YEAR Cash Certificates**

# வீரமணியின் விவாகம்

பூவை

"பூவை...... ஏ, பூவை!"

கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தாள் பூவை. அப்பொழுதுதான் அவளுக்கு எல்லாம் ஞாபகம் வந்தது. மெழுகப்பட்டிருந்த வாசல் பூக்கோலமும் பூக்காடுமாகப் பொலிவுடன் விளங்கியது. மார்கழி மாதத்தில் ஒவ்வொரு நாளிலும் வாசலுக்குக் கோலமிட்டு, ஸ்ரீதேவியை வரவேற்ப தென்றால், அவளுக்கு ஒரே ஆனந்தந்தான்.

கூப்பிடு தொலைவிலிருந்த நடராஜர் கோவிலின்றும் காலைப் பூஜைக்குரிய மணியோசை கேட்டது.

பூவை திரும்பினாள். அவளுடைய பார்வையில் தெரிந்த அவள் தந்தையின் உருவைக் கண்டு ஓட்டமாக ஓடினாள். "அப்பா, அப்பா, ஏன் அப்பா உங்க முகம் என்னமோ போல இருக்கிறது! உடம்புக்கு முடியலையா! ஐயோ, மேலெல்லாம் நெருப்பாக எரியுது. திண்ணையிலே போய்ப் படுத்துக் கொள்ளுங்க, அப்பா. நொடியிலே போய் நம் வைத்தியர் சோமசுந்தரத்தைக் கூட்டி வருகிறேன். அவர் பார்த்து முடியாமல் போனால், நம் ஜில்லா போர்டு டாக்டர் பக்கிரிசாமியை அழைக்கலாம்...... அப்பா..." என்று கண்ணீரும் கம்பலையுமாகப் பேசினாள் பூவை.

"கண்ணே, நீ கலங்காதே. இரவு வயலிலே தண்ணீர் இறைவை நடந்துச்சு. கண் விழிச்சுப் பார்த்துக்கிட்டிருந்ததிலே, லேசாகக் கொஞ்சம் உடம்பிலே சூடு கண்டிருக்கு. உம். உன் ஆசையையும் எதுக்குக் கெடுப்பானேன்! போய், முதலிலே நம்ப நாட்டு வைத்தியரையே கூட்டிவா!" என்று சொல்லிய ஆறுமுகம் செட்டியார், தன் மகளின் கருண்ட கேசத்தை அன்புடன் கோதிவிட்டார்.

"சரி, அப்பா!"

சிட்டாய்ப் பறந்து விட்டாள் பூவை. செட்டியார், ததும்பியிருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். மண்டியிருந்த வியர்வையைத் துண்டை எடுத்துத் துடைத்து விட்டு, "நடராஜப் பிரபோ!" என்று பெருமூச்சு விட்டார் செட்டியார். வாசலிலிருந்து உள்ளே நுழையும் சமயம் யாரோ வரும் காலரவம் கேட்டுத் திரும்பினார்.

"மாமா!"

செட்டியாருக்குத் தன் கண்கள் ஏதோ செப்பிடு வித்தை காட்டுவதாகப் பட்டது. 'யார், வீரமணியா! எப்போது ரங்கூனிலிருந்து வந்தான்! ஒரே ஆச்சரியமாக இருக்கிறதே...' என்று அவர் மனம் என்னவெல்லாமோ எண்ண ஆரம்பித்தது.

"மாமா!"

"வீரமணி, சௌக்கியமா! ரங்கூனிலிருந்து எப்போ வந்தாய்!"

"நேற்றுத்தான் வந்தேன் மாமா! உங்களுக்குச் சுகமில்லையா! முகம்கூட ஒரு மாதிரியிருக்கிறதே! எங்கே பூவையைக் காணோம்!......" என்றான் வீரமணி.

செட்டியார் அவனது கேள்விகளைக் காதில் ஏற்றுக் கொண்டால்தானே!

"என்ன தம்பி, உங்க அப்பா என்னைப் பார்த்து, நான் கொடுக்க வேண்டிய ஆயிரம் ரூபாயை வட்டியோடு கறந்து கொண்டு வரச் சொல்லி அனுப்பிச்சு வைத்தாரா......!"

வீரமணி 'ஆம்' என்பது போல மெள்ளத் தலையை ஆட்டிவிட்டு மௌனமானான். "மாமா, அப்பாவுக்கும் உங்களுக்கும் உள்ள பகை இன்னமும் தீரவில்லையா! ஊர் இரண்டு பட்ட போது நீங்கள் இரண்டு பேரும் தரப்புக்கு ஒருவராகத் தலைமையாகிச் சண்டை போட்டீங்க. சரி. ஆனால் இப்போதான் ஊர் ராசியாகி விட்டதே! உம்... அப்பாதான் ஒரே முசுடு...! மாமா, அப்பாவுக்கு என்ன பதில் சொல்ல! எனக்கு உங்ககிட்டே வந்து கேட்கவே வெட்கமாயிருந்துச்சு... என்னைத் தவறாக நினைச்சுக்காதீங்க......"

"வீரமணி, எல்லாம் எனக்குத் தெரியும். உங்க கடனைத்தான் எங்கிட்டேயிருந்து வசூலித்துக் கொள்ள உங்கப்பா வேலாயுதத்துக்குத் தெரியுமே. போன வாரம் வக்கீல் நோட்டீஸ் விட்ட மாதிரி, அடுத்த வாரம் பட்டுக்கோட்டை கோர்ட்டிலே வழக்குத் தொடரச் சொல்லு...! அன்று, ஐந்து வருஷத்துக்கு முந்தி அறுபட்ட நம்ப இரண்டு குடும்ப உறவு இப்போது மாத்திரம் ஒட்டப் போகுதா என்ன! நீ போ அப்பா..."

ஆறுமுகத்தின் சூடான சொற்கள் வீரமணியை மலைக்கச் செய்தன. மூடின வாய் திறவாமல், அவன் கூடத்தைத் தாண்டி வாசலுக்கு வந்தான். வந்தவன் யார் மீதோ மோதிக் கொண்டதை உணர்ந்து, தலையை நிமிர்த்தினான்.

பூவைப்போலப் புன்னகை பூத்த வண்ணம் அங்கே பூவை நின்று கொண்டிருந்தாள்.

"பூவை...!"

"அத்தான்!..."

அதற்குள் உள்ளேயிருந்து செட்டியாரின் கூப்பாடு கேட்டது. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல், வீரமணியையே பார்த்துக் கொண்டே உள்ளே ஓடினாள் பூவை.

"அப்பா, வைத்தியர் இன்னும் கொஞ்ச நாழிகைக்குள்ளே வந்திடுவார், அப்பா..."

"சரி, சரி...!"

★

உள்ளங்கை விரிப்பில் கன்னத்தை வைத்துக் கொண்டு பூவை உட்கார்ந்திருந்தாள். மனத்திரையில் நிழலாடிச் சிரித்துக் கொண்டிருந்த வீரமணியின் உருவம் அவளுக்கு முன்னர் நேருக்கு நேராக நிற்பது போல ஒரு பிரமை எழுந்தது. நாணம் குங்குமச் சிவப்பை ஏற்றியது அவள் கன்னங்களில். 'அத்தானோடு ஐந்து வருஷம் கழிந்து எப்படி எனக்கு முதன் முதலில் பேசத் துணிச்சல் வந்தது...!' என்று பல முறை கேட்டுக் கொண்டு அவள் துணிச்சலை அவளே வியந்து பாராட்டினாள். "அத்தான்" என்ற சொல் மறுபடியும் அவள் உதட்டை விட்டுப் புறப்பட்ட போது, பெருமூச்சும் கண்ணீரும் கூடவே புறப்பட்டது.

தந்தையைப் பார்த்தாள் மகள். செட்டியார் படுக்கையில் புரண்டு படுத்துக் கொண்டிருந்தார். அண்டையில் சென்று, அடுத்த வேளை மருந்தைத் தேனில் கரைத்து இலையுடன் நீட்டினாள். அவர் சாப்பிட்டார்.

"கண்ணே, ராத்திரிக்குச் சாப்பிட்டியா! ஆஸ்பத்திரியிலிருந்து நடுச்சாமத்து மணி கூட அடிக்குதே."

"சாப்பிட்டேன், அப்பா! நீங்க பாட்டுக்கு அலட்டிக்காமல் தூங்குங்கள் அப்பா. நடராஜர்

நம்மை ஒரு நாளும் கைவிட மாட்டார்...... நம்பினவர் கெடுவதில்லே என்று நீங்கதானே அடிக்கடி சொல்லுவீங்க......"

செட்டியாரின் உதட்டோரத்தில் இருந்து இள நகை ஒன்று வந்து இருந்து சென்றது.

கூடத்துக்கு வந்த பூவை, இரவு தான் சாப்பிட வேண்டிய உணவுக்கும் சேர்த்துத் தண்ணீர் விட்டு மூடி வைத்தாள். மறுபடியும் கிலா முற்றத்தில் திண்ணையில் உட்கார்ந்தாள்.

வீரமணி காலேயில் வந்து போன தகவலே, ஆதியோடு அந்தமாகத் தகப்பனிடம் துருவிக் கேட்டுத் தெரிந்து கொண்டாள் பூவை. 'வீரமணி அப்பாவுக்குப் பட்டிருக்கிற ஆயிரம் ரூபாய் கடனே எப்படி என் அப்பா தீர்க்கப் போகிறார்! இந்தக் கவலேயே மூக்காலும் அப்பாவைத் தள்ளாத வயசிலே படுக்கையிலே சாய்த்து விட்டுருச்சே... தெய்வமே ஏன் இப்படி எங்களே வீணுகச் சோதிக்கிறாய்! இந்தப் பாழாய்ப் போன ஊர்க் கட்சி வராமலிருந்தால், இந்நேரம் எங்க குடும்பத்துக்கும் அவங்க குடும்பத்துக்கும் என்னென்னமோ ஒட்டுறவு பலப் பட்டிருக்குமே... அப்பா பட்ட கடனுக்கும் இப்படிப் பட்ட கழுத்துப்பிடி வந்திருக்க மாட்டாதே' என்று பலவாறு எண்ணமிடலானுள் அவள்.

★

நூவத்தகுடிக்கும் பூவைமாநகருக்கும் இடையில் ஓடிய காவ்வாய் ஊரை இரண்டாகப் பிரித்து விட்டிருந்தாலும், அந்தக் காலத்தில் அந்த இரு குடும்பங்களே மட்டும் ஒன்றோடொன்று இறுகப் பிணைத்துத்தான் விட்டிருந்தது. இணைந்த பாசத்துக்கும் ஒட்டிய உள்ளத்துக்கும் உபமானம் சொல்லும் ஜனங்கள் கூட "நம்ப ஆறுமுகம் செட்டியார், நம்ப வேலாயுதம் செட்டியார் போல" என்றுதான் கூறுவது வழக்கம். அவர்களிடையே 'கொள்வினே, கொடுப்பினே'யும் வமிச பரம்பரை வழி வந்தது. இந்த முறையில்தான் இவ்விரு செட்டியார்களும் தம் நாளேயக் குடும்பங்களேயும் பின்னிப் பிணைத்துக் கொள்ளத் தீர்மானித்திருந்தார்கள். அதற்கேற்றாற்போல, வேலாயுதம் செட்டியாருக்கு வீரமணி பிறந்த அடுத்த ஆண்டில் ஆறுமுகம் செட்டியாருக்குப் பூவை பிறந்தாள். அவர்களது 'கனவுகள்' பூரணம் பெற்று வந்தது. தேர், திருவிழா, பொங்கல் பண்டிகை ஆகியவற்றுக்கெல்லாம் இரு குடும்பத்தினரும் விருந்துகள் பரிமாறிக் கொள்வார்கள். வேலாயுதம் செட்டியார் பசையுள்ள புள்ளி; ஆறுமுகம் செட்டியார் சுமார். அவர் இவருக்கு ஒத்தாசை. காலம் காலண்டர்களேக் கபளீகரம் செய்தது. வீரமணியையும் பூவையையும் ஜோடியாக்கிப் பேசி, முறை சொல்லிக் கேலி செய்த உறவுக்காரர்கள் அவ்விருவரையும் கடியோக சுபதினத்தில் தம்பதிகளாக்கி முடிவு கட்டினுர்கள். திருமணத்துக்குத் தேதியும் வைத்தார்கள்.

அப்படிப்பட்ட பொன் வேளேயில்தான் அந்த இடி மின்னுமல் முழங்காமல் இடித்தது.

உள்ளூர் நடராஜர் கோவில் கடைசி மண்டகப்படி முடிந்து வெள்ளி ரதம் ஊர்வலம் புறப்படுகையில் முதல் காளாஞ்சியை யார் பெறுவது என்று தகராறு மூண்டது. இதுபற்றி, செட்டியார் இருவரிடையிலும் மூண்டுவிட்ட வாய்ப் பேச்சு பெரிய சண்டைக்கே கொண்டு விட்டது. நண்பர்கள் ஜன்ம வைரிகளாயினர். அடிதடி வந்தது; ஊர் நாட்டாண்மை வெறி அவர்கள் இருவரையும் கோர்ட்டுப் படியேறச் செய்தது. ஒரு ஊர் இரண்டு பட்டது; கிழக் கட்சி, மேலக் கட்சி என்று பிரிந்து கிழக் கட்சிக்கு வேலாயுதம் செட்டியாரும் மேலக் கட்சிக்கு ஆறுமுகம் செட்டியாரும் தலேமை பூண்டனர். இரு தரப்பிலும் தங்கள் தங்களுக்கு வேண்டியவர்களேப் படை சேர்த்துக் கொண்டு பூசலே வளர்த்துக் கொண்டார்கள். கடைசியில் இரு தரப்பினருக்கும் கோர்ட்டில் அபராதம் கிடைத்ததுதான் மிச்சம். அன்று ஆரம்பித்த பூசல் அடுத்த ஐந்தாம் வருஷம் தான் முடிவு கண்டது.

ஊர் இரண்டுபட்டதின் விளைவு, பாவம் வீரமணியையும் பூவையையும் இரண்டுபடச் செய்து விட்டது. இரு மனம் ஒன்று சேர விருந்த பொன் வேளேயும் தப்பியது. அவர்களின் கல்யாணம் நின்றது; தூண்டில் புழுவாகத் துடித்தார்கள் இருவரும். வீரமணியை ஏறெடுத்தும் பார்க்கக் கூடாதென்று மகளிடம் எச்சரித்தார் ஆறுமுகம். பூவையை நிமிர்ந்துகூடப் பார்க்கலாகாதென்று மகனிடம் கடுமையாகச் சொன்னுர் வேலாயுதம்.

வீரமணிக்கு வேறிடத்தில் பெண் பார்த்து முடித்து, கல்யாணத்திற்கு முகூர்த்தம் குறிப்பிட்டார் வேலாயுதம். அப்பொழுது வீரமணி சொல்லாமல் கொள்ளாமல் ஊரைத் துறந்து போய், அடுத்த மாதம் தான் ரங்கூனிலிருப்பதாக 'விமானத் தபாலில்' கடிதம் போட்டான்.

பூவையின் கல்யாணம் நிச்சயமாகி விவாகத்துக்கு நாலுநாள் இருக்கையில், பிள்ளே வீட்டார் சகுனம் சரியில்லே என்று சொல்லி, கல்யாணத்தை அடுத்த வருஷம் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டார்கள். இதில் பூவைக்கு மட்டும் மட்டற்ற மகிழ்ச்சி. ஆனல் அவள் தந்தையின் மனம் பட்ட பாடு கொஞ்சமல்ல.



அப்பொழுதுதான் அவளுக்கு மற்றொரு இடி வந்தது. கூடிப் புரண்ட காலத்தில் வேலாயுதத்திடம் ஆயிரம் ரூபாய் நோட்டின் பேரில் வாங்கியிருந்தார் ஆறுமுகம். அதை வசூலிக்க, யாதொரு முன்னறிவிப்பும் இன்றி ஆறுமுகத்துக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுத்துப் பயங்காட்டினார் வேலாயுதம். அதற்கடுத்து, கடல்கடந்து மீண்ட தன் மகன் வீரமணியையும் ஆறுமுகத்திடம் அனுப்பி, கடனை வசூலிக்கச் செய்தார் வேலாயுதம். அப்பொழுதுதான் ஆறுமுகத்தின் கோபம் அணை உடைந்தது; அப்பொழுதுதான் பூவை தன் மனம் கவர்ந்த அத்தான் வீரமணியை நெடு நாட்கள்—பல யுகங்கள் கழித்துத் தரிசித்தாள்!

★

வாசலில் 'ஜல் ஜல்' என்று வண்டி வரும் சத்தம் கேட்டது. பூவை துள்ளி ஓடி வந்து பார்த்தாள். வண்டியில் வேலாயுதமும் அவர் மகன் வீரமணியும் இருப்பதைப் பார்த்ததும் உள்ளே ஓடினாள்.

ஆறுமுகம் துண்டை உதறித் தோளில் போட்டவாறு மிடுக்குடன் வெளியே வந்து நின்றார். வந்தவர்களை ஒரு முறை நோட்டம் விட்டார்; காரணம் புரிந்தவர்போல, கனைத்துக் கொண்டார்.

"தம்பி வீரமணி, ஆறுமுகத்தினிடம் பணத்தைக் கேள்..." என்றார் வேலாயுதம் வண்டியில் சாய்ந்து நின்றபடி.

"என்னுடன் பேச்சு என்ன வேண்டிக் கிடக்கிறது! வக்கீல் நோட்டீஸ் விட்டமாதிரி, கடனுக்கு வழக்கு தொடுத்து விட்டால், கோர்ட்டில் நான் பேசிக் கொள்கிறேன்......"



"ஆறுமுகம் செட்டியார்! இதுதான் உங்கள் பதிலா! வேடிக்கையாக இருக்கிறதே! கொடுத்த கடனை அப்பா கேட்க வந்தால், இதுதான் உங்கள் பதிலா! கடனை வாங்கியபோது உள்ள சந்தோஷம், கொடுக்கும்போதும் இருக்க வேண்டும். பழைய தோஷத்துக்குக் கொஞ்சம் மட்டு மரியாதை காட்ட எண்ணினால், ஓரேமுட்டாகக் குதித்து நிற்கிறீரே. நீர் நிஜமாகவே மனிதரென்றால், வருகிற வாரம் என் அப்பாவின் பணத்தைக் கட்டிவிட்டு மறுவேலை பாரும். இல்லையானால், உம்மை ஊர் சிரிக்கப் பண்ணி விடுவோம்......" என்று கூச்சல் போட்டான் வீரமணி. அதற்குள் மகனின் எதிர்பாராத கோபம் கண்ட வேலாயுதம் அவன் வாயைப் பொத்தினார்.

ஆறுமுகத்துக்குத் தன் காதுகளை நம்பவே கூடவில்லை. இத்தனை நாளும் அன்புடன் பேசி மரியாதையுடன் நடந்த வீரமணியா, தந்தைக்குப் பரிந்து இப்படி மரியாதை கடந்து வரம்பு மீறிப் பேசுகிறான்! இவனுக்குத்தான் அவர் மகள் பூவையைக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமா!

"வீரமணி, உன் அப்பன் பேச வேண்டியதையெல்லாம் நீயே பேசி முடித்து விட்டதல்லவா! முதல் வேலையாக நீயே போய் என்மீது 'பிராது' போடு. இனி இந்த என் மண்ணில் உனக்கும் உன் அப்பனுக்கும் இடமில்லை. நடவுங்கள்......" என்று கர்ஜித்தார் ஆறுமுகம்.

வண்டி மறைந்தது.

இந்த நிகழ்ச்சி முடிந்ததும் பூவையின் கண்களில் நீர் நிறைந்திருந்தது. அவளுக்குப் பேச நா எழவில்லை. அப்பாவைப் பார்க்கவே அவளுக்கு வெட்கமாயிருந்தது.

நட்ட நடு நிசி; மை இருட்டு; சராசரங்கள் அனைத்தும் அயர்ந்து நித்திரைசெய்யும் வேளை அது.

ஆறுமுகம் செட்டியாருக்கு மட்டும் உறக்கம் பிடிக்க வில்லை; அன்று கடன் வசூலுக்கு வந்த சமயம், வேலாயுதத்துடன் கூட வந்த அவர் புதல்வன் வீரமணி சொன்ன சுடு சொற்கள்தான் திரும்பத் திரும்ப அவரைத் தூண்டில் போட்டுத் துயர்ப்படுத்திக் கொண்டிருந்தன. நடந்ததும் நடப்பதுமான சம்பவங்கள் அவர் நெஞ்சின் அமைதியைப் பறித்தன. வெளியே புறப்பட்டார் ஆறுமுகம்.

அவர் கொஞ்ச தூரம் போனதும் வேலாயுதம் செட்டியாரின் வீடு தெரிந்தது. வீட்டைச் சுற்றி யாரோ நாலைந்துபேர்கள் ஏதேதோ ஆயுதங்கள் சகிதம் நின்றார்கள். ஆறுமுகத்துக்கு விஷயம் விளங்கியது. 'வேலாயுதம் பட்டணத்துக்குப் போயிருக்கும் துப்பைத் தெரிந்து, திருடர்கள் கொள்ளையிட வந்து விட்டிருக்கிறார்கள். வீரமணிப் பயல் மட்டும்தான் பாவம் உள்ளே தனியாக இருப்பான். இருக்கட்டும். பயல் விதி எப்படி யிருக்கிறதோ!' என்று எண்ணினார். எல்லா விரோதத்தையும் ஒரு கணம் மறந்து, திருடர்களை விரட்ட யோசித்தவர், அடுத்த நிமிஷமே அதைக் கைவிட்டு விட்டார். வீரமணி அன்று தன்னைத் திட்டிய ஆத்திரமிக்க வார்த்தைகள் நினைவில் குதித்து அவரை மூச்சுப் பேச்சில்லாமல் வீடு திரும்பச் செய்தன.

★

முல்லைச் சிரிப்பு அரும்பிக் கொண்டிருந்த நூறு ரூபாய் நோட்டுக் கட்டுகளுக்கு மத்தியில் ஆறுமுகம் செட்டியார் முழு மனத் திருப்தியுடன் நல்ல மூச்சு விட்டுக் கொண்டிருந்தார்.

# தாயே! உங்களுக்கு பிரசவத்திற்கு முன்பும் பின்பும் ஓவல்டின் தேவை!






கர்ப்பிணி ஆரோக்யமுற்றிருக்கவும், பிறக்கப்போகும் குழந்தைக்கு தேவையான உணவை சேகரிக்கவும் அவளுக்கு அதிகப்படியான போஷணை அவசியம். அதிகப்படியான போஷணை அளிக்க ஓவல்டின் இன்றியமையாதது: அதில் கர்ப்பிணிக்குத் தேவையான புஷ்டிதரும் சத்துக்கள் இருக்கின்றன; குழந்தைகளுக்கு இயற்கை ஆகாரமாக இருக்கும் தாய்ப்பால் பெருகவும் உதவுகிறது.

ஓவல்டினில் பழுத்த பார்லிமால்ட், ஆடை நிரம்பிய சுத்தமான பசும்பால், சிறந்த கொக்கோ, இயற்கை பாஸ்பேடைடுகள், பி & டி விட்டமின்களும் இருக்கின்றன.

சிசுவின் ஆரோக்ய வளர்ச்சிக்கு உடனே ஓவல்டின் பருக ஆரம்பியுங்கள்! போலிகளைத் தள்ளிவிடுங்கள்.



விநியோகஸ்தர்கள் :
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.

## ஓவல்டின்

அதிகப்படியான போஷணைக்கு

OV. 391

"பூவை! இப்போதே போய் ஆயிரம் ரூபாயை வட்டியுடன் வேலாயுதத்திடம் வீசிவிட்டு வருகிறேன். தெய்வம் நம் பக்கம் நின்று நில வியாஜ்யம் ஜெயித்து, நிலத்தை விற்று இரண்டாயிரம் ரூபாய் கிடைத்ததால்தான் நம் மானம் பிழைத்தது! கண்ணே, இனி எனக்கு உன் கல்யாண விஷயம் முடிந்து விட்டால் அப்புறம் கவலையே கிடையாது..." என்று சொல்லித் திரும்பினார் ஆறுமுகம் செட்டியார்.

அங்கு வேலாயுதம் செட்டியாரும் அவர் பிள்ளை வீரமணியும் நிற்பார்கள் என்று ஆறுமுகம் எங்ஙனம் எதிர்பார்த்திருப்பார்...!

"ஆறுமுகம், நீ தம்பியிடம் கொடுத்த ரூபாய் ஆயிரமும் வட்டியும் கிடைத்தது. அத்தோடு, என்மீது நீ கொண்ட பகைமையையும் மறந்து நீ செய்த உபகாரத்துக்கு நன்றி தெரிவித்துப் போகவே நானும் வீரமணியும் இப்போது வந்திருக்கிறோம். நான் ஊரில் இல்லாதபோது என் வீட்டைத் திருடர்கள் கன்னம் வைத்த போது, நீ போலீசுக்குத் தெரிவித்து எங்களைக் காப்பாற்றியதற்கு நாங்கள் ரொம்பவும் கடமைப் பட்டிருக்கிறோம்!" என்று பேசிக் கொண்டே போனார் வேலாயுதம். அவர் கண்கள் கலங்கின.

ஆறுமுகத்துக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அப்பொழுது பூவை புன்னகை புரிந்தவாறு தூண் மறைவில் நின்றவாறே, "அப்பா, நீங்கள் பட்ட கடனைச் செலுத்தியது யார் தெரியுமா! வீரமணி அத்தானுக்கும்! மணியக்காரர் இந்த ரகசியத்தைச் சொன்னார். ரங்கூனில் சேர்த்த பணத்தை நீங்கள் கொடுத்ததாகத் தன் அப்பாவிடம் ரகசியமாகக் கொடுத்திருக்கிறார்!" என்றாள் மெல்லிய குரலில்.

இப்போது, வீரமணி மகிழ்ச்சி பொங்கத் தன் அப்பாவின் திசை நோக்கி, "அப்பா, நம் வீட்டிலே நடக்க இருந்த திருட்டைத் தடுத்து, திருடர்களைப் போலீசுக்குத் துப்பு காட்டித் தந்து என்னையும் காப்பாற்றியது யார் தெரியுமா! நம் மாமா ஆறுமுகம் செட்டியார் மகள் பூவைதானுக்கும்! மாமா பேரில் நீங்கள் கொண்டுள்ள விரோதம் மறைய வேணுமே யென்றுதான், நம்மைக் காப்பாற்றியது அவர் என்றேன். உங்கள் மனமும் மாறியது. அன்று உங்களுடன் வந்த போது நான் அவரை ஆத்திரமாகப் பேசியதுகூட என் நடிப்புத்தான்! அப்போதுதானே உங்களுக்கும் என் மீது புது நம்பிக்கை பிறக்கும்! அதனால் தானே என் பணத்தை மாமா தந்ததாகச் சொன்ன போது நீங்கள் என்னைத் துளியும் சந்தேகப்படவில்லை! ஆனால் மாமாவை அன்றைக்குத் திட்டியதற்கு, நான் வடித்த கண்ணீர் ஆண்டவனுக்குத்தான் தெரியும்" என்று உணர்ச்சி பொங்கக் கூறினான்.

தாம் செய்யத் தவறியதற்குப் பரிகாரமான மகனின் தீரச் செயலைப் போற்றும் ரீதியில் அன்புடன் நோக்கினார் ஆறுமுகம்; மகனின் அன்பு உள்ளத்தை வாழ்த்தும் வகையில் பிரியம் சொட்டப் பார்த்தார் வேலாயுதம்.

தனக்கென மகத்தான உதவி புரிந்த வீரமணிக்கு நன்றி சொன்னார் ஆறுமுகம். தம் வீட்டில் விளக்கேற்றி வைத்த வீரகாந்தி பூவைக்கு நன்றி தெரிவித்தார் வேலாயுதம்.

"வேலாயுதம், நான் தர வேண்டிய ரூபாய் ஆயிரமும் வட்டியும் இதோ இருக்கிறது. வீர


# உங்கள் இருதயத்தை

## அசட்டை செய்யாதீர்கள்

★

★ விட்டு விட்டு நாடி துடித்தல்

★ மயக்க உணர்ச்சி

★ மார்பில் ஏற்படும் அழுத்தும் உணர்ச்சியால் உடல் சோர்வு

★ குறைந்த சுவாசம்

★ களையற்றமுகம்

★ இடது கையில் வலி

★ கால்கள் வீக்கம், படைபடைப்பு மற்றும் பலவீனத்தால் திடீரென உடல் வியர்த்து குளிர்ச்சியடைவது.

இவைகள் இருதய உபாதையின் நிச்சயமான சின்னங்கள்

★

வைரம், சிவப்பு, முத்து

போன்ற ஒன்பது உயர்ந்த கற்களின் சேர்க்கை கொண்ட

# நவரத்ன கல்பம்

சாப்பிட்டு நீட ஆரோக்கியத்தைப் பெறுங்கள்



கவிராஜ் பண்டிட்

துர்க்காதத்த சர்மா

வைத்திய வாசஸ்பதி

அவர்களால்

கண்டு பிடிக்கப் பட்டது.

★

இலவசப் பிரசுரங்களுக்கு எழுதவும்:

THE MANAGER:

**NAVRATNA KALPA PHARMACY**

JULLUNDUR CITY (India)

Grams: 'NAVRATNA' Phone: 401

மணிக்குச் சேர வேண்டிய பணத்தை நீ திருப்பிக் கொடுத்து விடு......" என்றார் ஆறுமுகம்.

"ஆறுமுகம், இன்று காந்தி மகான் பிறந்த நன்னாளில் நான் வந்து உன்னிடம் பெண் கேட்கத் தான்! வீரமணி, வண்டியிலிருந்து வெற்றிலைபாக்கு, தேங்காய், பழம் எல்லாவற்றையும் கொண்டு வா!"

"வேலாயுதம், உன் கடனைத் தீர்த்ததும், அடுத்த வேலையாக, என் மகளை உன் மகனுக்கு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோர உன் மனை தேடி வரத்தான் எண்ணிக்கொண் டிருந்தேன். என் மகள் பூவை உன் மகன் வீரமணிக்கெனப் பிறந்தவள்! நாளெல்லாம் என் பெண் வீரமணியின் புகைப் படத்தை வைத்துக் கொண்டு கண்ணீர் வடித்ததையும் நான் அறிய நேர்ந்தது; அதனால்தான் நான் வேறிடத்தில் சம்பந்தம் பண்ணத் தயங்கினேன். வீரமணிக்கு வாழ்க்கைப்பட வேண்டும் என்பதுதான் என் மகளின் இன்பக் கனவு. என் கிளியை வீரமணியிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதுதான் என் ஆசைக் கனவு..." என்றார் ஆறுமுகம் செட்டியார் ஆனந்தக் கண்ணீருடன்.

வேலாயுதத்துக்குச் சந்தோஷ மிகுதியில் பேச நா எழவில்லை.

# சங்கீத நீதிபதி

எம். எஸ். ராமசாமி பி. ஏ., பி. எல்.

ஒரு நாள் வாடி மெலிந்த வயதான கிழவர் ஒருவர், மயிலாப்பூரில் மாட வீதியிலுள்ள ஒரு வக்கீல் வீட்டில் நுழைந்தார். தம்முடைய குடும்ப கஷ்டங்களையும், பொருளாதார நிலைமையும் எடுத்து உரைத்து உதவி பெற வேண்டும் என்பது அவருடைய எண்ணம். வக்கீல் அவர்கள் அவருடைய வரலாற்றைக் கேட்கும் பொழுது, அந்த ஏழைக் கிழவர் விலை மதிப்பில்லாத கலா ரத்தினங்களைப் பொக்கிஷமாக வைத்திருந்தார் என்று தெரிந்து கொண்டார். கலா தேவியின் அருள் தருந்த இடத்தை அடைந்தது. அந்தக் கிழவருக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுத்து மயிலாப்பூரிலேயே அவர் தங்க ஏற்பாடு செய்து, அவரிடமிருந்து மிகுந்த சிரத்தையுடன் உயர்ந்த கலா ரத்தினங்களைப் பகிர்ந்து கொண்டார். அந்த வயதான கிழவர் முத்துஸ்வாமி தீக்ஷிதரின் பேரனை அம்பி தீக்ஷிதர். அவரை ஆதரித்துப் பக்தி சிரத்தையுடன் கலைப் பொக்கிஷத்தைப் பகிர்ந்து கொண்டவர், சென்ற மூன்று ஆண்டுகளாகச் சென்னை ஹைகோர்ட்டில் நீதிபதி பதவியைச் சிறப்புடன் வகித்து இப்போது இந்தியாவின் ஸுப்ரீம் கோர்ட் நீதிபதியாக நியமனம் பெற்றிருக்கும் டி. எல். வெங்கட்ராம அய்யர் அவர்கள்.



கனம் டி. எல். வெங்கட்ராமய்யர்

சென்ற பதினைந்து வருஷங்களாக முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கிருதிகளைப் பரவச் செய்து, அதன் உயர்தர லக்ஷண லக்ஷ்யங்களை எடுத்துக்காட்டி ஸ்ரீ டி. எல். வெங்கட்ராமய்யர் கர்நாடக சங்கீதத்துக்கு அரும் பெரும் தொண்டு புரிந்திருக்கிறார். தீக்ஷிதரின் கிருதிகள் ஆழ்ந்த கருத்துக்களுடனும், சங்கீத நுட்பங்களுடனும் இருந்தும், அவற்றைக் கையாளும் சிரமத்தால் பாடகர்கள் தீக்ஷிதர் கீர்த்தனங்கள் அதிகம் பாடாமல் இருந்தார்கள். இந்த மனப்பான்மையைப் போக்கி, முத்துஸ்வாமி தீக்ஷிதரின் அபூர்வ கிருதிகளைக் கச்சேரிகளிலும் மற்ற இடங்களிலும் வித்வான்கள் அதிகமாகப் பாடும்படி செய்தது, வெங்கட்ராம அய்யரின் மகத்தான தொண்டு.

கர்நாடக சங்கீதக் கலைக்கு ஓர் உயர்தர கோர்ட் நியமித்தால், அதற்கு அய்யர் அவர்களையே பிரதம நீதிபதியாக ஏற்படுத்த வேண்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சென்ற இருபத்தைந்து வருஷங்களாக சங்கீத வித்வத் ஸபை செய்துள்ள ராக சர்ச்சைகள் தீர்மானங்கள் எல்லாவற்றிற்கும் பொக்கிஷமாக இருப்பவர் அய்யர் அவர்கள்தான்.

அய்யர் அவர்கள் ஸ்ரீ வித்யா உபாஸகர். தெய்வ பக்தியும் நம் பழைய கலாசாரத்தில் பூரண நம்பிக்கையும் கொண்டவர். குருகுகனின் அருளால் அவருக்குப் பதவிகள் மேன் மேலும் வந்த போதிலும், எளியவாழ்க்கையும் சகஜ சுபாவமும் படைத்தவர். ஹைகோர்ட் நீதிபதியாவதற்கு முன்னால் இவர் வக்கீல் தொழிலில் மிகப் பிரபலம் அடைந்து ஏராளமான வருமானம் பெற்றுக் கொண்டிருந்தார். ஆயினும் அவ்வப்போது, கேஸ்கட்டுகளை எடுத்து ஒரு புறம் வைத்து விட்டு "ஹிரண் மயீம் லக்ஷ்மீம்" என்று பாடி, அதன் நுட்பங்களை நண்பர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் விளக்கிப் பரவசப்படுத்துவார்.

நமது கர்நாடக சங்கீதத்தின் மேன்மைகளை வட இந்தியாவிலும் எடுத்துக் காட்டி நமது சங்கீதத்துக்கு இன்னும் அரிய தொண்டுகள் செய்யுமாறு கனம் ஸ்ரீ. டி. எல். வெங்கட்ராமய்யர் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் அருள இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.




அன்றலர்ந்த மலர்போல்
புதுமையாகவும் மோகன காந்தியுடனும் விளங்குங்கள்..


ஹமாம் புதிய
வாசனை பொருந்தியது...
அதிக நாள் வரவும்
செய்கிறது !

ஹமாம்
டாய்லட் ஸோப்பு
உபயோகியுங்கள்

தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்

டாடா தயாரிப்பு

இந்திய சோப், வாசனைப் பொருள்கள் உற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தினர்




லண்டன், வெஸ்ட்மின்ஸ்டர் லாபரட்டரீஸ் லிமிடெட் தயாரிப்புகளில் ஒன்று

ஏஜென்ட்ஸ் :

ஓரியன்டல் மர்க்கன்டைல் ஏஜென்ஸி
99-A, அரண்மனைக்கார வீதி, மதராஸ்



ரமண்லால் வஸந்தலால் தேசாய் :: மொழி பெயர்ப்பு: ரா. வீ.

## 29. விருந்தாளி வருகிறார்!

அறைக் கதவை மனோரமா முன்பே அறைந்து சாத்தி யிருந்தாள்; தாழ்ப்பாள் மட்டும்தான் போடவில்லை. ஆனால் ஜன்னல் கதவு மட்டும் பாதி திறந்ததும் பாதி திறக்காததுமாக இருந்தது. அப்பொழுது லக்ஷ்மி மொட்டை மாடிமீது நின்று கொண்டிருந்தாள். அங்கிருந்த வண்ணமே அவள் அரை குறையாகத் திறந்த அந்த ஜன்னல் வழியே மனோரமாவின் உணர்ச்சிப் பெருக்கு நிறைந்த செயல்களைக் கவனித்தாள். அடுத்த கணமே அவள் இருதயம் மட்டற்ற மகிழ்ச்சியினால் நிறைந்தது. ஏதோ பெரிதாகப் புதிய காரியம் ஒன்றைச் சாதித்து விட்டவள் போல் அவள் ஆனந்த மிகுதியுடன் 'தட தட'வென்று கீழே இறங்கி ஓடி வந்தாள்.

சில விநாடிகளுக்குள் மனோரமாவின் அறையை நெருங்கிக் கதவைத் தொட்டாள். கதவு மெதுவாகத் திறந்து கொண்டது. லக்ஷ்மி உள் பக்கம் தலையை நீட்டி, "நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டாள்.

மனோரமா கடிதத்தை முத்தமிட்டு மகிழ்வதில் கருத்து இழந்திருந்தாள். லக்ஷ்மியின் அந்தக் கேள்வி அவளைத் துணுக்குற்றுத் தூக்கி வாரிப்போடச் செய்தது. கணவன் வீட்டில் இருந்து கொண்டே நாம் அன்னியன் ஒருவனின் கடிதத்தைப் படித்து மகிழ்ச்சி கொள்ள முயற்சிக்கிறோமே என்ற நினைவு அவளை என்னவோ செய்தது.

கண நேரம் செய்யும் வகை அறியாமல் மனோரமா மௌனமே உருவாகிச் சிலையாகச் சமைந்து உட்கார்ந்திருந்தாள். சுய உணர்வு பெற்றதும் அவள் பதறிப் போய் லக்ஷ்மியின் கண்களில் படாமல் கடிதத்தைத் தலையணைக்கு அடியில் மறைத்து வைத்தாள். அவளுடைய அந்தச் செய்கை குற்றமுள்ள நெஞ்சு மட்டும்தான் குறு குறுக்கும் என்பதில்லை என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. ஆனால் ஒருவன் என்னதான் குற்றம் செய்யா விட்டாலும், குற்றம் செய்தவனைப் போல் ஒரு பொருளை ஒளித்து மறைத்து வைக்க முயன்றால், அது அவனைக் குற்றவாளி என்று பறை சாற்றுவதாகத்தானே ஆகிறது? குற்றமற்றவனைக் கூடக் குற்றவாளி என்று ருஜுவாக்கத் தானே ஹேதுவாகிறது?

லக்ஷ்மியின் கண்களிலிருந்து மனோரமாவின் அந்தச் செய்கையும் தப்பவில்லை. இருந்தாலும் அதைப் பார்த்தும் பாராதவள் போல், "ஏன் அம்மா! ஏன் அழுகிறீர்கள்?" என்று கனிவுடன் கேட்டாள்.

"எங்கே? நான் ஒன்றும் அழவில்லையே!" என்றாள் மனோரமா.

"அப்படியானால் சிரிக்கிறீர்களோ?" என்று கேலியாகக் கேட்டாள் லக்ஷ்மி.

"நீ எப்பொழுதும் இம்மாதிரித்தான் ஏதாவது பேசுகிறாய்?" என்று அவளிடம் அலுத்துக் கொண்டாள் மனோரமா.

"நான் சரியாகத்தானே பேசுகிறேன்? தவறுதலாக ஒன்றும் பேசி விடவில்லையே!" என்று சொல்லிக் கொண்டே மனோரமாவின் அருகில் வந்து நின்றாள் லக்ஷ்மி.

மனோரமாவின் கை அடிக்கடி தலையணையையே துழாவச் சென்று கொண்டிருந்தது. கடிதத்தை அவள் அதன் அடியில் தானே மறைத்து வைத்திருந்தாள்? கடிதம் தலையணைக் கடியிலிருந்து கீழே விழுந்து விடாமல் இருக்க வேண்டுமே என்று பயந்தாள். அந்தப் பயத்தின் காரணமாகவேதான் அவள் கை அடிக்கடி தலையணைக்கு அடியிலேயே சென்று கொண்டிருந்தது. அவளுடைய அந்தச் செய்கை கவனிக்காதவர்களைக் கூடக் கவனிக்கச் செய்வதாக அமைந்து விடவே, லக்ஷ்மிக்கு மேலே பேச்சுக் கொடுக்கச் சௌகரியமாகப் போய் விட்டது.

"இன்றைக்கு யாரிடமிருந்தாவது நீங்கள் கடிதத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா, என்ன?" என்று கேட்டாள்.

"கடிதமா? எதிர் பார்க்கிறேனா? யாருடைய கடிதத்தை? நான் யாரிடமிருந்தும் கடிதத்தை எதிர்பார்க்கவே இல்லையே!"

மனோரமா மனம் அறிந்து பொய் சொன்னாள். வாழ்க்கையில் நல்ல நல்ல மனிதர்கள் கூடச் சிற்சில சமயம் பொய் பேசும்படியாகி விடுகிறது. சூழ்நிலை அப்படிக் கொண்டு விட்டு விடுகிறது. அதற்கு அவர்கள் என்ன செய்வார்கள், பாவம்!

"போங்க, அம்மா! என்னிடம் உங்கள் ஜபம் சாயாது. என்னை ஒன்றும் தெரியாதவள் என்று எண்ணி விடாதீர்கள். இன்று யாரிடமிருந்து அம்மா உங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது?" என்று லக்ஷ்மி நேரிடையாகவே தைரியமாகக் கேட்டு விட்டாள்.

லக்ஷ்மியின் அந்தக் கேள்வியைக் கேட்டதும் மனோரமாவின் உள்ளும் புறமும் ஒருங்கே நடுங்கின. உடல் வியர்த்து விறுவிறுத்துப் போய் விட்டது. ஒருவேளை லக்ஷ்மி முதலிலேயே கடிதத்தைப் பிரித்துப் படித்திருப்பாளோ என்ற சந்தேகம் அவளுக்கு எழுந்தது. அந்தச் சந்தேகம் எழுந்ததுதான் தாமதம், அவள் முகத்தின் நிறம் விகாரமாக வெளிறி விட்டது. அவள் களையிழந்து காணப்பட்டாள். மாதவப் பிரஸாதை அவள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், அவள் அவருடைய மனைவிதானே?

கணவனுக்கு மனைவியாகி விட்ட பின், கொண்ட கணவனை விட்டு ஒரு பெண் வேறு புருஷனை மனத்தினால் ஸ்மரிப்பாளானால், அது மகா பாவம் என்று உலகத்தில் உள்ள மிக மிகப் பெரிய தர்ம சாஸ்திரக்காரர்கள் சத்திய யுகத்தில் ஆரம்பமான முதல் நீதி சூத்திரத்தைப் போல் நாளது வரை சொல்லி வருகிறார்கள்.

அப்படியிருக்கும் பொழுது மனோரமா செய்வது பாவச் செயல்தானே? மனோரமாவுக்கும் அப்படித்தான் தோன்றியது. பதுங்கி மறைந்திருக்கும் வரை பாவச் செயல்கூடப் புண்ணியச் செயலாகத்தான் கருதப்படுகிறது. ஆனால் அந்த பாவத்தின் ரகசியம் அம்பலமாகி விட்டால்......?

ஒன்று அந்தப் பாவச் சுமையிலிருந்து விடுபடக் கூடிய பிராயச் சித்தத்துக்கு வழி தேட வேண்டும். அல்லது உலகத்தின் தூற்றுதல்களையும் அவதூறுகளையும் லட்சியம் செய்யாமல் இருக்க வேண்டும். உலகத்தை அலட்சியம் செய்வது என்று தீர்மானித்து விட்டால் இன்னும் ஒரு படி மேலே போவதில்கூடத் தவறில்லை. உலகத்தின் கண்களைக் குத்தும்படியாக, உலகத்துக்குக் கோபம் வரும்படியாக அந்த பாவச் செயலில் இன்னும் தீவிரமாக இறங்கி விட வேண்டும். மனிதனைக் கோபமூட்டும்பொழுது மனத்துக்கு ஒருவித ஆனந்தம் உண்டாகிறதல்லவா? அதே போல் உலகத்தைக் கோபத்தில் ஆழ்த்தும் பொழுதும் ஒருவித ஆனந்தம் ஏற்படத்தான் செய்கிறது. பாவச் சுமைக்குப் பிராயச் சித்தம் தேட வழி புலப்படா விட்டால், உலகத்தைக் கோபத்தில் ஆழ்த்திக் கொதித்து எழச்செய்து அதனால் ஏற்படும் ஆனந்தத்தையாவது அநுபவிக்கலாம் அல்லவா?

லக்ஷ்மி கட்டிலில் உட்கார்ந்தாள். மனோரமாவின் மனோ பலவீனம் நன்றாக விளங்கி விடவே, அவள் கலகல வென்று நகைத்தாள். பிறகு சிரித்தவாறே, "பார்த்தீர்களா? உங்களை எப்படிப் பிடித்தேன்? சொல்லுங்கள்! ஏன் வாய் மூடி மௌனியாகி விட்டீர்கள்? யாருடைய கடிதம் என்று நானே வேண்டுமானால் சொல்லட்டுமா?" என்று கேட்டாள்.

ஒன்றும் தெரியாமல் இருந்த பொழுதும் எல்லாம் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளும் திறன் இருக்கிறதே, அது அலாதியான கலைதான்; அதிகப் பிரசங்கித்தனமானதாயிருந்த போதிலும் விசித்திரமானதுதான்! யாருடைய கடிதம், எங்கிருந்து வந்த கடிதம் என்பதைப் பற்றியெல்லாம் லக்ஷ்மிக்கு ஒன்றுமே தெரியாது. மனோரமாவின் சந்தேகம் தோய்ந்த பரபரப்பான பார்வையே அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது. அவளுடைய பார்வையைக் கொண்டே லக்ஷ்மி எல்லாம் தெரிந்தவள் போல் அந்தக் கேள்விகளையும் குறி தவறாத முறையில் கேட்டுக் கலங்க வைத்தாள்.



ஆண்-பெண் இருவருடைய இயல்புகளையும் நன்கு உணர்ந்த லக்ஷ்மி தன்னுடைய ஊகம் ஒருகாலும் கனவில் கூடப் பொய்க்காது, தவறவும் தவறாது என்று உறுதியாக அறிந்திருந்தாள். "யாருடைய கடிதம் என்று நானே வேண்டுமானால் சொல்லட்டுமா?" என்னும் கேள்வியை அவள் சிரித்துக் கொண்டே தன் கற்பனை, ஊகம் ஆகியவற்றின் பலத்தைக் கொண்டுதான் கேட்டு வைத்தாள். இதுபோல் எல்லாம் தெரிந்ததாகக் காட்டிக் கொண்டு, பதற்ற முற்றிருக்கும் மனோரமாவின் வாய்

மொழியாகவே உண்மை விஷயங்களைக் கக்கச் செய்து விடலாம் என்று அவள் திட்டமிட்டாள். அவளுக்குத் தன் வெற்றியில் பரிபூரண நம்பிக்கையும் இருந்தது

லக்ஷ்மியின் அந்த அதட்டலுக்கும் மிரட்டலுக்கும் என்ன பதில் சொல்வது என்று மனோரமாவுக்குச் சட்டென்று விளங்கவில்லை. அவள் மறுபடியும் தலையணையைத் துழாவினாள். தலையணையை அவள் அப்பொழுது தடவிப் பார்த்தது, 'அப்பா குதிருக்குள் இல்லை' என்னும் கதையாக முடிந்தது. தனக்கு வந்திருந்த கடிதத்தின் ரகசியத்தைத் தானே வெளியிட்டதாக ஆயிற்று.


லக்ஷ்மி தலையணையின் பக்கம் தன் கையை நீட்டினாள். அவள் அந்த வீட்டுக்கு வேலைக்காரிதான். ஆயினும் அவளுடைய அதிகார தோரணையும் நடை, உடை, பாவனையும் அவளையும் மற்ற வேலைக்கார-வேலைக்காரிகளையும் பிரித்துப் பார்க்கும் முறையிலேயே அமைந்திருந்தன. வேலைக்காரிகள் குழாத்தில் சேர்க்க முடியாத தனிப் பிறவியாகவே அவள் திகழ்ந்தாள். சில சமயம் மாட்டுப் பெண் மீது அதிகாரம் செலுத்தும் மாமியார் போல் உரிமை கொண்டாடுவாள். சில சமயம் அவளேதான் வீட்டுக்கு எஜமானியோ என்று தோன்றும்படியாக வேலைக்காரிகளை வேலை வாங்குவாள். 'இங்கே போ, அங்கே போ! இதைச் செய், அதைச் செய்!' என்று கெட்டி முறிக்க முடியாதபடி உத்தரவுக்கு மேல் உத்தரவுகளாகப் போட்டுக் கொண்டிருப்பாள். சில சமயம் உயிர்த் தோழிபோல் மனோரமாவின் உள்ளத்து ரகசியத்தைப் புரிந்து கொள்ளப் பிரயாசைப்படுவாள். சிற்சில சமயம் நம்பிக்கைக்குப் பாத்திரமான நன்றியறிவுள்ள வேலைக்காரியைப் போல் மனோரமாவுக்கு மகிழ்ச்சி தரும் காரியங்கள் செய்வாள்; அவள் கால்களைப் பிடித்துவிடுவாள். விதம் விதமான வேஷம் தரித்து எப்படியாவது மனோரமாவைத் தன்னுடையவளாக ஆக்கிக் கொள்ள வேண்டும், தன் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுவாள். அதற்கான முயற்சிகளிலும் இறங்குவாள்.

லக்ஷ்மி தலையணைப் பக்கம் தன் கையை நீட்டியதும் மனோரமா கோபத்தினால் கொதித்தெழுந்து அவள் கையை ஓங்கி ஒரு தட்டுத் தட்டிவிட்டாள். அவள் முகம் கோபத்தினால் ரத்தச் சிவப்பாகச் சிவந்து விட்டது. புருவங்கள் ஏகக் கோணலாக நெரிந்தன. மிக மிகக் குறைவாகக் கோபம் கொள்ளும் மனோரமாவின் அன்றையக் கோபம் பார்க்க மிகவும் பயங்கரமானதாக இருந்தது.

மனோரமாவின் மனத்தில் இரக்கம் உண்டாக்காமல் தன் காரியம் கை கூடாது என்பதை லக்ஷ்மி உடனே புரிந்து கொண்டாள். அதிகாரம் காட்டி அவளிடமிருந்து கடிதத்தைப் பெற முயற்சித்தது பெருந் தவறு என்பதும் அவளுக்கு அப்பொழுது புலனாகியது.

"அட! அதற்குள் கோபித்துக் கொண்டு விட்டீர்களே! என்னை உங்களுக்கு வேண்டியவள் என்று எண்ணுங்கள் என்று எத்தனையோ தடவைகள் படித்துப் படித்துச் சொல்லிவிட்டேன். ஆனால் நீங்கள்தான் காதிலேயே போட்டுக் கொள்ள மாட்டேனென்கிறீர்கள். நான் என் உயிரைக் கொடுத்தாகிலும் உங்கள் சுகத்தைத்தான் நாடுவேன். அப்படிப்பட்ட என்னையே அடித்துத் துரத்துகிறீர்கள். போகட்டும், எனக்கு உங்கள் கடிதம் வேண்டாம். அந்தக் கடிதம் எங்கிருந்து வந்திருக்கிறது என்றுதான் எனக்கு நன்றாகத் தெரியுமே!" என்றாள் லக்ஷ்மி.

"உனக்குத் தெரியும் என்றால் என்னைக் கேட்பானேன்?" என்று கடிந்தாள் மனோரமா.



"அட, ராமா! என்னிடம் கூட நீங்கள் ஒளிவு மறைவு வைத்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியாமற் போய் விட்டதே?" என்றாள் லக்ஷ்மி, தன்னை வேண்டியவள் என்று காட்டிக் கொள்வதற்காக.

லக்ஷ்மியின் அந்தக் கேள்விக்கு மனோரமா பதில் சொல்ல விரும்பவில்லை. எனவே, அவள் பேசாமல் மௌனமாகவே இருந்தாள். 'லக்ஷ்மி மேல் கோபித்துக் கொள்வது தவறு. நாம் அநாவசியமாக அவளை ஏன் கோபித்துக் கொள்ள வேண்டும்?' என்று எண்ணினாள். 'அவள் சொல்வது நியாயந்தானே? பாவம், அவள் என்னை எவ்வளவு பட்சமாகக் கவனித்துக் கொள்கிறாள்? அப்படியிருக்கும் பொழுது...' என்றும் சிந்தனை செய்தாள். அந்தச் சிந்தனை அவள் மனத்தை இன்னும் இளகச் செய்தது. லக்ஷ்மியின் கனிவு கலந்த சொற்கள் வேறு அவள் கோபத்தைச் சமனப் படுத்துவதற்கு உதவியா யிருந்தன.

மனோரமாவின் பெரும்பாலான பொழுது தனிமையிற்தான் சென்று வந்தது. அதற்காகத் தனிமை அவளை வருத்தவில்லை என்று அர்த்தமில்லை. தனிமை அவளையும் கடிக்கத்தான் செய்தது. ஆனால் என்ன செய்வாள், பாவம்! தன் கரம் பற்றிய கணவருடன் தான் அவள் கலந்து வாழ முடியவில்லையே! அவருடன் சேர்ந்து பழகி வாழ முடியுமானால் அவள் தனிமை கலைந்திருக்கும். அதனால் அவளை வாட்டி வருத்தி யிருக்க முடியாது. ஆனால் அவளுடைய தலையிற்தான் இன்பகரமான இல்வாழ்க்கை எழுதவில்லையே!

எனவே, அவள் தன்னந் தனியளாகித் தான் வாழும்படி நேரிட்டது. அவளுக்குத் துணை யாரும் இல்லை. தாய் தந்தையரின் பிரிவு தவிர்க்க முடியாதது. என்ன இருந்தாலும் பெண்ணாப் பிறந்தவள் தாய் தந்தையரை என்றைக்காவது ஒருநாள் பிரிந்து தானே ஆகவேண்டும்? இனி இந்த ஜன்மத்தில் அவர்களுடன் சேர்ந்து வாழ்வதென்பது இயலாத காரியம். அவள் யாரைப் பிரிந்து ஒரு கணங் கூட வாழ விரும்பவில்லையோ, அந்தச் சுதாகர் இந்த ஜன்மத்தில் அவளுடையவனாக ஆவான் என்ற நம்பிக்கையே அவளுக்கு அடியோடு அற்று விட்டது. மாதவப் பிரஸாதுக்கு மனைவியாகி விட்டபின் அந்த நம்பிக்கைக்கு இடம் ஏது?

மாதவப் பிரஸாதின் அறியாக் குழந்தைகளும் மிக மிகக் கெட்டிக் காரியான வேலைக்காரி லக்ஷ்மியும் தான் அவளை வளைய வளைய வந்து கொண்டிருந்தார்கள். லக்ஷ்மி ஒவ்வொரு கணமும் மனோரமாவின் மனத்தில் இடம் பிடித்துக் கொள்ள முயன்று வந்தாள். அவளுடைய ஆருயிர்த் தோழியாக ஆகும் பாக்கியத்தைப் பெற விரும்பினாள். லக்ஷ்மியின் இருதயத்தில் சுயநலம் கோடிட்டுக் கொண்டிருந்த பொழுதிலும், அத்தகைய எண்ணம் ஏற்படுவது நல்லதுதானே?

தனக்கு வேண்டியவர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய அளவுக்கு மனோரமாவுக்கு யாருமே இல்லை. மனோரமாவின் அந்த மனத் துயரம் அவள் வாய் மொழியாகவே அந்தச் சமயம் வெளியாகி விட்டது. மனம் பலவீன முற்றிருக்கும் சமயத்தில் யாருமே தங்கள் உள்ளத்தைத் திறந்து காட்டுவது சர்வ சகஜம் தானே?

"உலகத்தில் எனக்கு வேண்டியவர்கள் என்று யார் இருக்கிறார்கள்? நான் யாரிடம் எந்த விஷயத்தை ஒளித்து மறைக்க வேண்டும்? உன்னிடமுந்தான் நான் அநாவசியமாக எதற்குக் கடுஞ் சொற்களை உபயோகிக்க வேண்டும்?" என்றாள்.

மனோரமாவினால் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியவில்லை.

தன் பேச்சுக்கு அனுகூலமான பலன் ஏற்பட்டு விட்டது. மனோரமா தன்னை வேண்டியவளாக எண்ணத் தொடங்கி விட்டாள் என்பதை லக்ஷ்மி உணர்ந்து கொண்டாள். மனோரமாவின் தலையையும் முதுகையும் தன் கையால் தடவிக் கொடுத்த வாறே மிகவும் மிருதுவான குரலில், "அப்படிச் சொல்லாதீர்கள், அம்மா! நீங்கள் இப்படியெல்லாம் யோசிக்கவும் கூடாது, பேசவும் கூடாது. தன் உள்ளத்தில் உள்ள சுக துக்கங்களைச் சொல்லி ஆற்றிக் கொள்வதற்கு யாராவது ஒருவரை வேண்டியவர்களாக ஆக்கிக் கொள்ளத்தான் வேண்டும். மனத் துயரைச் சொன்னால் தான் மனத்தின் சுமை இறங்கி இலேசாகும். இல்லா விட்டால் உள்ளம் புழுங்கித் தவியாய்த் தவிக்கும்!" என்றாள்.

அதே சமயம் வெளியிலிருந்த வண்ணமே மாதவப் பிரஸாத், "லக்ஷ்மி! லக்ஷ்மி!" என்று உரக்கக் குரல் கொடுத்தார்.

மனோரமாவின் பக்கத்திலிருந்து அசையாமலேயே, "ஏன் எஜமான்! நான் இங்கேதான் இருக்கிறேன்!" என்றாள் லக்ஷ்மி.

மாதவப் பிரஸாத் உள்ளே வந்தார். அவர் மனோரமாவின் அறைக்குள் நுழைந்து எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. அவர் மனோரமாவைப் பார்த்தும் பார்க்காதவர் போலவே முகத்தைத் திருப்பிக் கொண்டார். பிறகு லக்ஷ்மியின் பக்கம் பார்த்து, "நீ இங்கேயா உட்கார்ந்திருக்கிறாய்? இன்றைக்கு நம் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வரப் போகிறார், உனக்குத் தெரியும் அல்லவா?" என்று கேட்டார்.

லக்ஷ்மியைப் பார்த்துத்தான் அவர் அந்தக் கேள்வியைக் கேட்டார். என்றாலும் லக்ஷ்மியை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு தன்னைத்தான் சொல்கிறார் என்று மனோரமாவுக்குத் தோன்றியது. தன்னைக் கடிந்து கொள்வதற்குப் பதிலாக லக்ஷ்மியைக் கடிந்து கொள்கிறார் என்றே மனோரமா எண்ணினாள்.

"என்னிடம் யாரும் எதும் சொல்லவில்லையே!" என்றாள் லக்ஷ்மி.

BSY-755 B-TAM

# ஆஜ்மீரி தொழிலாளி மங்கை



ஆஜ்மீரின் சரித்திரத்திலே எக்காலத்திலும் பெருமைதரக்கூடிய நிகழ்ச்சி ஒன்றுண்டு — அக்பர் சக்கரவர்த்தி பிள்ளை வரம் கேட்பதற்காகத் தமது பட்டத்தரசியுடன் பாவாந்தின் சமாதிக்கு யாத்திரை சென்ற நிகழ்ச்சிதான் அது. அதன்படி மன்னர் கேட்ட வரம் கிடைத்தது. ஒவ்வொரு வருஷத்திலும் ஆஜ்மீரில் ஜலக்கஷ்டமும், பஞ்சமும், கொள்ளை நோய்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எத்தகைய இடையூறுகள் ஏற்பட்ட போதிலும், ஆஜ்மீர் மக்கள் சலியாத உழைப்பாளிகளாகவும், நன்னம்பிக்கை உடையவர்களாகவும் திகழ்கின்றனர். அசாத்தியமான பொறுமையும், நல்ல தேக திடகாத்திரமும் பொருந்தியவர்கள். பஞ்சாலைகளும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் ஏற்பட்ட பிறகு, ஆஜ்மீர் கிராமங்களிலுள்ள விவசாயிகளில் பலர் தொழிற்சாலைகளில் சென்று வேலை செய்கின்றனர் என்பது உண்மைதான் எனினும், ஜனத்தொகையில் சரிபாதிக்கு மேல் இன்னும் விவசாயிகளாகவே வாழ்கின்றனர். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், விவசாய நீர்ப்பாசனத்திற்கு அவர்கள் தங்கள் சொந்த முயற்சியால் அமைத்துக் கொண்ட குளங்களையும், கிணறுகளையும் நம்பியே பயிர்த்தொழில் செய்ய வேண்டியதாயிருக்கிறது.

நாங்கள் இந்தியாவின் மூலைமுடுக்குகளிலுள்ள அநேகம் சமூகங்களோடு உறவாடிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் எங்களை நம்பி இருக்கிறார்கள். நாங்களும் அவர்களுக்கு பணி செய்வதில் பெருமை அடைகிறோம்.

**பர்மா-ஷெல்...**

**பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது**

"அதுதான் நான் சொல்கிறேனே! பம்பாயிலிருந்து ஒரு விருந்தாளி வரப் போகிறார்!" என்றார் மாதவப் பிரஸாத்.

அதைக் கேட்டதும் மனோரமா மறுபடியும் துணுக்குற்றாள். அவளுக்கு வந்த கடிதத்தை எல்லோருமே படித்து விட்டார்களா, என்ன?

ஒருவருடைய கடிதத்தைப் பிரித்துப் படித்து விட்டுப் பழையபடியே ஒட்டிக் கொடுத்து விடும் உபாயத்தை நாகரிகம் வாய்ந்த இந்த உலகத்தில் எல்லோருமே தெரிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அவளுக்கு வந்த கடிதத்தை யாராவது பிரித்துப் படித்திருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?

"வந்தால் வரட்டுமே! தினம்தான் நம் வீட்டுக்கு யாராவது விருந்தாளிகள் வந்த வண்ணம் இருக்கிறார்கள்!" என்றாள் லக்ஷ்மி.

"வந்த வண்ணமே மட்டுந்தான் இருக்கிறார்களா? நம் வீட்டில்தான் நம் வீட்டைச் சேர்ந்தவர்களேகூட விருந்தாளிகளைப் போல் இருக்கிறார்களே!" என்றார் மாதவப் பிரஸாத்.

அதைக் கூறும்பொழுது அவர் முகத்தில் திரஸ்காரம் தெறித்தது; ஏளனம் தொனித்தது. உண்மையில் அவர் மனோரமாவைத் தம்முடையவளாக ஆக்கிக் கொள்ள எத்தனை எத்தனையோ முயற்சிகள் செய்து பார்த்து நம்பிக்கை இழந்து விட்டார். சட்டப்படி பார்க்கப் போனாலும் சரி, சமூகத்தின் பழக்க வழக்கங்கள்படி பார்க்கப் போனாலும் சரி, மனோரமா அவருடைய மனைவிதான். ஆனால் மனோரமா அவருடைய வீட்டில் மனையாட்சி செலுத்தும் மனைவியாக வாழவில்லை. நான்கைந்து நாட்கள் வந்து தங்கிப் போகும் விருந்தாளி போலவேதான் வாழ்ந்தாள்.

"வரப்போகும் விருந்தாளி சாயந்திர வண்டியில் வருகிறார். அவரை அழைத்துவர ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்ப வேண்டும்!" என்றார் மாதவப் பிரஸாத்.

இந்த விஷயங்களை யெல்லாம் இப்பொழுது சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று எண்ணினாள் லக்ஷ்மி. தேவைக்கு மேல் பேசாத, சொற்களை அளந்து உபயோகிக்கும் மாதவப் பிரஸாத் மூச்சு விடாமல் ஒவ்வொரு விஷயமாகச் சொல்லிக் கொண்டே போவதைக் கண்டபொழுது லக்ஷ்மிக்கு ஒரே ஆச்சரியமாகத்தான் போய் விட்டது.

"ரெயில் வரும் நேரத்துக்குச் சரியாக, இங்கிருந்து வண்டி யனுப்பி விட்டால் போயிற்று!"

"அது சரி! ஆனால் வண்டிக்காரனிடம் யார் சொல்லுவார்கள்? நான்தான் வெளியே போய்க் கொண்டிருக்கிறேனே!" என்றார் மாதவப் பிரஸாத்.

"எங்கே?"

"நரகத்துக்கு!" — சள்ளென்று எரிந்து விழுந்தார் மாதவப் பிரஸாத்.

"ராம, ராம ராம! இதென்ன பேச்சு? விருந்தாளி வரும்பொழுது எஜமான் வெளியே போய்க் கொண்டிருந்தால் நன்றா யிருக்குமா? அதற்காகக் கேட்டால் ஏழை மீது இப்படிக் கோபித்துக் கொள்கிறீர்களே!" என்றாள் லக்ஷ்மி கீழ் ஸ்தாயிக்கு இறங்கி. அவள் தெரியாதவளா, எப்பொழுது யாரிடம் எப்படிப் பேசிப் பழக வேண்டும் என்று?

"போகாமல் காரியம் ஆகாது. நான் கட்டாயம் போய்த்தான் ஆகவேண்டும். அதனால்தான் இவ்வளவு தூரம் சொல்கிறேன். சரியான சமயத்துக்கு ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பி வை. விருந்தாளியை உபசரிக்கும் விஷயத்தில் எவ்விதக் குறைவும் ஏற்படக் கூடாது. நான் நாளைக்குத் திரும்பி வந்து விடுகிறேன்!" என்று சொல்லி விட்டு மறுமொழியை எதிர்பார்க்காமலே மாதவப் பிரஸாத் அறையிலிருந்து வெளியேறி விட்டார்.

"வரப்போகும் விருந்தாளியை உங்களுக்குத் தெரியுமா, அம்மா?" என்று சகஜமாகத்தான் கேட்டாள் லக்ஷ்மி. ஆனால் அந்தக் கேள்வியும் மனோரமாவைத் தூக்கி வாரிப் போட்டது.

"எனக்கு யாரையும் தெரியாது. நான் கொஞ்சம் தனியாக இருக்க விரும்புகிறேன். நீ இங்கிருந்து போ!" என்றாள் மனோரமா. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற் போலிருந்தது. தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விசும்பலானாள்.

"எனக்குக் கடிதம் வந்திருக்கிறது அவருக்கும் தெரிந்து விட்டதா, என்ன?" என்ற கேள்வி அவளையும் மீறி அவள் வாயிலிருந்து முணுமுணுப்பாக வெளி வந்தது. (தொடரும்)




வந்தவர்:—அடடா! மறந்து போய் என் கண்ணாடியை மேஜையின் வைத்து விட்டேனே! எப்படிக் கண்டு பிடிப்பது?

கண்ணாடிக்காரர்:—கவலைப்படாதீர்கள்! ஐந்து ரூபாய் கொடுத்துக் கண்ணைப் பரீட்சை செய்து கொண்டு விட்டால் போகிறது!

ஒரு முறை பிரஷ் கொண்டு தேய்த்தால்

# கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் துர்நாற்றத்தை ஒழித்து

வாயை சுத்தமாக்குகிறது




## இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது... அது தரும் சுத்தம் மணிக் கணக்காக நீடிக்கும்!

புதிய, இனிய சுவாசம்... பலமான ஈறுகள் பெற... சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

**பாக்டீரியாவை ஒழிக்கிறது!**

எனுமலை அரிக்கும் தீய அமிலங்களையும்... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

**ஈறுகளைப் பலப்படுத்துகிறது!**

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் உதவுகிறது.




* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது

CTPA/G/2

## புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்

சிலவு

குறைக்க

டயர்...




# புதுப்பிக்கவும்

பத்து வருட நுண்ணிய அநுபவ முறையில். பஸ், கார் பழைய டயர்களை செப்பனிட்டு புதுப்பிக்கிறோம்.

முன்னணி இயந்திர முறையில், நாட்டின் ரஸ்தாக் களுக்கு உகந்த "ட்ரெட்" அமைத்து நீடித்த உழைப் பைக்கான பணியாற்றுகிறோம்.

## சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

புதுக்கோட்டை

(ஓர் டி. வி. எஸ். ஸ்தாபனம்)

TVS 2-48TM

# அணிகலன்

எம். கே. சங்கரன்

ரத்தினவைப் பரிசோதித்து விட்டு வந்த டாக்டர் அந்த விஷயத்தைச் சொன்னதும் அயர்ந்தே போய்விட்டார் பிரமநாயகம்.

"டாக்டர், நீங்கள் சரியாகக் கவனித்தீர்களா!" என்று பதற்றத்துடன் கேட்டார்.

"ஆமாம்; நன்றாய்ப் பரிசோதித்தேன். உங்கள் மகள் நாலு மாதக் கர்ப்பிணி! இது உண்மை!" என்று உறுதி நிறைந்த குரலில் கூறினார் டாக்டர்.

டாக்டர் போய் விட்டார். நாற்காலியில் அப்படியே உட்கார்ந்து விட்டார் பிரமநாயகம்.

* * *

ரத்தினா பிரமநாயகத்தின் ஒரே பெண். அந்தக் காலத்தில் பிரமநாயகம் அன்றாட ஆகாரத்துக்குத் திண்டாடும் பரம ஏழை. தாயை இழந்த தம் மகளை வளர்ப்பதில் மிகவும் சிரமப்பட்டுப் போன அவர் அவளுக்குக் கல்யாணம் முடிப்பதில் ரொம்பவும் சங்கடப் பட்டு விட்டார்.

ரத்தினா கவர்ச்சி நிறைந்த அழகியாய்த்தான் இருந்தாள். என்றாலும் அவர்கள் இருந்த தரித்திர நிலைக்கு வரன் கிடைப்பது துர்லபமாக இருந்தது. எவ்வளவோ சிரமத்துக்குப் பின் ஒரு எளிய வரன் குதிர்ந்தது. பையன் மளிகைக் கடையில் சிப்பந்தியாக இருந்தான். தம் ஏழ்மைக்கு அத்தகைய வரன் கிடைத்ததையே உயர்வாகவே கருதினார் பிரமநாயகம்.

மிகவும் எளிய முறையில் ஸ்ரீவைகுண்டம் வேலாயுதத்துக்கும் ரத்தினாவுக்கும் திருமணம் நடைபெற்றது. ரத்தினா வீட்டை விட்டு வெளியேறவும் அதிர்ஷ்ட தேவதை பிரமநாயகத்தை அணுகவும் சரியாக இருந்தது. நாசரத் மெர்ச்சண்ட் தெருவின் ஓரத்தில் பழைய இரும்புகளைப் பரப்பி ஈ ஓட்டிக் கொண்டிருந்த பிரமநாயகம், திருநெல்வேலியில் பெரிய இரும்புக் கடை முதலாளியாகவும், மாளிகை வாசியாகவும் மாறுவாரென்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. அவர் கூடக் கனவிலும் நினைக்கவில்லை. பணம் கொடுத்து வாங்கிய இரும்புகள் விற்பனையாகாமல் தேங்கிக் கொண்டு வருவதைக் கண்டு "காசு கரியாகிறதே!" என்று அலுத்துக் கொண்டுதா னிருந்தார். அந்த இரும்புகள்தான் யுத்த கால விலையேற்றத்தில் சிறந்த ஐசுவரியங்களாக மாறிவிட்டன. கைக்குக் கிடைத்த பெரும் பொருளைக் கொண்டு திருநெல்வேலியில் பெரிய இரும்புக் கடையைத் துவக்கினார். செல்வம் ஏற ஏற மற்றப் பிரமுகர்களைப் போல மாளிகை, மோட்டார் முதலியவைகளுடன் ஆடம்பரமாக வாழ்ந்தார்.

ஆனால் அவருக்கு ஒரு ஏக்கம். தம் அருமை மகள் கல்யாணத்துக்கு முன் இவை வந்திருந்தால் பெரிய பணக்காரனைச் சம்பந்தியாக அடைந்திருக்கலாமே என்று உள்ளம் புழுங்கினார். இனி என்ன செய்ய முடியும்! தம் மகளையும் மருமகனையும் தம் வீட்டோடு வைத்துக் கொள்ளுவது என்று தீர்மானித்தார்.

அந்தத் தீர்மானத்துடன் அவர் ஸ்ரீவைகுண்டம் புறப்பட்டார். ஆற்றுப் பாலத்தின் மீது அவர் கார் போய்க் கொண்டிருந்தபொழுது தற்செயலாய் ஆற்றைப் பார்த்தார். அவர் உள்ளம் நின்று விடும்போலிருந்தது. ஆம்! அவரது அருமை மகள் தண்ணீர் நிறைந்த ஒரு குடத்தை இடுப்பில் சுமந்துகொண்டு உயர்ந்த படித்துறையில் சிரமப்பட்டு ஏறிக் கொண்டிருந்தாள். தம் வீட்டில் ஏவினதைச் செய்ய வேலையாட்களிருக்க, தம் ஒரே மகள் வேலைக்காரிபோல் கஷ்டப்படுவதைக் கண்டு அவர் உள்ளம் துடித்தது.

ரத்தினா கரை ஏறியதும் காரை அவளருகில் நிறுத்தி, "ரத்தினா!" என்று அழைத்தார். "அப்பா!" என்று ஆவலோடு ஓடி வந்தாள் ரத்தினா. "காரில் ஏறிக் கொள்ளம்மா!" என்றார். அவள் ஏறிக் கொண்டதும் கார் புறப்பட்டது.

"ரத்தினா, இங்கே உனக்குத் துன்பமாயிருக்கிறதல்லவா!" என்று இரங்கிய குரலில் கேட்டார் பிரமநாயகம்.

"துன்பமா? எப்பொழுதும் போலத்தானே இருக்கிறேன்!" என்று சந்தோஷத்துடன் பதிலளித்தாள் ரத்தினா.

"இவ்வளவு பெரிய குடத்தை வைத்துக் கொண்டு இந்தப் படிகளில் உன்னால் ஏற முடிகிறதா, அம்மா!" என்று கேட்டார் பிரமநாயகம்.

அவள் சிரித்தாள். "இந்த ஊரில் பெரிய குடங்களை வைத்துக் கொண்டு எல்லாப் பெண்களும் தான் படியேறுகிறார்கள்!" என்றாள்.

"அவர்களும் நீயும் சரியா! நீ பெரிய பணக்காரன் மகள்! இங்கே கஷ்டப்படணும் என்று உன் தலைவிதியா!"

"ஏனப்பா இப்படியெல்லாம் சொல்கிறீர்கள்! குடும்பத்தில் புகுந்தால் எல்லா வேலைகளும் செய்வது நியாயந்தானே!"

"நல்ல நியாயம்! இப்பொழுது நான் எதற்கு வந்திருக்கிறேன், தெரியுமா! உங்கள் இரண்டு பேரையும் என் வீட்டுக்கு அழைத்துப் போகத்தான்!" என்றார் பிரமநாயகம்.

ரத்தினா பதிலே பேசவில்லை. கார் அவள் வீட்டுக்கு முன் நின்றது. அப்பாவைத் தன் வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள் ரத்தினா.

மத்தியானம் சாப்பிடுவதற்காகக் கடையிலிருந்து வந்தான் வேலாயுதம். தன் மாமனாரைக் கண்டதும் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டான். அவர் புதுப் பணக்காரரான பின் அன்று தான் முதல் தடவையாக வந்திருந்தார். "வாங்க, மாமா!" என்று வரவேற்றான் வேலாயுதம்.

சாப்பிட்டு முடிந்ததும் பிரமநாயகம், "மாப்பிள்ளை, இன்று மதியம் நீங்கள்



கடைக்குப் போக வேண்டாம். உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கிறது!'' என்றார்.

★

சாயந்திரம் வேலாயுதத்தை அழைத்துக் கொண்டு உலாவப் புறப்பட்டார். தாமிரவருணியின் மணற் பரப்பில் நடந்து கொண்டே பல விஷயங்களைப் பற்றியும் பேசினார். மெதுவாக, ''மாப்பிள்ளை! நாளைக்கு ஊருக்குப் போகணும். உங்களையும் ரத்தினாவையும் அழைக்க வந்திருக்கிறேன்'' என்று விஷயத்தை ஆரம்பித்தார்.

''ரத்தினாவை வேண்டுமானால் கூட்டிக்கொண்டு போங்கள். நான் வருவது இப்பொழுது முடியாது. கடையில் நான் ஒருவன்தான் இருக்கிறேன்'' என்றான் வேலாயுதம்.

''கடை கடை என்று ஒருவரிடம் கைகட்டி ஏன் நிற்கணும்! என் வீட்டிலேயே வந்து இருந்து விடுங்களேன்!'' என்றார் பிரமநாயகம்.

''அது எப்படி முடியும்! நான் என்ன தனி ஆளா! பெரிய குடும்பத்தை விட்டு விட்டு வர முடியுமா!'' என்று கேட்டான் வேலாயுதம்.

''உங்களுக்கு உலகமே தெரியவில்லை, மாப்பிள்ளை! உங்களுக்கு என்றைக்குக் கல்யாணமாகி விட்டதோ, அன்றைக்கே நீங்கள் வேற்று ஆள்தான்! குடும்பம் குடும்பம் என்று அந்த நரகத்தில் விழுவது சுத்தப் பைத்தியக்காரத்தனம்! மலைபோல் பங்களா, ஏவினதைச் செய்ய வேலையாட்கள் இந்தப் பவிஷெல்லாம் விட்டு விட்டு...''

''மாமா, நீங்கள் ஆயிரத்தைச் சொல்லுங்கள். குடும்பத்தை விட்டுவிட்டு மாமனார் வீட்டிலிருப்பது எனக்குச் சரிவராது.''

''அப்படியானால் நான் சொல்வதை நீங்கள் கேட்க மாட்டீர்கள்!''—பிரமநாயகத்தின் குரலில் கோபம் தொனித்தது.

''அந்த விஷயத்தை மட்டும் மறந்து விடுங்கள்!''

''அப்படியானால் என் மகளை மட்டும் கூட்டிக் கொண்டு போகிறேன். இந்தத் தரித்திரம் பிடித்த இடத்தில் அவள் கஷ்டப்பட வேண்டியதில்லை.''

''ரத்தினா சம்மதித்தால் தாராளமாகக் கூட்டிக் கொண்டு போங்கள்!''

அதற்குப் பிறகு அவர்கள் ஒன்றும் பேசவில்லை. அப்படியே தன் கடையை நோக்கிப் போய்விட்டான் வேலாயுதம். கோபத்தோடு வீட்டுக்கு வந்தார் பிரமநாயகம். வாசலில் நின்று கொண்டே, ''ரத்தினா!'' என்று சத்தமிட்டு அழைத்தார்.

''ஏனப்பா!'' என்று ஓடி வந்தாள் ரத்தினா.

''ஊருக்குப் போக வேண்டும். புறப்படு!'' என்று அதிகாரத் தொனிக்கச் சொன்னார்.

''அவர் வர வேண்டாமா, அப்பா!''

''ஒருவரும் வேண்டாம். நீ புறப்படு!''

''அவரிடம் கேட்கவாவது வேண்டாமா!''

''ஒருவரிடமும் கேட்க வேண்டியதில்லை. உனக்குப் புருஷன் வேணுமா! அப்பா வேணுமா?''

''என்னப்பா, இப்படிச் சொல்லுகிறீர்கள்'' என்று பதற்றத்துடன் கேட்டாள் ரத்தினா.



''உன்னிடம் அநாவசியமாகப் பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. என்னுடன் வருகிறாயா, இல்லையா!'' என்று கேட்டார் பிரமநாயகம்.

''ஏனப்பா இப்படிச் சொல்கிறீர்கள்! கணவன் என்று ஒருவர் இருக்கும் பொழுது அவரிடம் சொல்லாமல் வருவது சரியா!''

''அப்படியானால் உனக்குக் கணவன்தான் பெரிதா!'' என்றார் பிரமநாயகம்.

''எனக்கு இரண்டு பேரும் ஒன்றுதான்! உங்களுக்காக அவரையும், அவருக்காக உங்களையும் ஒரு நாளும் மறக்க மாட்டேன்.''

''நீ எக்கேடு கெட்டுப்போ! நான் போகிறேன்'' என்று சொல்லி விட்டு விறு விறுவென்று போய்க் காரில் ஏறிக்கொண்டார் பிரமநாயகம்.

''அப்பா! அப்பா!'' என்று கத்திக்கொண்டே ஓடி வந்தாள் ரத்தினா. அதற்குள் கார் வேகமாகப் பறந்து விட்டது.

★

இரவு பத்து மணிக்கு மேல்தான் வேலாயுதம் வீட்டுக்கு வந்தான். கலங்கிய கண்களுடன் நிற்கும் ரத்தினாவைக் கண்டதும் அவன் பதைத்துப் போய் விட்டான். ''ரத்தினா, நீ ஏன் அழுகிறாய்!'' என்று அவள் தலையை வருடியவாறு கேட்டான்.

''அப்பா கோபித்துக் கொண்டு ஊருக்குப் போய்விட்டார்!'' என்றாள் ரத்தினா. அவள் கண்களில் நீர் பெருகியது.

''இதற்கா அழுகிறாய்! அவர் சுபாவம் அது!''

ரத்தினா கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டு சமையலறைக்குச் சென்று அவனுக்குச் சாதம் படைத்தாள்.

''ரத்தினா, உன் அப்பா என்னை உங்கள் வீட்டிலேயே இருக்கச் சொல்கிறார். என் பெரிய குடும்பத்தை விட்டு விட்டு நான் அங்கிருக்க முடியுமா! இதைச் சொன்னால் அவருக்குக் கோபம் வருகிறது. நான் என்ன செய்வது!''

''என்னையும் கூப்பிட்டார். உங்களிடம் கேட்டு விட்டு வருகிறேன் என்றேன். அதனால் என்னிடம் கோபித்துக் கொண்டு போய் விட்டார்'' என்றாள் ரத்தினா தேம்பலுடன்.

சற்று நேரம் மௌனம் நிலவியது. சாப்பிட்டு எழுந்ததும் கையலம்பி விட்டு வந்தான் வேலாயுதம். ரத்தினாவுக்கு அழுகை நிற்கவில்லை. அவள் கண்களிலிருந்து நீர் பெருகிக் கொண்டிருந்தது. இதைப் பார்க்க வேலாயுதத்துக்குச் சகிக்கவில்லை. ''ரத்தினா, அழாதே! வேணுமானால் திருநெல்வேலிக்குப் போய் அப்பாவைச் சமாதானப் படுத்தி விட்டு வா!'' என்றான்.

ரத்தினா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ''நீங்கள் சொல்வது நிஜம்தானா!'' என்று கேட்டாள்.

''பிறகு என்ன செய்கிறது, ரத்தினா! அற்ப விஷயத்துக்காக மனஸ்தாபப்படுவது நல்லதா!''

ரத்தினா தடாலென்று அவன் கால்களில் விழுந்து ''உங்கள் தங்கமான குணம் யாருக்கும் வராது'' என்றாள்.

மறுநாள் காலை ரயிலுக்கு ரத்தினாவைத்



திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தான் வேலாயுதம். ரத்தினா வீட்டுக்குச் சென்ற பொழுது வாசலில் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தார் பிரமநாயகம். ரத்தினாவைக் கண்டதும் "ரத்தினாவா! வா, அம்மா! நீ என் பெண்ணல்லவா! நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்!" என்றார்.

"இல்லையப்பா! அவர்தான் என்னை அனுப்பி வைத்தார்" என்றாள் ரத்தினா.

"கணவன் மேல் குற்றமில்லாதபடி பேசுவதில் நீ கெட்டிக்காரி! அந்த நரகத்திலிருந்து வந்து சேர்ந்தாயே! இனி பெண்டாட்டி வேண்டுமானால் அவன் தானாக இங்கே வரமாட்டானா!"

ரத்தினாவுக்குச் சுருக்கென்றது. என்றாலும் அவள் ஒன்றும் கூறவில்லை. பேசாமல் வீட்டுக்குள் சென்று விட்டாள்.

மறுநாள் ரத்தினாவைக் கடைத் தெருவுக்கு அழைத்துச் சென்று புடவைகளும் தங்க ஆபரணங்களும் வாங்கி அவளுக்கு அணிவித்தார். அடுப்படியில் அவதிப்பட்ட ரத்தினா தானா என்று மிகவும் ஆச்சரியப்படும்படி செல்வத்தில் புரளும் சீமாட்டியாகத் தோன்றினாள் ரத்தினா.

★

அவள் வந்து பதினைந்து நாட்களுக்கு மேலாகிவிட்டன. என்னதான் தங்கத்தையும் வைரத்தையும் அணிந்தாலும், அவள் ஆத்மா அணிந்திருந்த கணவன் என்ற பாசமலருக்கு அவை ஈடாகுமா!

ரத்தினாவுக்குக் கணவனின் நினைவு கொடுத்து விட்டது. அவர் எப்படி இருக்கிறாரோ என்று கவலைப்பட ஆரம்பித்தாள். அன்று அவள் புறப்படுவதற்குத் தயாரானாள். அப்பாவிடம் வந்து, "அப்பா, நான் வந்து நாளாகி விட்டதே! ஊருக்குப் போக வேண்டாமா!" என்றாள்.

அவ்வளவுதான்! அவர் ருத்ராமூர்த்தியாகவே மாறி விட்டார். "ஊருக்குப் போக வேண்டுமானால் பேசாமல் போகிறதுதானே! என்னிடம் ஏன் கேட்கிறாய்! என் சொல்லைக் கேட்காத பெண், எனக்கு இல்லையென்றே தலை முழுகி விடுகிறேன்!" என்று ஏகத்தாளமாகக் கத்தினார்.

அழுது கொண்டே வீட்டுக்குள் சென்று விட்டாள் ரத்தினா.

நாட்கள் ஓடின. ரத்தினாவைப் புறப்பட்டு வரும்படி வேலாயுதம் எழுதிய கடிதங்களை அவளிடம் காட்டாமலே கிழித்தெறிந்து விட்டார் பிரமநாயகம். பதில் எதுவும் வராததால் அன்று திருநெல்வேலிக்கே வந்து விட்டான் வேலாயுதம்.

அவனைக் கண்டதும் கண்ணீர் விட்டுக் குலுங்கக் குலுங்க அழுதாள் ரத்தினா. அவளது செல்வ போக நிலையைக் கண்ட வேலாயுதம் ஒரு கணம் அயர்ந்து விட்டான். "ரத்தினா! உன் நிலைமைக்கு நான் கொஞ்சமும் தகுதி யுள்ளவனல்ல. நான் போய் வருகிறேன்" என்றான் வேலாயுதம்.

"நானும் உங்களுடன் வருகிறேன். உண்மையில் நீங்கள் இல்லாத வாழ்வு எனக்குப் பிடிக்கவில்லை" என்று கண்களில் நீர் மல்கக் கூறினாள் ரத்தினா. மறு கணமே தன் பெட்டி முதலிய சாமான்களை எடுத்து வைப்பதில் முனைந்தாள். இந்தச் சமயம் பிரமநாயகம் வந்து விட்டார். வேலாயுதத்தை 'வா' என்று கூடச் சொல்லாமல் ரத்தினாவின் அருகில் சென்றார். இது வேலாயுதத்துக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

"எங்கே புறப்பட்டாய், ரத்தினா!" என்று அதிகாரத்தோடு கேட்டார்.

"ஊருக்கு!" — கெஞ்சலுடன் தகப்பனாரைப் பார்த்தாள்.

"இதுதான் மாப்பிள்ளையுடைய யோக்கியதை போலிருக்கிறது! மானம் மரியாதை இருந்தால் தானே! அழையா வீட்டுக்கு வந்தது மல்லாமல் என் பெண்ணை வேறு கடத்தத் திட்டமிட்டிருக்கிறாரா!"

இதைக் கேட்ட வேலாயுதத்துக்குக் கோபம் ஏறியது. "என்னதான் பணம் வந்துவிட்டாலும் மரியாதை தவறிப் பேசுபவன் மனிதனல்ல! உம் பெண்ணை நீரே வைத்துக் கொள்ளும்" என்று ஆவேசத்துடன் கத்திவிட்டு விறுவிறு வென்று வாசல் இறங்கிப் போய் விட்டான்.

"ஐயோ, அப்பா! அவர் போகிறாரே!" என்று ரத்தினா அலறியதைக் கொஞ்சமும் லட்சியம் செய்யவில்லை பிரமநாயகம்.

★

காலம் நாட்களாகவும், வாரங்களாகவும் மாதங்களாகவும் பறந்து ஒன்றரை வருடத்தைத் தள்ளியது. மணமற்ற அந்த செல்வ வாழ்க்கையை எப்படியோ சகித்துக் கொண்டாள் ரத்தினா.

அன்று ரத்தினா ஆற்றுக்குச் சென்றாள். குளித்து விட்டுச் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குப் போனாள். சுவாமி தரிசனம் செய்து கொண்டிருக்கையில் எதிர்பாராத விதமாக அங்கே வேலாயுதத்தைக் கண்டாள். வேலாயுதம் அவளைப் பார்த்ததும் ஓடி வந்தான். "சௌக்கியம்தானா, ரத்தினா?" என்று கேட்டான்.

அவள் கண்ணீர் வடித்துக் கொண்டே, "உங்களைப் பிரிந்து எனக்கு என்ன சௌக்கியம்!" என்று கேட்டாள் ஏக்கத்துடன்.

"ரத்தினா, உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியவில்லை. பல தடவைகள் உன்னைப் பார்க்க இங்கே வந்தேன். உன் அப்பா சொன்ன சொல் இலேசானதா! அதனால் உன் வீட்டுக்கு வர விருப்பமில்லாமல் இங்கேயே சுற்றி விட்டுப் போய் விடுவேன். இன்றுதான் முருகன் உன்னைச் சந்திக்கக் கிருபை செய்திருக்கிறான்!" என்றான் வேலாயுதம்.

"எனக்காக நீங்கள் ஏன் கஷ்டப்பட வேண்டும்! இன்றைக்கே உங்களுடன் வந்து விடுகிறேனே!"



ஆபீஸ் பையன் :—ஸார், உண்மையிலேயே நீங்கள் அதிர்ஷ்டக்காரர்தான். இன்று காலையிலிருந்து ஏழு பேர்கள் எஜமானைப் பார்க்க வந்தார்கள். எஜமான் அவர்களில் யாரையும் பார்க்கவில்லை. குமாஸ்தாவிடம் பார்க்க முடியாது என்று சொல்லி அனுப்பி விட்டார். உங்களைத்தான் நேரில் பார்க்க அநுமதி தந்தார் !

வந்தவர் :—உனக்கு உண்மை தெரியாது. அந்த ஏழு பேர்களும் நான் அனுப்பி வைத்தவர்கள் தான் !

"வேண்டாம், ரத்தினு ! அது தப்பு ! எப்படியாவது நாம் வாரத்தில் ஒரு நாள் சந்தித்தால் போதும். உனக்கு முடியுமா !"

"கணவன் மனைவியாயிருந்தும் கள்ளத்தனமாய்ச் சந்திக்க வேண்டியதுதான் நம் விதியா !"

"என்றைக்காவது நாம் ஒன்றாய்ச் சேரும் நாள் வரும். கவலைப்படாதே !" என்று அவனைத் தேற்றினான். ஞாயிறு தோறும் சந்திப்பதாக இருவரும் முடிவு செய்தனர்.

இன்பமான எத்தனையோ ஞாயிறுகள் அவர்கள் இருவரையும் சேர்த்து மகிழ்வித்தன. ஆனால் அந்த ரகசியம் யாருக்குமே தெரியாதிருந்தது.

இதற்கிடையில் எதிர் வீட்டு வாலிபன் ஒருவன் ரத்தினுவை ஒரு மாதிரியாகக் கண்ணோட்டமிடுவதை எப்படியோ கவனித்து விட்டார் பிரமநாயகம். அதற்கனுசரணையாக வேலாயுதம் புதன் கிழமை அனுப்பிய மொட்டைக் கடிதம் பிரமநாயகத்தின் கைக்குக் கிடைத்துவிட்டது. "இன்று மாலை பார்க்கில் என்னைச் சந்திக்கவும்" என்ற வார்த்தைகளைக் கண்டதும் அவர் திடுக்கிட்டு விட்டார். இதை எதிர் வீட்டுப் பையன் எழுதியதாகக் கருதினார். அப்படியானால் எதிர் வீட்டுப் பையனுக்கும் ரத்தினுவுக்கும் ...... அதற்கு மேல் சிந்திக்கவே அவருக்குப் பயமாக இருந்தது.

'ஐயோ ! வாழக்கூடிய பெண்ணைப் பிரித்தது விபரீதமாகப் போய் விட்டதே !' என்ற அறிவு அவருக்கு அப்போதுதான் ஏற்பட்டது. அந்தப் பையனை எச்சரித்து வைக்கவேண்டும் என்பதற்காகப் பார்க்குக்குச் சென்றார். மாமனார் வருவதைத் தூரத்திலிருந்தே தெரிந்து கொண்ட வேலாயுதம் மெல்ல நழுவி விட்டான். ஏமாற்றத்துடன் திரும்பிய பிரமநாயகம் 'இனியும் ரத்தினுவைத் தம் வீட்டில் வைத்துக் கொண்டிருந்தால் மானம் போய் விடும். மரியாதையாக அவளைக் கணவன் வீடு அனுப்பிவிட வேண்டியதுதான்" என்ற தீர்மானத்தோடு வீட்டுக்கு வந்தார். அங்கு அவர் கண்ட காட்சி ! ரத்தினு வாந்தி எடுத்து மயங்கிக் கிடந்தாள். பிறகுதான் டாக்டருக்கு ஆள் அனுப்பிக் கவனிக்கச் செய்தார்.

★

பிரமநாயகத்தின் உள்ளத்தில் ஒரே போராட்டம் ! 'உன் மகள் நாலு மாதக் கர்ப்பிணி !' என்ற குரல் அவரைச் சுற்றி எதிரொலித்தது. அவர் உடல் குறுகியது. பெரிய மனிதன் என்ற பெயர் அடியோடு போய் விட்டதாக எண்ணினார். வெகு நேரச் சிந்தனைக்குப் பின் ஒரு முடிவுக்கு வந்தார். ஆம் விபரீதமான முடிவு ! டாக்டர் வீட்டை நோக்கி ஓடினார்.

"டாக்டர் ஸார் ! உங்களிடம் தனிமையில் பேச வேண்டும், வருகிறீர்களா !" என்றார். டாக்டர் அவரைத் தனி அறைக்கு அழைத்துச் சென்றார். பிரமநாயகம் அவர் காதில் ஏதோ கூறினார். டாக்டர் 'ஆ !' என்று அலறி விட்டார்.

"டாக்டர், இந்த ஒரு உதவி செய்து விட்டால் என் குடும்பத்தின் களங்கம் நீங்கி விடும். தயவு செய்யுங்கள், டாக்டர் !" என்று கெஞ்சினார் பிரமநாயகம்.

ஆனால் டாக்டர், "முடியாது !" என்று தீர்மானமாக மறுத்து விட்டார்.

பிரம நாயகத்துக்குப் பூமியே சுழல்வது போலிருந்தது. பிரமை பிடித்தவர் போல் எங்கெங்கெல்லாமோ சுற்றிவிட்டு எட்டு மணிக்கு மேல் வீட்டுக்கு வந்தார்.

"முதலாளி ! ரத்தினு அம்மாவைக் காணவில்லை !" என்று வேலைக்காரி கத்திக் கொண்டே அவரிடம் ஓடி வந்தாள்.

"எங்கே போனாள் !" என்று திடுக்கிட்டுப் போய்க் கேட்டார் பிரமநாயகம்.

"நீங்கள் போனதும் வெளியே போனார்கள். இன்னும் வரவில்லை ! அவர்கள் அறையில் இந்தக் காகிதம் இருந்தது" என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தாள் வேலைக்காரி.

பிரமநாயகம் நடுக்கத்துடன் அதைப் படித்தார்.

"அன்புள்ள அப்பா,

கூண்டுக் கிளிபோல் தங்கள் சிறைக்குள் அடைபட்டுக் கிடந்த நான், இன்று விடுதலையடைந்து என் கணவர் வீட்டுக்குச் செல்கிறேன். தங்களுக்கு வருத்தமாக இருக்கலாம். என்றாலும் நான் இப்பொழுது செல்வது மிகவும் அவசியமாகிறது. அப்பா ! தாங்கள் என்னைப் பொன் அணிகளாலும், பட்டுப் புடவைகளாலும் திருப்திப் படுத்தி விடலாமென்று எண்ணினீர்கள். என் முக்கியமான அணிகலன் எது என்பதை மறந்து விட்டீர்கள் ! என் மனத்துக்குச் சாந்தியளிக்காத நகைகளையும், புடவைகளையும் இங்கேயே விட்டுச் செல்கிறேன்.

இன்று டாக்டர் சொன்ன விஷயத்தைக் கேட்டுத் தாங்கள் அயர்ந்து விட்டீர்கள் ! அந்த விஷயத்தைக் கேட்ட என் கணவர் ஆனந்தத்தால் பூரித்து விட்டாரென்றால் தங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். தம்பதிகளாகிய நாங்கள் கள்ளக் காதலர்கள் போல் ரகசியமாகச் சந்திக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி விட்டனவே, உங்கள் அதிகாரமும் வீம்பும் ! இன்று எனக்கு ஏனோ இந்தத் துணிவு ஏற்பட்டு விட்டது. என் கணவருடன் வாழும் கடமையை ஏற்கத்தான் நான் செல்கிறேன். இதனால் தாங்கள் என்னை மகளாக ஏற்றுக் கொண்டாலும், மகளல்ல என்று நிராகரித்து விட்டாலும் நான் கவலைப்

# அப்பா - உன் குடும்பம் உன்னை நம்பியிருக்கிறது

உங்கள் ஆரோக்கியமும், திடமும் உங்கள் குடும்பத்துக்கு இன்றியமையாதது. உங்கள் உணவு நல்லதுதானா என்று கவனியுங்கள். தினம் காட் லிவர் ஆயில் சாப்பிடுங்கள். ஸெவன்ஸீஸ் பரிசுத்தமான காட் லிவர் ஆயில். நேர்த்தியான இயற்கை உணவு.

உங்களையும் உங்கள் குடும்பத்தையும் மார்பு நோயிலிருந்தும் ஜலதோஷங்களிலிருந்தும் அது பாதுகாக்கிறது.

**SevenSeaS**






ஸெவன்ஸீஸ்
சுத்தமான காட் லிவர் ஆயில்

விவரங்களுக்கு :

கார் அண்டு கம்பெனி லிமிடெட்
த. பெ. 152 - 7814 - 1243
பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

படம் போகிறதில்லை. என் உள்ளம் மட்டும் தங்களை என்றும் பூஜித்துக் கொண்டு தான் இருக்கும்.

தங்கள்,
அருமை மகன் நந்து"

கடிதத்தைப் படித்த பிரமநாயகம் "ரத்தினு, நான் பாவி! நான் பாவி!" என்று பிரலாபித்தார். மறுகணம் ரத்தினு வைத்துச் சென்ற நகைகளையும், புடவைகளையும் எடுத்துக் கொண்டு காரில் போய் ஏறினர். கார் ஸ்ரீவைகுண்டத்தை நோக்கி வேகமாகப் பறந்தது.

கிரீச்சிட்டு நின்ற காரின் சப்தம் கேட்டு அப்பொழுதுதான் வந்திருந்த வேலாயுதமும் ரத்தினுவும் வெளியே ஓடி வந்தனர். பிரமநாயகம் காரிலிருந்து ஓடிப் போய் வேலாயுதத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டே, "மாப்பிள்ளை, என்னை மன்னித்து விடுங்கள்! உங்களை அநியாயமாய்ப் பிரித்து வைத்து விட்டேன். நீங்கள் இங்கேயே சுகமாய் வாழுங்கள்!" என்றார் மூச்சு விடாமல். இதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடித்துக்கொண்டே நின்றுவிட்டாள் ரத்தினு.

# படித்துப் பாருங்கள்!

## சத்திய வேட்கை

சத்திய வேள்வியில் புடம் போட்டு எடுக்கப்பட்ட வாழ்க்கை மகாத்மா காந்தியின் அமர வாழ்க்கை. அவ் வாழ்க்கையில் பல ருசிகரமான சம்பவங்கள். சில கண்ணீரை வரவழைக்கும்; சில வயிறு வெடிக்கச் சிரிக்கச் செய்யும்; சில மனம் விம்மிப் பெருமிதம் கொள்ளச் செய்யும்; சில அரிய படிப்பினையை உணர்த்துவதாக இருக்கும். இப்படிப் பல ரஸானுபவங்கள் நிறைந்த நிகழ்ச்சிகளில் 32-ஐ அன்பர் எம். எல். சபரிராஜன் தொகுத்து, சுவை மிக்க தமிழில் தந்திருக்கிறார்.

பிரசுரம்: பாரி நிலையம், பிராட்வே, சென்னை; விலை: ரூ 1—3—0.

## பூமி தானம்

நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்கும் புனித தானம் பூமிதான யக்ஞம். அது வாழ்வற்றவர்களுக்கு வாழ்வளிக்கும் வரப்பிரசாதம் என்று கூறினும் மிகையாகாது. அந்தப் பேரியக்கத்தை நாடெங்கும் கால்நடையாகவே சென்று நடத்தி வரும் ஆச்சாரியா விநோபா பாவே சுகப் பிரம்மத்தைப்போல் இளமை முதலே சுகவாழ்வைத் துறந்தவர்; ஒழுக்கத்திலும் தியாகத்திலும் சிறந்த அந்த முனிவரின் முயற்சியை வீரம் செறிந்த தமிழில் இச் சிறு நூலில் அன்பர் சோலை—இருசன் தெளிவுபடத் தீட்டி யிருக்கிறார்.

பிரசுரம்: சமரசம் பதிப்பகம், ஜோலார்ப் பேட்டை; வட ஆற்காடு ஜில்லா; விலை: அணா 2.

## பிள்ளைத் தமிழ்

திருச்செந்தூர் முருகப் பெருமான் மீது பகழிக் கூத்தர் என்ற புலவரால் பாடப்பட்ட பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் தமிழ் நாட்டில் மிகப் பிரசித்தமானவை. அப் பாடல்களுக்கு குகஸ்ரீ. பு. ப. ரசபதி தெளிவான உரை எழுதி யிருக்கிறார். விலை: ரூ 2-0-0.

## கந்தர் கலி வெண்பா

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் என்னும் அமர கவிஞரால் இயற்றப்பட்ட இணையற்ற பழம் பெரும் நூலுக்கு அறிஞர் குகஸ்ரீ பு. பா. ரசபதி விளக்க உரை புனைந்திருக்கிறார். முருகன் அருளில் திளைத்து அந்தப் பெரும் பேற்றின் பயனை இந்தத் தெய்வீக நூலுக்கு உரையெழுதி யிருப்பது பாராட்டுக்குரியது. இரண்டு நூல்களும் கிடைக்குமிடம்: அமிர்தவசனி பிரசுராலயம், 54, பந்தர் தெரு, சென்னை-1; விலை: ரூ 2-0-0.

## திருமுருகன் பேரிசை

திருச்சேறை சாரநாயகி அம்மாள் இயற்றிய முருகன் துதிக் கீர்த்தனைகள் ஐம்பத்தொன்றின் திரட்டு வரப்பெற்றோம். கீர்த்தனை ஒவ்வொன்றுக்கும் ஸ்வரம் அமைக்கப் பட்டிருக்கிறது. பக்திப் பெருங் கடலில் திளைத்துத் தன்னை மறந்த நிலையில் இயற்றப்பட்டிருக்கும் மேற்படி கீர்த்தனங்களின் பெருமையை, பக்திச் சுவை அறிந்தவர்கள் உணர்ந்து மகிழ்வார்கள்.

கிடைக்குமிடம்: ஸ்ரீமதி சாரநாயகி அம்மாள், 249, பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-3; விலை: ரூ. 3—0—0.

## ஹோமியோபதி சிகிச்சைக் களஞ்சியம்

(முதற்பாகம் — உறுப்பியல்)

இந்நூலில், மனித சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் பாதிக்கும் நோய்களை இன்னின்ன மருந்து தீர்த்து வைக்கும் என்று விவரமாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆங்கிலம் தெரியாதவர்களும் படித்துப் பயனடையும் வண்ணம் இந்நூலைத் தயாரித்திருப்பது பாராட்டுக்குரியது.

ஆசிரியர்: டாக்டர் வி. ஆர். மூர்த்தி; இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட், கும்பகோணம்; விலை: ரூ. 10.

## இலக்கிய தீபம்

சங்க கால இலக்கியங்களைப் படித்து உணருவது மிகவும் சிரமம். அதைவிடச் சிரமமான காரியம் அவற்றுக்குக் கால நிர்ணயம் கண்டு பிடிப்பது. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் அந்தக் காரியத்தை மிகவும் பாராட்டுக்குரிய முறையில் செய்திருக்கிறார்கள். சரித்திரப் பெருண்மைகளையும், சாஸனங்கள் கூறும் சாதனைகளையும் ஆராய்ந்து அறிந்து அவற்றை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் விளக்குவது என்பது எளிதல்ல. அத்துறையில் இந்நூலாசிரியரை மிஞ்சக் கூடியவர்கள் யாரும் இல்லை என்பது இந்நூலின் மூலம் நன்கு விளங்குகிறது.

"திருமுருகாற்றுப்படை", "நெடுநல் வாடையும் நக்கீரரும்" என்னும் கட்டுரைகள் பன்முறைப் படித்துப் பயன் பெறத் தக்கவை. "காவிரிப்பூம் பட்டினம்", "தொண்டி நகரம்", "மௌரியர் தென்னிந்தியப் படையெடுப்பு" முதலிய கட்டுரைகள் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்களின் ஆராய்ச்சித்திறனுக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

பிரசுரம்: பாரி நிலையம்; 59, பிராட்வே, சென்னை-1; விலை: ரூ. 3.


# அன்றாடம் இரண்டே நிமிஷங்கள் தேவை நீங்கள் பூரண எழிலுடன் திகழலாம்

முக சிங்காரிப்புக்குத்தான், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவிக்கொண்டால் அதன் மேல் பௌடர் பூசுவது மிக எளிது — அழகாயுமிருக்கும். ஞாபகமிருக்கட்டும்.

**பிரதி இரவிலும் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை உங்கள் சருமத்தில் தடவி நன்கு தேயுங்கள் — ஒரே ஒரு நிமிஷம் தான் ஆகும்.** அதிலுள்ள எண்ணெய்கள் சருமத்தில் ஊடுருவிச் சென்று, மயிர்க்கால்களில் படிந்திருக்கும் சிறு சிறு தூசியையும் அழுக்கையும் வெளியேற்றி விடுகிறது. சருமத்தை மெதுவாகத் துடைத்து, அது எவ்வளவு பரிசுத்தமாக விளங்குகிறதென்பதைப் பாருங்கள்.



இவ்வற்புத க்ரீமை இன்னும் கொஞ்சம் எடுத்து முகத்திலும் கழுத்திலும் பூசிக் கொள்ளுங்கள் இரவு முழுவதும் அது அப்படியே இருக்கட்டும். காலையில் எழுந்தவுடன் உங்கள் மேனி மிக துல்லியமாயும் பூரண பொலிவுடனும் விளங்குவதைக் கண்டு அதிசயிப்பீர்கள்.






**பிரதிதினம் காலையிலும் ஒரு நிமிஷம் உங்கள் முகத்தில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை மெதுவாகத் தடவுங்கள்.** அது பூரணமாக மறைந்து விடும். சருமம் பட்டுப்போன்று மழமழப்பாகவும் அற்புத சோபையுடனும் விளங்கும்.

கண்ணுக்குப் புலப்படாத வகையில் முகத்தில் மறைந்துள்ள இந்த பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் திரைப்படலம் பகல் முழுவதிலும் உங்கள் எழிலைப் பாதுகாக்கும். உங்கள் மிருதுவான சருமத்திற்கு இந்த பாதுகாப்பு அவசியம்—முக்கியமாக வாட்டைக் காற்றிலும் சூரிய கிரணங்களின் வெப்பத்தாலும் சருமம் துவண்டு போகாமல் காப்பாற்றி வர அத்யாவசியம்.

உங்கள் சருமத்திற்கு இவ்விரட்டை பராமரிப்பு ஒவ்வொரு நாளும் தேவை. பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையும் அன்றாடம் தவறாமல் உபயோகித்து உங்கள் அழகிற்கு அழகு ஊட்டுங்கள்!

உலகில் எங்குமே பெண்மணிகள் தங்கள் எழிலை புதுமை குன்றாமல் பாதுகாக்க பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையுமே உபயோகிக்கின்றனர். அவர்கள் இயற்கை அழகின் இரகசியம் அதுதான்.

## பாண்ட்ஸ்

P. 8613

# உறுதியான தேகதிடம்




## நீங்களும் பெறுக

# வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

ஆரோக்யமளிக்கும் தன்மை நிரூபணமான இந்த டானிக்கைச் சாப்பிட்டுப் பாருங்கள். போஜனம் பூர்த்தியாவதுமின்றி போஷாக்கும் பெறுவீர். உங்கள் தினசரி வேலைகளையும் தேகாப்யாசங்களையும் சரிவரச் செய்யபுதிய சக்தியும் உறுதியான தேகதிடமும் பெறுக. களைப்பே தோன்றாதபடி உங்கள் உறுப்புகள் வலுவடைவதற்கு அவசியமான போஷாக்கு கிடைக்கும்.

வளரும் குழந்தைகளுக்கு ருசி மிகுந்த வாட்டர் பரீஸ் காம்பவுண்ட் மிகவும் உதவிகரமானது. இருமல், சளி ஏற்படாதவாறு எதிர்ப்பு சக்தி உண்டாக்கும்.



# WATERBURY'S
## COMPOUND

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களைத் தென்புடன் வைத்திருக்கும்

NAS. 40-63

# வட்ட மேஜை

## விவசாயிகளின் வேதனை

பொள்ளாச்சி தாலுக்காவுக்கு விவசாய இலாக்கா காரியாலயம் ஒன்றுதான் உண்டு. எங்கள் தாலுக்காவில் 100க்கு 90 பேர் விவசாயிகள். எங்களுக்கு இந்தக் காரியாலயம் இருப்பதும், இல்லாததும் ஒன்றுதான். அங்கு இருப்பது ஒரு டிமான்ஸ்ட்ரேட்டர், ஒரு குமாஸ்தா, ஒரு வேலையாள். நான் ஒரு சமயம் அங்கு சென்றிருந்த வேளை ஒரு விவசாயி வெகு அவசரமாகக் கையில் சில பருத்திச் செடிகளுடன் அங்கு வந்தார். காரணம் அவர் தோட்டத்தில் உள்ள பருத்திச் செடியில் ஒருவகைப் புழு விழுந்திருந்ததே. சில நாட்கள் அப்படியே கவனியாது விட்டிருந்தால் செடிகள் அனைத்தையும் புழு அழித்துவிடும். அவர் வந்ததினம் வெள்ளிக்கிழமை. டிமான்ஸ்ட்ரேட்டர் செடிகளைப் பார்த்தார். மருந்து அடித்தால் புழு உடனே செத்துவிடும், மருந்தும் இருக்கிறது, ஆனால் திங்கள் கிழமை 'பாங்க்' மூடுமுன் வந்து விடுங்கள் என்றார். வந்த கவுண்டர் விழித்தார். "இந்த மூன்று தினங்களில் என் தோட்டமே பாழாகி விடுமே, இன்று கொடுத்தால் என்ன" என்றார். அவர், "இன்று மூன்றாவது வாரக் கடைசி தினம். கணக்குகளைச் சரிபார்க்கவேண்டும். சனி ஞாயிறு 'பாங்கு'மில்லை. இங்கும் விடுமுறை, திங்களன்று வாருங்கள்" என்று கூறி அந்த விவசாயியை அனுப்பிவிட்டார். அதே சமயம் மற்றொரு நபர் வந்தார். நாளை வயல் நடவு என்றும் அதற்கு, உப்பும், புண்ணாக்கும் வேண்டும் என்றார். அவருக்கும் அதே பதில் தான். இன்று தான் அணையிலிருந்து தண்ணீர் விடுகிறார்கள். இரண்டு தினங்களில் நடவு முடிய வேண்டும், எரு இல்லாவிட்டாலும் போகிறது, நடவு முடியவேண்டுமே என்று போய் விட்டார்.

இரண்டு தினங்களுக்குமுன் என் தோட்டத்தில் பருத்திச் செடிக்கும் புழு விழுந்து விட்டது என்று செடியுடன் அங்கு சென்றேன். மருந்து அடித்தால் புழு நீங்கி விடும். ஆனால் மருந்து இங்கு இருப்பு இல்லை என்றார். கோயமுத்தூரிலாவது இருக்குமா என்று கேட்டேன். அதற்கு அவர் "எங்கும் இருப்பு இல்லை, வந்தால் தருகிறேன்" என்றார். அவர் மருந்து தரும் வரை புழு காத்திருக்கவில்லை. அதன் வேலையை அது செய்து விட்டது. அரும் பாடுபட்டு வளர்த்த செடிகள் பாழாகுவதைப் பார்த்துக் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு வழியில்லை.

எங்கள் தாலுக்காவுக்கு இன்னும் இரண்டு விவசாய இலாக்கா காரியாலயங்கள் வேண்டும். அத்துடன் பூச்சிக்கு மருந்து அடிக்கும் கருவிகளும் நிறையக் கொடுத்து உதவ வேண்டும். தோட்டங்களைச் சுற்றிப் பார்த்து வரத் தனியாக 2 டிமான்ஸ்ட்ரேட்டர்களை நியமிக்க வேண்டும். விவசாயக் கருவிகளுக்குள்ள விலையைக் கணிசமாகக் குறைக்க வேண்டும். மருந்து வகைகளையும், எரு வகைகளையும் ஏராளமாக விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் கொடுத்து உதவ வாங்கி வைத்திருக்க வேண்டும். இந்நிலை வந்தால் தான், விவசாயிகள், பயிர்த்தொழிலில் விசேஷ சிரத்தை காட்டி நம் நாட்டிலிருந்து பஞ்சத்தை விரட்டியடிக்க முடியும்.

தாத்தூர்
7—12—53 ஏ. சின்னசாமி

## நிர்ப்பந்தம் உண்டா?

தமிழ் நாட்டில் நாஸ்திகப் பிரசாரத்தின் எதிர் விளைவாக ஆஸ்திக மகாநாடுகளும், திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன. மக்கள் கோயிலையும் குளத்தையும் பக்தி சிரத்தையுடன் நாட விரும்புகின்றனர். இந்த நிலையில், கோயிலை ரயில்வே நிலையம் போலவும், சினிமாக் கொட்டகைகளைப் போலவும் விளம்பர சாதனமாகப் பயன்படுத்தும் வழக்கம் துரதிர்ஷ்டவசமாக ஸ்ரீரங்கத்தில் தலையெடுத்திருக்கிறது. கோவிலுக்கு வந்து ஆண்டவனை வழிபட விரும்புகிறவர்களுக்கு உரம், காப்பிப் பொடி, அலங்கார சாதனங்கள், ஆடையாபரணங்கள், தொடர்ந்து வரும் லாகிரிப் பொருள்கள் முதலியவைகளின் அவசியத்தை எடுத்துச் சொல்ல ஸ்ரீரங்கநாதர் ஏன் விரும்புகிறார் என்பது புரியவில்லை. இந்த விளம்பர வருமானத்தைக் கொண்டுதான் ஸ்ரீ ரங்கநாதர் சுய தேவைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்று ஏதாவது நிர்ப்பந்தம் உண்டா!

ஸ்ரீரங்கம் மட்டுமல்ல—வேறு எங்கேயும் இந்த கைய நிலைக்குத் தேவாலயங்கள் வரக்கூடாது என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்வார்களா!

ஸ்ரீரங்கம்
4—12—53 வா. கோ. பா.

●

## "பயங்கர நோயைத் தடுக்க வேண்டும்"

"படிக்கவேண்டும்—படித்துப் பட்டம் பெற வேண்டும்—பட்டம் பெற்று உத்தியோகம் பார்க்க வேண்டும்" என்கிற எண்ணம் பெருகி, அதன் காரணமாய்ப் படிப்போர் தொகை பெருகி, "வேலை பார்க்க வேண்டும்" என்கிற எண்ணத்தோடு, பலர் ஊர்விட்டு ஊர் வருவது சகஜமாகிவிட்டது. வரும் வாலிபர்கள், தங்கள் வசதிக்கேற்றபடி பணம் எடுத்துக் கொண்டு சென்னை வருகிறார்கள். வந்தவர்கள் ஓட்டலிலோ, சொந்தக்காரர் வீட்டிலோ தங்கி, 'வேலை தேடும் படல'த்தில் தீவிரமாகப் பாடுபடுகிறார்கள். 'கேட்காத இடமில்லை—ஏறாத படியில்லை' என்று சொல்லும் அளவுக்கு, பல இடங்களில், நாள்—வார—மாதக் கணக்கில் அலைகிறார்கள். வேலையோ கிடைப்பதில்லை. தான் கொண்டு வந்த பணம் கரையக் கரையத் தன் மனமும் கரைகிறது. மன முடைகிறார்கள். இந்த நிலையில் "கோழை" எண்ணம் உதயமாகிக் "கோர" முடிவில் போய் முடிவடைகிறது.

"வருங்கால வாலிபர்கள், சுதந்திர ரதத்தை ஓட்டும் வழிகாட்டிகள்" என்று நம் தலைவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அந்த வாலிப வழிகாட்டிகளின் இன்றைய நிலை, மரக்கிளை, ரயில் சக்கரம், சமுத்திரம் இப்படி இன்னோரன்னவைகளைத் துணையாகக் கொண்டு, தங்கள் வாழ்க்கைக்கு முடிவு தேடிக் கொள்ளுகிறார்கள்; தேடிக் கொள்ளும்படி ஏற்பட்டு விடுகிறது.

இந்தக் கோர முடிவுக்கு ஆளாகிறவர்கள் படித்துப் பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்ல; ஏழு, எட்டு, ஒன்பது, பத்தாவது வரை படித்தவர்கள்; அத்தனை பேரும் ஆளாகிறார்கள். இந்தப் பயங்கர நோயைத் தடுக்க வேண்டும்.

இவ்வளவுக்கும் காரணம், வேலை யில்லாத் திண்டாட்டந்தான். முக்கிய பிரச்னையாக மட்டுமல்ல; முதல் பிரச்னையாக—தேசிய பிரச்னையாகக்

கொண்டு, வேலையில்லாத் திண்டாட்டத்துக்குச் சாவுமணி அடிக்க அரசாங்கம் முயல வேண்டும்.

சென்னை
12—12—53 தன. நடராஜன்

●

## மாணவர்களின் அவதி!

எங்கள் கிராமம் சுமார் 2,500 ஜனத்தொகையுள்ள ஒரு கிராமம். இங்கு ஐந்து வகுப்புக்களுள்ள ஒரு ஆரம்பப் பள்ளி தஞ்சை ஜில்லா போர்டாரால் நடத்தப்பட்டு வருகிறது.

எங்கள் கிராமத்திலிருந்து சுற்றுப்புறத்தில் நாலு மைல்களுக்கு அப்பால்தான் உயர்தரக் கல்வி பெற வசதியுண்டு. சாலை வசதி கிடையாது. வயல்களின் வழியாகக் கஷ்டப்பட்டுத்தான் ஏதோ முடிந்தவர்கள் தங்கள் பையன்களை அனுப்பிக் கல்வி கற்க ஏற்பாடு செய்கிறார்கள். சென்ற நான்கு ஐந்து ஆண்டுகளாக எங்கள் பெற்றோர் சங்கம், எங்கள் ஊரிலிருக்கும் ஆரம்பப் பள்ளியை 6, 7, 8 வகுப்புக்களுள்ள உயர்தர ஆரம்பப் பள்ளியாக ஆக்கித் தரப் பலமுறை ஜில்லா போர்டாரையும், கல்வி அதிகாரிகளையும் வேண்டிக் கொண்டோம். அனுமதி கிடைக்கவில்லை.

இவ்வாண்டும் நாங்கள் முயற்சி செய்தோம். 1953-54க்கு எங்கள் பள்ளியை உயர்தர ஆரம்பப் பள்ளியாக மாற்றித் தரவேண்டும் என்று 1953-ம் வருஷம் ஜனவரி மாதத்திலேயே மனுச் செய்து கொண்டோம். அப்பொழுது ஜில்லா போர்டு தலைவரின் ஆளுகையிலிருந்தது. ஜில்லா போர்டாரும் ஆறாம் வகுப்பு ஆரம்பிப்பதற்கு அனுமதி கோரி கல்வி இலாகா டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு, ஜில்லா கல்வி அதிகாரி மூலம் விண்ணப்பம் அனுப்பினார்கள். எங்கள் சங்கத்துக்கும் அதன் நகலை அனுப்பி யிருந்தார்கள். நாங்களும் மிகுந்த நம்பிக்கையுடனிருந்தோம். கோடை விடுமுறைக்குப் பிறகு பள்ளி திறந்தது. ஆறாம் வகுப்புக்கு அனுமதி வரவில்லை. இருந்தாலும், வந்து விடும் என்ற நம்பிக்கையில் எங்கள் கிராமத்தின் பொதுப் பணத்தைக் கொண்டு ஆறாம் வகுப்பு நடத்துவதற்காக ஜில்லா போர்டாருக்குச் செலவின்றிச் சுமார் 300 ரூபாய் செலவில் ஒரு கட்டடம் கட்டினோம். அனுமதி உத்தரவு வரும் வரையில் மாணவர்களின் படிப்புக் காலம் வீணாகிறதென்ற காரணத்தால் எஸ். எஸ். எல். ஸி. படித்த ஒருவரைக் கொண்டு மேற்படி மாணவர்களுக்குப் போதனை செய்ய ஏற்பாடு செய்தோம்.

ஆறாம் வகுப்பு ஆரம்பிக்க அனுமதி மதுரை டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அவர்கள் தரவேண்டும். அதற்குமுன் அவர் தாலுக்கா, ஜில்லா கல்வி அதிகாரிகளின் சம்மதத்தை அறிவார். இவ்விருவரும் சிபாரிசு செய்து விட்டனர். ஆனால் திடீரென இம்மாதத்தில் ஜில்லா போர்டாரிடமிருந்து "கல்வி அதிகாரிகள் ஒத்துக் கொள்ளாததாலும், விண்ணப்பம் மிகவும் காலதாமதமாக அனுப்பப் பட்டிருப்பதாலும் 1953-54 க்கு ஆறாம் வகுப்புக்கு அனுமதி அளிக்க முடியாது. 1954-55 க்கு 54-மார்ச்சில் விண்ணப்பம் செய்யவும்" என உத்தரவு வந்திருக்கிறது. ஆனால் நாங்கள் 53-54-ம் வருஷத்துக்கு 53, ஜனவரியிலேயே விண்ணப்பம் அனுப்பி யிருக்கிறோம்!

சர்க்கார் உத்தரவால் சுமார் 34 மாணவர்களின் ஒரு வருஷப் படிப்பு வீணாகப் போகிறது.

புன்னைவராயன்குடிக்காடு து. கோவிந்தசாமி புன்னைவிராயர்
14—12—53 (பெற்றோர் சங்கத் தலைவர்)

●

## ஓர் வேண்டுகோள்

நானும் ஒரு எஸ். எஸ். எல். ஸி. தேறிய மாணவன். இரண்டு மாதங்களுக்கு முன் ஹிந்து பத்திரிகையில் ஆண் நர்ஸ்களுக்குப் பயிற்சி பெற ஆட்கள் தேவை என்று விளம்பரம் செய்தார்கள். அதற்கு டாக்டர் நற்சாட்சியுடனும் இரண்டு ரூபாய்க்குக் கஜானா ரசீதுடன் மனு அனுப்ப வேண்டும் என்று குறித்திருந்தனர். அதை அனுப்பத் தபால் கட்டணம் அணா 12—6. டாக்டர் நற்சாட்சிக்கு ரூ. 5. ஆக மனு அனுப்பச் செலவு ரூ. 7—12—6. பிறகு சென்னைக்குத் தேர்தலுக்கு வரும்படி 'இண்டர்வியூ கார்ட்' வந்திருந்தது. நான் இருப்பது இராமநாதபுரம். இராமநாதபுரத்திலிருந்து சென்னைக்கு ரயில் கட்டணம் ரூ. 11-4. சென்னையில் என்னைப்போல் இருநூற்று எண்பத்தி ஆறு நபர்கள் வந்திருக்கக் கண்டேன். இரண்டு நாட்களில் தேர்தல் முடிந்து விட்டது.

ஐந்து நாட்களுக்கு முன் ஒரு நண்பர் மூலம் 'குறிப்பிட்ட' பத்து நபர்களுக்குப் பயிற்சி பெற இடம் கிடைத்து விட்டது என்று தெரிந்து கொண்டேன். விளம்பரத்தில் எவ்வளவு பேர் பயிற்சிக்குத் தேவை என்று குறிப்பிடவில்லை. பத்து பேர்கள் எடுக்கப் போவதற்கு 286 நபர்களுக்கு 'இண்டர்வியூ கார்ட்' அனுப்பப்பட்டது. போகவர ரயில் கட்டணம் ரூ. 22—8. மனு அனுப்பச் செலவு ரூ. 7—12—6. சென்னையில் சாப்பாட்டுச் செலவு ரூ. 5. ஆக மொத்தம் எனக்கு மட்டும் ஆனசெலவு ரூ 55—4—6. வேலையில்லாத் திண்டாட்ட காலத்தில் என்னைப்போல் 286 நபர்களில் 10 பேர்கள் தேர்ந்தெடுத்தவர்கள் போக 276 நபர்களுக்குச் சுமார் 40 ரூபாய் செலவானதுபோல் இனிமேலாவது அரசாங்கக் காரியாலயங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு முன் மேற்கண்ட அனாவசிய செலவுகள் ஏற்படாமல் தடுக்க வேண்டுமாய் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்படும் என்போன்ற நபர்களின் சார்பாக வேண்டிக் கொள்கிறேன்.

இராமநாதபுரம்
14—12—53 வை. கணேசன்

### கொரியாவிலுள்ள பாரத வீரர்களுக்குப் பரிசு

குவாலியரிலுள்ள ஜே. பி. மங்காராம் கம்பெனியார் கொரியாவிலுள்ள நம் பாரதப் போர் வீரர்களுக்காக இருநூறு பவுண்டு பிஸ்கட்டுகள், புதுடில்லியிலுள்ள கொரியாப் போர்வீரர் பரிசு நிதி ஸ்தாபனத்துக்கு அனுப்பி வைத்தனர். இந்த ஸ்தாபனத்தின் தலைவரான ஸ்ரீமதி இந்திரா காந்தி அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொரியாவுக்கும் அனுப்பி விட்டதாக ஜே. பி. மங்காராம் கம்பெனியாருக்குச் செய்தி அனுப்பி யிருக்கிறார்.




நெஸில்ஸின் மற்றுமோர் நல்ல பண்டம்

சூடாகவும் குளிர்ச்சியாகவும் சாப்பிடுவதற்கு ஏற்ற நெஸில்ஸின் **மைலோ** எந்த நேரத்திலும் சாப்பிடுவதற்குரிய ருசியுள்ள பானம். அது முழுவதும் சுத்தமான முழு ஆடை நிறைந்த பால், மால்ட் சத்துக்கள், வலிவு ஊட்டும் உலோகச் சத்துக்கள் மற்றும் ஏ, பி, டி முதலிய விட்டமின் சத்துக்களும் நிறைந்தது. அதன் இனிய சாக்லேட் ருசி, சிறியவர் பெரியவர் எல்லோரிடையேயும் பிரசித்தி யடைந்திருக்கிறது. உங்களுக்கு விருப்பமான ஹோட்டலில் சாப்பிட்டுப் பாருங்கள். வீட்டிலும் சாப்பிடுங்கள். அது உங்களுக்கு நல்லது. தயார் செய்வது மிகச் சுலபம். நிச்சயமாக மிகச் சிறந்த பானம்.

# அவள் தியாகம்

புஷ்பன்



பெங்களூர் எக்ஸ்பிரஸ் ஜோலார்ப்பேட்டையில் வந்து நின்றது. நான் கீழே இறங்கி ரயில்வே சிற்றுண்டிச் சாலைக்குப் போய்க் காப்பி சாப்பிட்டு விட்டு வந்து வண்டியில் ஏறிக் கொண்டேன்.

என் எதிரில் உட்கார்ந்திருந்த பெண்மணியைக் கண்டதும் திகைப்பும், ஆச்சரியமும் அடைந்தேன்.

"என்ன, நாமகிரியா?" என்று கேட்டேன்.

வெளியே ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவள் என் பக்கம் திரும்பிப் பார்த்தாள். 'கோபால்! நீங்களா?' என்று பெருத்த ஆச்சரியத்துடன் கூவினாள்.

"எங்கே போகிறாய், நாமகிரி?"

"வேலூருக்கு!"

"வேலூருக்கா? அங்கே யார் இருக்கிறார்கள்? எனக்குத் தெரிந்து அங்கே யாரும் உன் உறவினர்கள் இருப்பதாகத் தெரியவில்லையே!" என்றேன்.

"அதுதான் என் கணவர் வீடு!"

"ஓஹோ!" என்றேன். பிறகு அவளைக் கூர்ந்து கவனித்தேன். அப்போது நான் கண்டு கொண்ட உண்மையிலிருந்து என் உள்ளம் அப்படியே உறைந்து விட்டது. அவள் முகத்தில் தேங்கியிருந்த சோகம். அவளுடைய நெற்றியில் இருந்த பாழ்வெளி எல்லாம் எனக்கு அவளுடைய அவல நிலையைச் சட்டென்று காட்டிக் கொடுத்து விட்டது. என் முகத்தில் வியர்வை அரும்பிற்று.

அவளை எப்படிக் கேட்பதென்று புரியவில்லை. சிறிது நேரம் மௌனமாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் மெதுவாகத் தலை குனிந்திருந்தாள்.

கடைசியில் எப்படியோ சமாளித்துக் கொண்டு, "நாமகிரி, எப்போ இப்படி....?" என்று தட்டுத் தடுமாறிக் கேட்டேன்.

நாமகிரி 'சட்'டென்று தலை நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். எப்படிப் பதில் சொல்வது என்று சிறிது நேரம் யோசித்தாள். உடனே முகத்தைச் சாதாரணமாக வைத்துக்கொண்டு "இரண்டு வருடமாயிற்று" என்றாள்.

"கேட்கிறேன் என்று கோபித்துக்கொள்ளாதே! ஆனாலும் உன்னிடம் எனக்கிருக்கும் பாசம்..." என்று இழுத்தேன்.

"அதனால் என்ன? தெரிந்து கொள்ள வேண்டியதுதானே! அவருக்கு வயசாகி விட்டது. போய் விட்டார்!"

"வயசாகி விட்டதா?" என்று நான் கலவரத்துடன் கேட்டேன்.

"ஆமாம். நான் அவருக்கு மூன்றாந்தாரம்!"

என் இதயம் நடுங்கிவிட்டது. நாமகிரியின் முகபாவத்தைப் பார்த்தேன். அவள் கூறிய போது அவளுக்கு எவ்வித சங்கடமும், வருத்தமும் உண்டாகவில்லை. வெகு சாதாரணமாக எல்லா விஷயங்களையும் கூறுவதுபோல் சகஜமாகவே கூறினாள். அவள் குரலில் ஒருவித பாவமும் தோன்றவில்லை.

"நாமகிரி, நீ மகா தியாகி! ஆனால் அதே சமயம் கல்மனம் படைத்தவள்!" என்றேன்.

நாமகிரி சிரித்தாள். அந்தச் சிரிப்பில் அவளுடைய இளம் பருவ நாட்களில் பொங்கித் ததும்பிய ஸௌந்தரியத்தைக் கண்டேன்.

* * *

குடும்பத்தை நடத்த அதிகமாகச் சிரமப்படாமல் எளிய வாழ்க்கை நடத்தி வந்த குடும்பந்தான் எங்கள் பெற்றோர்களின் குடும்பங்கள். நாமகிரியின் தகப்பனாரும், என் தகப்பனாரும் வெகு அத்தியந்த சிநேகிதர்களாயிருந்தார்கள். பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்கள். நாமகிரி பிறந்த போது எனக்கு வயது ஐந்து. எனக்கு இப்போது ஞாபகம் இருக்கிறது. நாமகரண தினத்தின் போது நாமகிரியின் தாய் அவளை மடியில் வைத்துக் கொண்டு மணையில் உட்கார்ந்திருந்தாள். நான்தான் குழந்தையை வைத்துக் கொள்வேன் என்று அடம் பிடித்தேன். என் மடியில் சிறிது நேரம் குழந்தையைக் கிடத்தினார்கள். அதை நான் பெருமையுடன் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். இப்படி அவள் பிறந்ததிலிருந்தே அவளுடன் என் உறவும், தொடர்பும் ஏற்பட்டு நெருங்கிப் பழகினோம் இருவரும். பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் அவளை எடுத்து மடியில் விட்டுக் கொண்டு உட்கார்ந்து விடுவேன். ஒரு வயதானதும் நடக்கப் பழக்கினேன்.

அப்பா, அம்மா, மாமா எல்லாம் பேச நான் தான் பழக்கினேன். அவளுடன் குழந்தை விளையாட்டுக்கள் எல்லாம் விளையாடினேன். பள்ளிக்கூடம் போகும் வயது வந்ததும் அவளைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் சென்று திருப்பி அழைத்து வரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். பள்ளிக்கூடத்தில் யாராவது அவளுடன் வம்பு செய்தால் அந்தப் பையனிடம் குஸ்திக்கு நின்று விரட்டினேன். நானும் நாமகிரியும் கொஞ்சங் கூடப் பிரிந்த தில்லை. எங்களுக்கு இடையில் எப்போதாவது விளையாட்டுச் சண்டை வரும். ஆனால் அடுத்த சில மணி நேரத்துக்கெல்லாம் சண்டை சரியாகி விடும்.



என் படிப்பு அவ்வூர் சம்பந்தப்பட்ட வரை முடிந்து விட்டது. அப்புறம் ஹை ஸ்கூல் படிப்புக்கு என் மாமா வீட்டுக்குத் திருச்சிக்குப் போக வேண்டியிருந்தது.

"நன்றாகப் படி நாமு!" என்று புத்தி கூறினேன், ஊருக்குப் புறப்படும்போது.

"ஓ!" என்று தலையாட்டினாள்.

விடுமுறைக்கு ஊர் வரும்போது இருவரும் ரகசியமாக உட்கார்ந்து நாங்கள் பிரிந்திருந்த நாட்களில் இருவருக்கும் ஏற்பட்ட அனுபவங்கள், நடந்த சம்பவங்கள், பார்த்த புதுமைகள் எல்லாவற்றையும் பற்றி நேரம் போவது தெரியாமல் பேசிக் கொள்வோம்.

எங்கள் விளையாட்டுப் பருவம், சிறு வயசு எல்லாம் கடந்து வாலிபதசையடைந்து விட்டோம். என் தகப்பனார் ஒரே பிள்ளையான என்னை நன்கு படிக்க வைத்து நான் பெரு வாழ்வு வாழ்வதைப் பார்க்க ஆசைப்பட்டார். மிகவும் சிரமப்பட்டு என்னைக் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைத்தார்.

இந்த வாலிப வயதில் என் உள்ளத்தில் இதுவரை இல்லாத விநோதமான எண்ணங்கள் முளைத்தெழுந்தன. என் மனம் முன்னைவிட நாமகிரியைப் பற்றி எண்ண ஆரம்பித்தது. அவளைக் காதலியாக நினைத்து மனம் குதூகல மடைய ஆரம்பித்தது. அவளுடைய அழகு முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக ஆகிவிட்டிருந்ததாகப் பட்டது. அவளுடைய சிரிப்பையும், குறும்புப் பேச்சுக்களையும், துள்ளி ஓடும் அழகையும் எண்ணி எண்ணி உள்ளுக்குள்ளேயே மகிழ்ந்து வந்தேன். நான் நன்றாகப் படித்துத் தேறிப் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்து கை நிறையச் சம்பாதித்து நாமகிரியை மணந்து அவளுடன் உல்லாசமாக வாழ வேண்டும் என்று ஆசைக் கோட்டைகளைத் தினமும் கட்டி வந்தேன். சதா என் நினைவில் அதே எண்ணம்தான் இருந்து வந்தது.

இண்டர் பரீட்சை முடிந்ததும் நான் என் கிராமத்துக்கு விடுமுறையில் போயிருந்தேன். அப்போது நாமகிரியைக் கண்டவன் மிகவும் ஆச்சரிய மடைந்து விட்டேன். அப்போது அவளுக்குப் பதினைந்து வயது. அவளுடைய அழகின் சோபைமிகுந்திருந்தது.

நான் வந்திருந்த அன்று எங்கள் வீட்டுக்குள் வந்தவள் என்னைக் கண்டதும் சட்டென்று திரும்பிப் போகப் பார்த்தாள்.

"என்ன நாமகிரி? எங்கே வந்தாய்? திரும்பிப் போகிறாயே!" என்றேன்.

அவள் மறுமொழி கூறாமல் என்னை ஒரு ஒய்யாரப் பார்வை பார்த்து விட்டுப் போய் விட்டாள். அந்தப் பார்வையில் சொக்கிப் போனேன். அவள் முதலில் என்னுடன் முன்போல் சகஜமாகப் பழக வெட்கப்பட்டாள். ஆனால் இரண்டு மூன்று நாட்கள் ஆனதும் பழையபடி கலகலப்பாகப் பேச ஆரம்பித்து விட்டாள். அவள் பேச்சில் மாறுதல் ஒன்றைக் கண்டேன். 'டே, கோபு' எல்லாம் போய் 'நீங்கள்' என்று பேச ஆரம்பித்து விட்டாள். நானும் அந்த மாறுதலுக்குக் காரணமானதைக் கண்டு கொண்டேன்.

அவள் கண்களிலே இருந்த ஒளி, அதில் தொனித்த அர்த்தம் எல்லாவற்றையும் புரிந்து கொண்டேன். என் தகப்பனாரும் நாமகிரியை எனக்கு மணம் செய்து வைப்பதற்குத்தான் ஏற்பாடு செய்திருந்தார்.

நானும் அந்த நாளை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். எப்போது என் படிப்பு முடிவடையும், எப்போது நாமகிரியை மணந்து அவளுடன் ஆனந்த வாழ்க்கை வாழப் போகிறேன் என்று எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன்.

முதல் வருடம் பி. ஏ. முடிந்ததும் ஊர் வந்திருந்தபோது நாமகிரி ஒரு சமயம், "இன்னும் ஒரு வருஷம்தானே நீங்கள் படிக்க வேண்டும்?" என்று கேட்டாள்.

"ஆமாம், ஒரு வருடம்தான்! அப்புறம் உன்னிடம்தான் படிக்க வேண்டும்! அது வரை பொறுத்துக்கொள்" என்றேன்.

அவளும், "ஆமாம்..." என்று ஏதோ கூறிக்கொண்டே ஓடிவிட்டாள்.

கடைசியாக என் படிப்பை யெல்லாம் ஒரு வழியாக முடித்து விட்டேன். மாகாணத்திலேயே முதலாவதாகத் தேறினேன். என் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அடுத்த நிமிடியே ஒரு பெரிய உத்தியோகம் கிடைத்து விட்டதாகவும் நாமகிரியுடன் சென்னையில் ஆனந்தத்துடன் வாழ்க்கை நடத்துவதாகவும் கனவு கண்டேன்.

ஆமாம், ஒரு விதத்தில் நான் நினைத்தது வீண் போகவில்லை.

•  •  •

"ஸார்!......" என்று வாசலில் யாரோ கூப்பிடுவது கேட்டு அவசரமாக வெளியே வந்து பார்த்தேன்.

ஆடம்பரமாக நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் கைகளில் வைர மோதிரங்களும் காதுகளில் கடுக்கனும் மின்ன, சரிகைத் தலைப்பாகையுடன் கோட்டு, பஞ்சகச்சம் வேஷ்டி அணிந்து, நெற்றியில் பளிச்சென்று திருமண் இட்டுக்கொண்டு, கையில் தந்தப் பிடிபோட்ட தடியைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார். "இதுதானே சுந்தரமய்யங்கார் வீடு?" என்று கேட்டார். அவருடைய கம்பீரமான தோற்றம் பய பக்தியை உண்டாக்கிற்று. "உள்ளே வந்து உட்காருங்கள். அவரைக் கூப்பிடுகிறேன்" என்று கூறி நாற்காலியில் உட்கார வைத்து விட்டு என் தகப்பனாரை அழைத்து வந்தேன்.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் தூர நின்று கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் பட்டணத்தில் பிரபலமான வக்கீல் திருமலாச்சாரியார் என்றும் அவருக்கு வத்ஸலா என்று ஒரு பெண் கலியாண வயதில் இருப்பதாகவும், அவளை எனக்கு மணம் செய்து கொடுத்து என்னையும் வக்கீலுக்குப் படிக்க வைத்துப் பிரபலமாக்கி விடுவதாகவும் அவர் கூறினார்.

என் தகப்பனார் தயங்கினார். நாமகிரிக்கும் எனக்கும் விவாகம் செய்வதாய் இருக்கும் போது இப்போது எப்படி அவளைப் புறக்கணிப்பது என்று யோசித்தார். பிறகு, "நீங்கள் இவ்வளவு தூரம் தேடி வந்ததற்கு மிகவும் சந்தோஷம். நீங்கள் ஊருக்குப் போங்கள். வீட்டிலும் கேட்டு இன்னும் இரண்டு நாட்களில் எழுதுகிறேன்" என்று கூறி அனுப்பி விட்டார்.

அவர் போனதும் நான் என் தகப்பனாரிடம், "அப்பா! அவருடைய பணத்தைக் கண்டு மயங்கி விடவேண்டாம். நான் நாமகிரியைத் தவிர வேறு யாரையும் மணந்து கொள்ள மாட்டேன்!" என்றேன்.

என் தகப்பனாரும், "ஆமாண்டாப்பா! நானும் அதைத்தான் யோசிக்கிறேன்" என்றார்.

"அதெல்லாம் எதையும் யோசிக்க வேண்டாம், அப்பா. 'முடியாது' என்று எழுதி விடுங்கள்" என்று கூறினேன்.

தகப்பனாரும், "சரி, அப்படியே ஆகட்டும்" என்றார்.

ஆனால் அப்போது நடந்ததை நினைத்தால் எனக்கு இப்போதும் தூக்கி வாரிப் போடுகிறது. "மாமா!" என்று கூப்பிடும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். நாமகிரி நின்று கொண்டிருந்தாள்.

"என்ன, நாமகிரி!" என்று கேட்டார்.

அவள் ஒன்றும் பேசாமல் நின்றாள். எதையோ சொல்ல வேண்டும் போல் தயங்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தாள்.

வக்கீல் திருமலாச்சாரியார் வந்த செய்தியை அறிந்து அவள் வந்திருப்பதாக நினைத்து, "என்ன நாமகிரி! சொல்லு. என்ன வேண்டும்? கோபாலனை அந்த வக்கீல் தட்டிக்கொண்டு போய் விடுவார் என்று பயப்பட வேண்டாம். கோபாலன் உனக்குத்தான்!" என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவள் ஒரு தரம் என்னை ஏறிட்டுப் பார்த்து விட்டுப் பிறகு என் தகப்பனாரைப் பார்த்து, "மாமா... நான் உங்கள் பிள்ளையைக் கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லை!" என்றாள்.

அதைக் கேட்டதும் பேரிடி தாக்கியது போல் இருந்தது இருவருக்கும். நான் அவளை ஆச்சரியத்துடன் பார்த்



திருவல்லிக்கேணி கலாசாரக் கழக அங்கத்தினர்கள் 'உலக-மாயம்' என்ற நாடகத்தைச் சென்ற டிசம்பர் மாதம் 6-ம் தேதி, திருவல்லிக்கேணி நம்மாழ்வார் மாளிகையில் வெகு சிறப்பாக நடித்தனர். அதில் பங்கெடுத்துக் கொண்டவர்களையும், காரியதரிசிகளையும், நாடகத்தை எழுதி டைரக்ட் செய்த ஸ்ரீமான் வி. கே. பார்த்தசாரதி அய்யங்காரையும் மேலே உள்ள படத்தில் காணலாம்.

# க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸை இப்பொழுது லக்ஷக்கணக்கானவர் உபயோகிக்கின்றனர்



ஏனெனில்: அதுதான், இயற்கையின் துர்கந்த நாசினி கலந்த, பற்களை வெண்மையாக்கும் பற்பசையில் உலகிலேயே மிகச் சிறந்தது.

ஆரம்ப முதல் வெற்றியளிக்கும் க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை, முன்னைவிட இப்பொழுது அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. ஒரிஜினல் பற்பசையில் உள்ள கால நிரூபணமான எந்த பொருளையும் விட்டு விடவில்லை—அதே விசேஷ விதிகளுடன் க்ளோரோபில்லும் சேர்க்கப் பட்டுள்ளது. ஆனால் க்ளோரோபில் உங்கள் பற்களை சுத்தம் செய்வதில்லை; உங்கள் ஸ்வாசத்தை சுத்தி செய்கிறது. ஆகவே, க்ளோரோபில் சேர்ந்த பற்பசை வாங்கும்போது, வெண்மையாக்கும் நல்ல பற்பசையையே வாங்குவது எவ்வளவு அவசியம் பாருங்கள். அதிக வெண்மையான பற்களும், நறுமணம் கமழும் மூச்சும் பெற, க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையையே கட்டாயமாக வாங்குங்கள்.




## க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை

மக்ளீன்ஸ் பற்பசை உபயோகிப்போர் தயவு செய்து கவனிக்கவும்! ஒரிஜினல் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை இப்பொழுதும் எங்கும் கிடைக்கும்.

CMI-5-TAM.



# இப்பொழுது உங்கள் நாட்டின்

## எதிர்கால வளர்ச்சிக்கு நீங்கள் உதவக்கூடிய சந்தர்ப்பத்திலேயே

10-வருட டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாசிட்டுகளில் முதலீடு செய்து உங்கள் எதிர்காலத்திலும் அதிக வளம் ஏற்பட வழி தேடுங்கள். உங்கள் முதலீடு, இம்மாபெரும் நாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு தனி நபருக்கும் பயன் தரக்கூடிய திட்டங்களில்—அதாவது விவசாய திட்டங்கள், கைத்தொழில் திட்டங்கள், அணைக்கட்டுகள், பாலங்கள் நிர்மாணம், குடிசைத்தொழில்கள், சமூக க்ஷேமாபிவிருத்தி சேவைகள் முதலியவைகளுக்கே—செலவழிக்கப்படுகின்றன.

### அதிக க்ஷேமகரமான காலத்திற்கு தயார் செய்து கொள்க

உங்கள் இன்றைய முதலீடு காரிய ஒரு அவசரத்திற்கு ஈடு கொடுக்கும். இந்த டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாசிட்டுகளுக்கு வருமான வரிக்கு உட்படாத நிகர வட்டியாக வருடம் 1க்கு 3½ சதவிகிதம் கிடைக்கும். 10 வருட கெடு பூர்த்தியானவுடன் அசல் தொகை உத்தரவாதமாகத் திருப்பிக்கொடுக்கப்படும். இப்பொழுதே முதலீடு செய்து உங்கள் குடும்பத்திற்கும் உங்கள் நாட்டிற்கும் அதிக வளம் ஏற்பட வழி தேடுங்கள்.

### முதலீடு செய்யுங்கள்

### பத்து வருட டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாசிட்டுகளில்

## இந்தியாவின் சுபிட்சத் திட்டத்திற்கு உதவுங்கள்

இம்முதலீடு சம்பந்தமான இதர விவரங்களை விதிகளை அறிய, நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர் காட்டன் காலனி, ... 3 அல்லது உங்கள் ராஜ்யத்திலிருக்கும் ரீஜனல் நேஷனல் ஸேவிங்ஸ் ஆபீஸருக்கு எழுதவும்.

AC 411TH

தேன். அவள் வாய் பேசாமல் சிலை போல் நின்று கொண்டிருந்தாள்.

"என்னம்மா, என்ன சொல்லுகிறாய்?" என்றார் என் தகப்பனார் ஒன்றும் புரியாமல்.

"ஆமாம், மாமா! நான் உங்கள் பிள்ளையை மணம் செய்து கொள்ள முடியாது!" என்று கூறிவிட்டு ஓடிவிட்டாள்.

நான் 'ஐயோ' என்று அலறி விட்டேன். அடுத்த விநாடி எனக்குக் கோபம் பிரமாதமாக உண்டாயிற்று. "ஏய், நாமகிரி!" என்று கூவினேன்.

நான் பின்தொடர்ந்து போனேன். அவள் கையைப் பிடித்து நிறுத்தினேன். "என்ன நாமகிரி! உனக்கேதாவது பைத்தியம் உண்டாகிவிட்டதா? இதென்ன அசட்டுத்தனமான பேச்சு!" என்றேன்.

என் கையை உதறிவிட்டு, "என்னைத் தொடாதீர்கள்! நான் அசட்டுத்தனமாகவோ யோசனையின்றியோ ஒன்றும் கூறவில்லை. நன்றாகத் தீர்மானித்துத்தான் கூறுகிறேன். உங்களை நான் கலியாணம் செய்து கொள்ள முடியாது! இது நிச்சயம்!" என்றாள்.

வைரம் பாய்ந்த நெஞ்சினளாக அவள் பேசிய பேச்சைக் கேட்டதும் ஸ்தம்பித்து விட்டேன். "நாமகிரி! நாம் சிறு வயதில் இருந்து ஒன்றாய் வளர்ந்தது, கட்டிய மனக் கோட்டைகள் எல்லாவற்றையும் மறந்து விட்டாயா? அதையெல்லாம் நினைத்துப் பார்! போன விடுமுறையில் வந்தபோது கூட நாம் பேசிக் கொண்டோமே, நாமகிரி! எல்லாவற்றையும் அதற்குள் மறந்துவிட்டாயா? ஏன் திடீரென்று மாறிவிட்டாய்?" என்று கேட்டேன்.

"அதையெல்லாம் இப்போது எதற்குக் கிளறுகிறீர்கள்? என் தீர்மானத்தை இனி மாற்றப் போவதில்லை!"

"நாமகிரி! நன்றாக யோசி! அவசரத்தில் கூறிவிட்டுப் பிறகு வருத்தப் படாதே!"

"நான் ஒன்றும் குழந்தையில்லை. நீங்கள் முதலில் இந்த இடத்தை விட்டுப் போய் விடுங்கள்!" என்றாள்.

நான் திரும்பி வந்து விட்டேன்.

அதற்குப் பிறகு என் பெற்றோர்கள், அவளுடைய பெற்றோர்கள் எவ்வளவோ கூறியும் அவள் ஒரேயடியாக என்னை மணக்க மறுத்து விட்டாள்.

இதற்கு இடையில் திருமலாச்சாரியாரிடம் இருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது.

எனக்கு நாமகிரியைத் தவிர வேறு யாரையும் மனதாலும் நினைக்க முடியவில்லை. இருந்தாலும் அவள் மேல் எனக்கு ஏற்பட்ட கோபம், அவள் செய்கையால் அவள் அதற்கான பலனை அனுபவிக்க வேண்டும் என்று என் மனத்தில் உண்டான எண்ணம், திருமலாச்சாரியாரின் பெண் வத்ஸலாவை மணக்கச் சம்மதம் கொடுக்கச் செய்தது.

கடைசியில் எனக்கும் வத்ஸலாவுக்கும் விவாகம் நடந்தேறியது. என் விவாகத்தில் நாமகிரி மிகவும் உத்ஸாகத்துடன் இருந்தாள். ஓடி ஆடி எல்லா வேலைகளையும் செய்தாள். வத்ஸலாவுடன் சுற்றிக்கொண்டு அவளிடம் அன்புடன் சிநேகம் பிடித்துக் கொண்டாள்.



"பத்திரிகையை பார்த்தீரா? சண்டை வரத்தான் வேணும்!"

"ஏன் சார் அப்படிச் சொல்கிறீர்?"

"அப்பொழுது தானே சமாதானம் வரும்!"

* * *

அன்று நான் பட்டணத்துக்குப் புறப்படும்போது நாமகிரியுடன் சொல்லி விட்டு வர அவள் வீட்டுக்குப் போனேன். அவளைத் தனியாகப் பார்த்துப் பேசிவிட்டு வரவேண்டும் என்று நினைத்தேன்.

அவளும் தனியாகத்தான் இருந்தாள். "நாமகிரி, போய்விட்டு வருகிறேன். கடைசியில் என்னை மோசம் செய்து விட்டாய்! ஆனாலும்..." என்று இழுத்தேன்.

"அதையெல்லாம் பற்றி நினைக்காதீர்கள். நீங்கள் சௌகரியமாய் வாழவேண்டும். வத்ஸலா எவ்வளவு அழகாயிருக்கிறாள்? என்னைவிட மெத்தப் படித்த பெண். குணம் நல்ல குணம். புத்திசாலியும்கூட. இரண்டு நாட்களிலேயே கண்டு கொண்டேன். உங்களுக்கேற்ற மனைவி. நன்றாக, சந்தோஷமாகக் கீர்த்தியுடன் வாழுங்கள். வத்ஸலாவை அன்புடன் நேசியுங்கள்! அப்படி வாழ்வதாகக் கேட்டால்தான் என் மனம் சந்தோஷமடையும். உங்கள் முன்னேற்றம், சந்தோஷம் என்னால் தடைப்படக் கூடாது. அதனால் நீங்கள் என்னை மறந்து விடுங்கள்..." என்று கூறிவிட்டு அவள் என் முன்னிருந்து போய் விட்டாள். நான் மௌனமாக வெளியே வந்தேன். நாமகிரி விக்கி, விக்கி அழும் சத்தம் கேட்டது.

கொஞ்சம் கொஞ்சமாக நாமகிரியை மறந்தும் விட்டேன். என் பெற்றோரும் சென்னைக்கு வந்து விட்டதால் அவளைப் பற்றிய தகவலே கிடைக்க வில்லை.

* * *

எங்கோ நல்ல கணவனை அடைந்து சௌகரியமாய் வாழ்ந்து கொண்டிருப்பாள் நாமகிரி என்றுதான் எண்ணி ஆறுதல் அடைந்து வந்தேன்.

ஆனால் இன்று வண்டியில் அவளைப் பார்த்து உண்மை நிலையை அறிந்தபோது அவளுடைய பிடிவாதத்தின் பயங்கரப் பலனை உணர்ந்த போது, எனக்காக அவள் செய்த தியாகத்தின் மதிப்பை உணர்ந்த போது அவளிடம் எனக்கேற்பட்ட அனுதாபம், மதிப்பு, அன்பு எல்லாம் இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. தன் விவாகத்தைப் பற்றிக் கூட ஒரு வரி எழுதாத தன் காரணமும் விளங்கியது. அவள் மூன்றாந்தாரமாக ஏதோ சொற்ப சொத்துடைய கிழவனை மணந்துகொண்ட விஷயம் தெரிந்து நான் அனாவசியமான வருத்தம் அடையக் கூடாதென்பதே அவள் நோக்கம். அதற்காகவே அவள் தன் தகப்பனாரிடம் கண்டிப்பாகத் தன் கல்யாணத்தைப் பற்றித் தெரிவிக்கக் கூடாதென்று கூறி விட்டாளாம்.

ஆனால் விதி இருவரையும் சந்திக்கும்படி செய்து விட்டது. என் மனம் பெரிதும் வருத்த மடைந்தது. அவளுடன் ஒன்றுமே பேச முடியவில்லை. எதைப் பேசுவது? எல்லாம் சோகமான சமாசாரம் அல்லவா? மேலும் மேலும் வருத்தம் உண்டாகுமே தவிர, குறைவதற்கு வழி இல்லை அல்லவா?

வண்டி ஒரு குலுக்கலுடன் காட்பாடியில் நின்றது. நாமகிரி ஒரு சிறு கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு "வரட்டுமா!" என்று விடைபெற்றுக் கொண்டாள்.

"உம், போய் வா !" என்றேன் பெருமூச்சு விட்டுக் கொண்டே.


அவள் சிரித்துக் கொண்டே, "தயவு செய்து என்னை இப்போது சந்தித்ததையே மறந்து விடுங்கள்" என்றாள்.

அவள் போய் விட்டாள். அவள் உட்கார்ந்திருந்த இடத்தையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தேன். அது வைரம் பாய்ந்த மரத்தால் செய்யப் பட்டிருந்தது. அவள் இருதயமும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

## அமெரிக்க மாமாவின் அங்கலாய்ப்பு!




அமெரிக்கா பாகிஸ்தானுடன் இராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ளச் செய்யும் முயற்சி ஆசிய நாடுகள் எல்லாவற்றிலும் ஆத்திரத்தைக் கிளப்பிக் குழப்ப நிலையை உண்டாக்கும் என்று கருதப் படுகிறது. ஆனால் அமெரிக்க இராஜ தந்திரிகள் தங்கள் மேல் அநியாயப் புகார் சொல்லப் படுவதாக அங்கலாய்க்கின்றனர்.


4 நக்ஷத்திரங்கள்: எந்த ரஸ்தாவிலும் சுமுகமாக ஓடக்கூடியவை
ரோட் கிங்
டாக்கட்
டிலக்ஸ் ஏ. டபிள்யூ. டி.
ரிக்ஷா ரோட் லக்
குட்இயர்
சைக்கிள் டயர்கள்
குட் இயர் டியூப்களே வேண்டும் என்று கேளுங்கள்

# உறுதியான கட்டிட வேலைகளுக்கு அக்ரிகோ கருவிகளை நம்பலாம்



## அக்ரிகோ


சிறந்த வேலைகளுக்குச் சிறந்த கருவி!

நிலத்தை வெட்டிப் பண்பாடு செய்தல், அணைக்கட்டு வேலைகள் போன்ற விஸ்தாரமான திட்டங்களின் கடினமான தேவையை அக்ரிகோ கருவிகள் பூர்த்தி செய்கின்றன. மிகுந்த உறுதிக்கும், சீரான அமைப்புக்கும் இலகுவாக வேலை செய்வதற்கும் பெயர் பெற்ற அக்ரிகோ கருவிகளையே கண்ட்ராக்டர்கள் எங்கும் விரும்புகிறார்கள்.


## டாடா அக்ரிகோ கருவிகள்

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பனி லிமிடெட்
தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்;
23-B நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா 1
கிளை ஆபீஸ்கள்: பம்பாய், மதராஸ், நாக்பூர், அஹமதாபாத், ஸெகந்திராபாத், விஜயநகரம் கண்டோன்மெண்ட், ஜலந்தர் கண்டோன்மெண்ட் & கான்பூர்


AG. 3872



சதுர வடிவமான மண்வாரி: ஐ. எஸ். ஐ. குறிப்புகளின்படி ஹைகார்பன் எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டது. கெட்டியான மரப்பிடி பொருத்தப்பட்டது.



மேற்கு இந்தியக்கொத்து மிகவும் பலமானது. ஆயினும் வேலை செய்ய இலகுவானது–உறுதி வாய்ந்திருப்பதால் நீடித்துழைக்கக்கூடியது.



கோடரி
இரண்டு ரகங்களில் கிடைக்கும். மிகவும் உறுதி வாய்ந்தது–நீடித்து உழைக்கக் கூடியது.



கடப்பாரை
சாதாரணமாக 5'–5'' நீளத்திலும் 7/8" லிருந்து 1¼" கனத்திலும் கிடைக்கும். ஹை-கார்பன் எஃகிலிருந்து தயாரிக்கப்பட்டது

# யோகாசன சிகிச்சை

வி. என். குமாரசாமி

## 10. உணவு வகைகள்-கொழுப்பு.

உணவில் புரதத்தின் முக்கியத்தைப் பற்றி முன் சொன்னோம். கொழுப்பும் உணவில் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது. இது நிறைய சக்தியைக் கொடுக்கக் கூடியது.

நமக்கு வேண்டிய சக்தியை அளப்பதற்கு காலரிகளாகப் பிரித்திருக்கின்றனர். இதில் அதிக காலரிகள் கொடுப்பது கொழுப்பு என்று கணக்கு எடுத்திருக்கின்றனர். சர்க்கரையிலும் மாவுப் பொருள்களிலும் நிறையக் காலரிகள் உண்டு. ஒரு கிராம் சர்க்கரை அல்லது மாவுப்பொருளில் 4·1 காலரிகள் உஷ்ணம் கொடுக்கும் பொருள் இருக்கிறது. என்றால் கொழுப்பில் ஒரு கிராமுக்கு 9·3 காலரிகள் இருக்கின்றன என்று கணக்கெடுத்து இருக்கின்றனர்.

கொழுப்பு நமக்கு வேண்டிய முக்கியமான போஷணையாக இருப்பதுடன் வேறு சில முக்கியமான வேலைகளையும் நம் உடம்பில் செய்கிறது. நமது உடலில் நரம்பு இயக்கத்துக்குக் கொழுப்பு அவசியமாகிறது. தவிர, சருமத்தின் பொலிவு ஆரோக்கியம் முதலியவைகளைக் காக்க உதவுகிறது. இதில் இருக்கும் காடிப் பொருள்கள் சில நோய்களைத் தடுக்கும் குணமுடையது. கொழுப்பில் கரி, ஜலவாயு, பிராணவாயு முதலியவை இருப்பதால் உடலில் எரிக்கப்பட்டு உஷ்ணத்தைத் தருவதற்கு முடிகின்றது.

ஒரு யந்திரம் இயங்க எப்படி நிலக்கரி உபயோகப்படுகிறதோ அப்படி நமது உடலில் உஷ்ணத்தை உண்டாக்கக் கொழுப்பு உபயோகப்படுகிறது. கொழுப்பு நமது உடலில் இழையங்களில் சேர்க்கப்படுவதால் சக்தியைக் கொடுப்பதோடல்லாமல் குளிரினால் நமது உடலின் உஷ்ணம் கஷ்டமடையாமல் படிக்குப் பாதுகாக்கின்றது.

கொழுப்பு போதுமான அளவு நாம் உட்கொள்ளாமலிருந்தால், சீதோஷ்ண மாற்றங்களால் பாதிக்கப்படுவோம் குளிரைத் தாங்க முடியாது. சரீர வனப்பு குன்றும். உடல் கனம் குறையும். நோய்களை எதிர்த்து நிற்கும் சக்தி குன்றும். க்ஷயரோகிகளுக்குக் கொழுப்பு மிக முக்கியம். கொழுப்புச் சத்து குறைந்து விட்டால் நோயின் தன்மை அதிகப்படும்.

கொழுப்பு அதிகப் பட்டாலும் அவதிதான். இழையங்களில் அதிகம் சேகரிக்கப்பட்டு உடல் கனத்து விடும். அதுவும் வயிறு, புருஷ்டம் இவ்விடங்களில்தான் அதிகம் கொழுப்பு சேரச் சௌகரியமான இடம். சிறிது சுகவாசமாய் இருப்பவர்களுக்கு இந்த இடங்கள் பருத்து விடும். இவ்விடங்கள் உழைப்பு அதிகமில்லாத இடமாகையால் கொழுப்பு சுலபமாய் அவ்விடங்களில் சேர ஏதுவாகின்றது.

அதிகமான கொழுப்பு சம்பந்தமான உணவு உண்டாலும் உடல் கனக்கும், ஜீரணம் கெடும். கொழுப்பை ஜீரணிக்கப் பித்த நீர் அவசியம். அளவுக்கு மீறிக் கொழுப்பை உபயோகித்தால் போதுமானபடி பித்த நீர் கிடைக்காமல் ஜீரணமாகத் தாமதமாகும். அதனால்தான் கொழுப்பு சம்பந்தமான ஆகாரங்களைப் புசித்தால் பசி எடுக்க அதிக நேரமாகின்றது. ஆனால் இதைக் கவனிப்பார்தான் குறைவு. முன்பு சாப்பிட்ட உணவில் எவ்வளவு கொழுப்பு இருக்கின்றது! அதை ஜீரணிக்க எவ்வளவு நேரம் ஆகும்! இப்பொழுது பசி நன்கு எடுக்கின்றதா இப்பொழுது சாப்பிட வேண்டியது அவசியந்தானா! அல்லது பட்டினி போடலாமா என்று இம்மாதிரி எல்லாம் யோசித்துச் சாப்பிட்டால் பின் பிணி ஏது! நோய் ஏது! மருந்துதான் எதற்கு!

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது அற்றது போற்றி உணின்."

என்பது தெய்வ வள்ளுவரின் வாக்கல்லவா!

அப்படி ஒரு வேளைக்கு கொழுப்பு வஸ்துடன் அதிகமாகச் சாப்பிட வேண்டி ஏற்பட்டு விட்டால் அடுத்த நேரம் கொழுப்பில்லாத ஆகாரமாகவாவது சாப்பிட வேண்டும். அதுவும் நன்கு பசித்தால் தான் சாப்பிட வேண்டும். இல்லையானால் பட்டினி போட்டு விடுவது உத்தமம்.

சிலர் எல்லா வேளைகளிலும் கொழுப்பு சம்பந்தமான ஆகாரங்களையே அதிகம் சேர்ப்பார்கள். சிறிது சௌக்கியமுள்ளவர்கள் வீட்டில் இது சகஜமாய் நடக்கும். ஆனால் இவர்கள் நல்ல வாலிப வயதாய் இருக்கும்போது நன்றாய்த்தான் இருப்பார்கள். சிறிது வயதானதும் இவர்களுக்கு எதைச் சாப்பிட்டாலும் ஜீரணம் செய்துகொள்ள முடியாமல் ஆகிவிடும். விசம்படி கஞ்சிகூடச் சிலரால் அருந்த முடியாமல் போய் விடுவதும் உண்டு.

ஒரு நபருக்குத் தினசரி இரண்டு அவுன்ஸ் கொழுப்பு தேவையாகும். இந்த இரண்டு அவுன்ஸ் கொழுப்பை எவ்விதம் பெற முடியும்! மேலை நாட்டு உணவு வகையும், நம் உணவு வகையும் வேறுவிதமானது. அவர்கள் இரண்டு அவுன்ஸ் கொழுப்பு வேண்டுமென்றால், அதை வெண்ணெயாகவே ரொட்டியுடன் சாப்பிட்டு விடுவார்கள். நமது நாட்டில் அப் பழக்கம் கிடையாது. எனவே நமது உணவுப் பழக்கங்களுக்கேற்ப நமக்கு வேண்டிய கொழுப்பு சரிவர சேருகின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும். முதலில் பருப்பு சாதத்தில் நெய் போட்டுச் சாப்பிடும் பழக்கம் நமக்கு உண்டு. தாளிப்பு வகைகளில் சிறிது சேரலாம். மற்றும் இட்டிலி, தோசை, பூரி, சப்பாத்தி இவைகளிலும் சேர்த்துக் கொள்கிறோம்.

எனவே, சுமாராக இரண்டு அவுன்ஸ் கொழுப்பு இவ்வகைகளில் கிடைக்கப் பார்த்துக்கொண்டால் போதும். ஆனால் நமது நாட்டு மக்களில் நூற்றுக்கு எண்பது பேர்கள் வரை என்றுகூடச் சொல்லலாம், இந்த இரண்டு அவுன்ஸ் கொழுப்பைக் கூடப் பெற முடியாமல் இருக்கின்றனர். வறுமை மிகுந்த நாடு. அநேக குடும்பங்களில் சாதாரணமாய் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெயே போதுமான அளவு உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். வெண்ணெய், நெய்யைப் பற்றி அவர்களிடம் சொல்லுவதில் யாது பயன்! அதனால்தான் அவர்கள் வறுமையுடன்கூட நோய்களை எதிர்த்துத் தாங்கும் சக்தியின்றி நலிந்து போகிறார்கள்.

ஒரு பக்கம் இம்மாதிரி மக்கள் வாடினாலும், ஒரு பக்கம் எல்லா வேளைகளிலும் கொழுப்பு வஸ்துக்களாகவே உபயோகித்து, அதனால் கஷ்டப்



ஒருவர்:—ஐயா, இதில் ஒரு கையெழுத்துப் போட்டுக் கொடுங்கள்.

எம். எல். ஏ.:—நான் இதுவரை மூன்று கையெழுத்துப் போட்டிருக்கிறேன். மூன்றும் விற்றுவிட்டன. இனி என்னால் கையெழுத்துப் போட முடியாது!

ஒருவர்:—அடாடா! இது மகஜர் அல்ல! பெரிய மனிதர்கள் கையெழுத்துக்களைச் சும்மா சேர்த்து வைக்கும் கையெழுத்துப் புஸ்தகமாக்கும்!

படும் மக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்நிலை மாறி ஏழை மக்களும் வேண்டிய உணவு போஷணை அடைந்தால்தான் மக்கள் ஆரோக்கியமாய் இருக்க முடியும்.

ஏதோ விசேஷ நாட்களில் பல காரணங்களால் அதிகக் கொழுப்புச் சத்து சாப்பிட நேரிடலாம். ஆனால், அதை மறு நாளில் கவனம் செலுத்திக் குறைத்துக் கொள்ள வழிவகை தேட வேண்டும். அப்படிக்கின்றி கண்டபடி சாப்பிட்டால் வரும் கெடுதிகளைத் தடுக்க முடியாது. வந்ததைப் பிறகு அனுபவித்துத் தான் தீரவேண்டும்.

ஒரு நாளைக்கு இரண்டு அவுன்ஸ் கொழுப்புத் தானே வேண்டியது என்று நெய்யையோ, வெண்ணெயையோ அப்படியே தனித்து இரண்டு அவுன்ஸ் விழுங்க வேண்டிய அவசியமில்லை. மேற்சொன்ன விதங்களில் தானாகச் சேர்ந்து விடும். அதைவிடக் குறையாமல் பார்த்துக் கொண்டால் போதுமானதாகும்.

மற்றும் கொழுப்பின் அளவு தேக உழைப்பை அனுசரித்தும் சேர்க்க வேண்டியதாய் இருக்கும். இரண்டு அவுன்ஸ் என்பது சாதாரணமாய் உட்கார்ந்தோ, இலேசாய் நடமாடி வேலை செய்பவர்களுக்கே ஆகும். சரீரத்தை உழைத்து வேலை செய்பவர்கள் இரண்டு அவுன்ஸ் முதல் நான்கு அவுன்ஸ் வரை சேர்க்கலாம். இதை அவர்கள் அதிகமாய் உண்ணும் ஆகாரத்தின் மூலமாகவும் கிடைத்து விடும். அவர்களும் தனித்துச் சாப்பிட வேண்டிய அவசியமில்லை.

கொழுப்பென்பது வெண்ணெய், நெய், இவைகளாகும். நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், இவைகளும் கொழுப்பைச் சேர்ந்தவையே. இவை தவிர, மற்ற எத்தனையோ வித எண்ணெய்களுண்டு. குசும்பா எண்ணெய் சாதாரண மிட்டாய்க் கடைகளில் பட்சணங்களுக்கு உபயோகிப்பார்கள். இன்னும் என்னென்னமோ எண்ணெய் வகைகள் உண்டு. லாபத்துக்காக இவைகளை உணவு தயாரிப்பவர்கள் உபயோகிப்பார்கள். வியாபாரிகளும் ஒன்றோடு ஒன்றைக் கலந்து விற்பனை செய்கின்றார்கள். எதுவும் அப்பட்டமான, அசலாய்க் கிடைப்பது கஷ்டமாய் இருக்கின்றது. பொதுமக்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

கொழுப்புகளில் வைடமின் "ஏ"யும், "பி"யும் நிறையச் சேர்ந்த கொழுப்புத்தான் உயர்ந்த ரகக் கொழுப்பு ஆகும். இந்த வைடமின்கள் இல்லாத கொழுப்பு மிகவும் மட்ட ரகமானது. உயர்ந்த கொழுப்பு பால், பாலின் ஆடை, வெண்ணெய், பால்கோவா, முட்டையின் மஞ்சட் கரு ஆகியவற்றில் நிறைய இருக்கின்றன.

இவை தவிர, மிருகங்களிலிருந்து அதாவது பன்றி, மாடு, ஆடு போன்றவைகளிலிருந்து எடுக்கப்படும் கொழுப்பு மட்டரகமானது. அதில் எந்த வைடமின் சத்துக்களும் கிடையாது. தவிர சமையலுக்கு உபயோகித்து வரும் சுத்தம் செய்யப்பட்ட கொழுப்பு வகைகள் அதாவது இப்பொழுது நமது நாட்டில் செலவாகி வரும் தாவர நெய் வகைகளும் மட்டரகமான கொழுப்பில் சேர்ந்தவையே. இவைகளிலும் வைடமின்கள் கிடையாது. ஆகையால்தான் இதில் 'ஏ' 'பி' வைடமின்கள் கலந்து விற்பனை செய்ய வேண்டும் என்று சர்க்கார் சொல்லுகிறார்கள்.

மேல் நாடுகளில் கூட இம்மாதிரி இருந்த கொழுப்பு வகைகளில் வைடமின்கள் சேர்த்து, இப்பொழுது வெண்ணெய்க்குச் சமானமாகச் செய்து விட்டார்கள். எனவே, லாபமே பிரதானமாய்க் கருதாது, மக்களின் நலனே பிரதானமாகக் கருதும் எந்த அரசாங்கமும் உடனடியாக இம்மாறுதலைச் செய்தே ஆகவேண்டும். கண் கோளாறுகள்; கண் பார்வை இழந்து விடுவது ஆகியவையெல்லாம் வைடமின் "ஏ" சத்துக் குறையின் காரணம்தான். அந்தச் சத்து கொழுப்பில் தான் அடங்கி யிருக்கிறது.

இப்பொழுது அநேகமாக நெய்யின் ஸ்தானத்தை வைடமின்கள் இல்லாத தாவர நெய்கள் வகிக்கின்றன. அசல் நெய்யாகவும் கிடைக்க முடியாதபடிக்குத் தாவர நெய்யைக் கலந்து விடுகின்றனர். மக்கள் இம்மாதிரி நெய்களையும், தாவர நெய்களையும் வாங்கி உபயோகிப்பதால் கொழுப்பினால் அடையவேண்டிய "ஏ" வைடமின் அடைய முடியாமல் போய் விடுகின்றது. உண்மை அறியாத மக்கள் ஏமாற்றப் படுகின்றனர். மக்கள் உபயோகிக்கும் கொழுப்பு வஸ்து நல்ல சத்து பொருந்தியதாய் இருக்க வேண்டியது மிக மிக அவசியமானது.

மாமிசக் கொழுப்பு வயிற்றில் நாடியை உற்பத்தி செய்யக் கூடியது. மீன் எண்ணெய் ஓரளவு நல்லதுதான். ஆனால் அதையே அமிதமாக உபயோகித்தால் பலவிதமான வயிற்றுக் கோளாறுகள் வந்து விடுகின்றன.

தவிர, மூளை வேலை அதிகம் செய்பவர்களுக்குப் பசும் வெண்ணெய், நெய் மிக சிரேஷ்டமானது. பட்சணங்களும் நெய்யினால் செய்து சாப்பிடுவது நல்லது. பசும் வெண்ணெய், நெய் கிடைக்காமற் போனால் எருமை வெண்ணெய், நெய் உபயோகிக்கலாம். நல்லெண்ணெயிலோ, மற்ற எண்ணெய்களிலோ, பட்சணம் செய்வதால் ஜீரணம் அவ்வளவாகச் சரியாகாது. சரீர உழைப்பு உள்ளவர்களுக்கு எண்ணெயில் செய்த பலகாரங்கள் சுலபமாய் ஜீரணமாய் விடும். (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras



க்ஷணத்தில் நுரையும் ஸன்லைட் அடித்துத் துவைக்காமலே
வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்
SUNLIGHT
SOAP
ஸன்லைட் சோப்
துணிகளைக் காப்பாற்றுகிறது, சிரமத்தைக் குறைக்கிறது, பணத்தை மிச்சப்படுத்துகிறது

S. 220-50 TM

**REGD. No. M. 4392**

*Registered as a newspaper in Ceylon*


## சந்தோஷமானதும்
## வெற்றிகரமானதுமான
## ஒரு கல்யாணம்



டால்டா வனஸ்பதி உபயோகித்துச் சமைத்தால் எந்த விருந்தும் சிறப்பாய் இருப்பது நிண்ணம். எவ்வித உணவு தயாரிக்கவும் உகந்த ஒரு ஆதர்ச சமையல் கொழுப்பு டால்டா. காற்றுப்புகாத சீல்செய்த டின்னில் புதிதாகவும், சுத்தமாகவும், ஆரோக்கியமளிப்பதாகவுமிருக்கும் டால்டா கல்யாண வைபவங்களுக்கு ஒரு இன்றியமையாத வஸ்து. மேலும் இது மிகவும் சிக்கனமானதும்கூட.

ஒருகல்யாணவிருந்திற்கு திட்டம்போடுவதுஎப்படி?
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால்பெட்டி நெ. 353, பம்பாய் 1




# டால்டா
## வனஸ்பதி

HVM. 193-50 TM